பயிரிடாத் தாவரங்களின் பயன்பாடுகள்

(கொல்லிமலை–ஓர் ஆய்வு)

முனைவர் ஆ.இராசேந்திரன்



தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

பயிரிடாத் தாவரங்களின் பயன்பாடுகள்

(கொல்லிமலை-ஓர் ஆய்வு)

முனைவர் ஆ. இராசேந்திரன்

இணைப் பேராசிரியர்

தொல்லறிவியல் துறை

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் 613 005

ISBN : 81-7090-352-1

தமிழ்ப் பல்கலைக்கழக வெள்ளி விழா ஆண்டு வெளியீடு - 9

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 291

திருவள்ளுவராண்டு 2036 - ஐப்பசி - நவம்பர் 2005

நூல்	:	பயிரிடாத் தாவரங்களின் பயன்பாடுகள் (கொல்லிமலை-ஓர் ஆய்வு)
ஆசிரியர்கள்	:	ஆ. இராசேந்திரன்
மொழி	:	தமிழ்
பொருள்	:	அறிவியல்
பதிப்பு	:	முதற்பதிப்பு
பக்கம்	:	156
தாள்	:	டி.என்.பி.எல்.மேப்லித்தோ 18.6 கிலோ
அளவு	:	டெம்மி 1/8
நூற்கட்டுமானம்	:	சாதாக்கட்டு
விலை	:	உரூ.70/-
படிகள்	:	1000
அச்சு	:	தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம் தஞ்சாவூர்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

முனைவர் சி.சுப்பிரமணியம்

துணைவேந்தர்

அணிந்துரை

உலகில் அறிவியல் வளர்ச்சியின் காரணமாக உணவு உற்பத்தி மிகுந்து வரும் நிலை ஒருபுறம் இருப்பினும் அன்றாட வாழ்வில் அடிப்படைத் தேவையான உணவுகூடக் கிடைக்காத மக்களின் பெருக்கமும் ஒருபுறம் உயர்ந்து கொண்டே வருகின்றது. மக்கள் தொகைப் பெருக்கத்திற்கு ஈடாக உணவு உற்பத்திப் பெருக்கம் அமையவில்லை என்பதையே அண்மை ஆய்வுகள் புலப்படுத்துகின்றன. சாதாரண மக்களின் வறுமையைப் போக்கவும் ஊட்டச்சத்துள்ள உணவினை அனைவருக்கும் வழங்கவும் வேண்டுமென்பதை அனைத்து அரசினரும் உணர்ந்து செயலாற்றி வருகின்றனர்.

உணவுதானிய உற்பத்திப் பெருக்கத்திற்கு மரபணு மாற்றங்கள் மிகவும் தேவையாகின்றன. மனிதர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலும் மரபணு ஆதாரங்கள் முதலிடம் பெற்றுள்ளன. அதிலும் பயிரிடாத் தாவரங்களின் மரபுவழி அறிவினைப் பெருக்குவது இன்றையத் தேவையாகிறது. இவற்றை அடிப்படையாகக் கொண்டு தொல்லறிவியல் துறைப் பேராசிரியர் முனைவர் ஆ. இராஜேந்திரன் அவர்கள் எழுதியளித்துள்ள பயிரிடாத் தாவரங்களின் பயன்பாடுகள் என்னும் தலைப்பிலான இந்நூலை வெளியிடுவதில் தமிழ்ப் பல்கலைக்கழகம் பெருமை கொள்கிறது.

வளர்ந்துவரும் நாடுகளில், பெரும்பான்மையான மக்கள் மருந்தாகும் உணவுப் பொருள்களைத் தேர்ந்தெடுத்து உண்டு

வருவதையும் மரபுவழி மருத்துவத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருப்பதையும் காண்கிறோம். மரபுவழி மருத்துவத்தில் பயன்படுத்தப்படும் தாவரப் பொருள்கள் எளிதாகக் கிடைப்பவை, குறைந்த விலையிலானவை, மிகுதியான பக்க விளைவுகளை அளிக்காதவை என்பது தெளிவாகும். மேலும், பலவிதமான விலையுயர்ந்த நவீன மருந்துகள் மரபுவழி மருத்துவ அறிவியல் அறிவின் அடிப்படையின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுப் பயன்பாட்டிலுள்ளன.

இந்தியாவில், குறிப்பாகத் தமிழ்நாட்டில் கொல்லிமலை போன்ற பலவிடங்களில் அரிய மூலிகைகள் தானாகவே வளர்ந்து பயனளித்து வருகின்றன. இவற்றுள், பல உணவிற்காகவும் மருந்திற்காகவும் பயிரிட்டும் வளர்க்கப்படுகின்றன. இவ்வகையில், மருந்தாகும் தாவரப் பகுதிகள், மருந்தாக்கும் செயல்முறைகள், மருந்தளிக்கும் விதங்கள் போன்ற பல தகவல்களை இந்நூலாசிரியர் மிகத் திறமையாகச் சேர்த்து எழுதித் தொகுத்தளித்துள்ளார்.

மனிதர்களுக்கும் கால்நடைகளுக்கும் ஏற்படும் பல்வேறு நோய்களைக் குணப்படுத்த 3500க்கும் மேற்பட்ட தாவரங்கள் மருந்தாகப் பயன்படுத்தப்படுகின்றன என்பதையும் அவ்வாறு பயன்தரும் மூலிகைகளின் பெயர் மற்றும் அவை தீர்க்கும் நோய்களையும் இனங்கண்டு இந்நூலில் சுட்டிக்காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இதற்காக இந்நூலாசிரியர் கொல்லிமலையைத் தேர்வு செய்து தரவுகளைத் தொகுத்துள்ளார்.

மூலிகைத் தாவரங்களின் மருத்துவப் பண்புகளை நன்கறிந்த மருத்துவர்களிடமும் பழங்குடி மக்களிடமும் தரவுகள் சேகரிக்கப் பட்டுள்ளன. சங்கத் தமிழ் நூல்களில் கூறப்பெறும் கொல்லி மலையின் சிறப்புகள், அங்குள்ள பழங்குடி மக்களின் சிறப்புகள், அவர்களின் பழக்க வழக்கங்கள், அங்கு வாழ்ந்த சித்தர்களின் வரலாறுகள், அம்மலையில் காணப்பெறும் அதிசய மூலிகைச் செல்வங்கள் பற்றி விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

இன்றைய நாகரிக மற்றும் நகர்ப்புற வளர்ச்சியால் காடுகள் பெரிதும் அழிக்கப்பட்டு வருகின்றன. இவற்றால் பலவிதமான மருத்துவத் தாவரங்களும் அழிந்து வருகின்றன. இந்நிலை தவிர்க்கப்படவேண்டும். மனிதனுக்கும் கால்நடைகளுக்கும் மருந்தாகவும் உணவாகவும் விளங்கக்கூடிய மருத்துவத் தாவரங்களின் பயன்பாடுகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல் வேண்டும். இவற்றால் நம்நாட்டு மக்கள் நல வளம் பெருகுவது மட்டுமல்லாமல் இவற்றை அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன்மூலம் பெருமளவு அன்னியச் செலாவணியும் ஈட்டலாம்.

நாட்டிலுள்ள மலைகளிலும் காடுகளிலும் இயற்கையாக வளர்ந்து வரும் மருத்துவத் தாவரங்கள், உணவுத் தாவரங்கள் அனைத்தையும் முழுவதுமாக இனங்கண்டு பாதுகாத்தல் வேண்டும். இவ்வகையில் இத்தகைய ஆய்வு நூல்கள் வெளிவருவது வரவேற்கத்தக்கதாகும். பேரா. முனைவர் ஆ.இராசேந்திரன் அவர்கள் இதே போன்று பல சிறப்பான கள ஆய்வுகளை மேற்கொண்டு அவற்றை நூலாக்கம் செய்தளிக்க வேண்டுமென விழைகிறேன்.

தொன்மை மிக்க பழங்குடி இனமக்கள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்பவர்களுக்கும், தாவரவியல் ஆய்வாளர்களுக்கும், மருத்துவத் தாவர ஆராய்ச்சியாளர்களுக்கும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆர்வலர்களுக்கும் இந்நூல் பெரும் பயனிக்கும் என நம்புகிறேன்.

இந்நூலை அழகுற அச்சேற்றித் தமிழ் கூறும் நல்லுலகிற்கு அளித்த தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்புத்துறை இயக்குநர் அவர்கட்கும் பதிப்புத்துறையைச் சார்ந்த அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த வாழ்த்துகள்.

(சி. சுப்பிரமணியம்)

பொருளடக்கம்

முன்னுரை	- 01
பயிரிடாத் தாவரங்களின் பயன்பாடுகள் - ஒரு மீள் பார்வை	- 04
ஆய்வின் விவரங்கள்	- 23
தமிழ் நூல்களில் கொல்லிமலையின் சிறப்புகள்	- 28
காலங்கிநாதர்- கொல்லிமலை இரகசியம்	- 45
கொல்லிமலையின் மூலிகைச் செல்வங்கள்	- 49
கொல்லிமலையின் இயற்கை அமைப்பு	- 60
மருத்துவத் தாவரங்கள்	- 69
தாவரங்களின் முறையான தொகுப்பு	
மானிட மருத்துவத் தாவரங்கள்	- 97
கால்நடை மருத்துவத் தாவரங்கள்	- 114
உணவுத் தாவரங்கள்	- 120
முடிவுரை	- 131
இணைப்பு	
பட்டியல் - 1 மருந்தாகும் தாவரங்கள்	- 133
பட்டியல் - 2 உணவாகும் தாவரங்கள்	- 140
துணைநின்ற நூல்களும் வெளியீடுகளும்	- 143

முன்னுரை

இந்தியாவில் ஏறத்தாழ 400 பல்வேறு பழங்குடியினத்தைச் சேர்ந்தவர்கள் உள்ளனர். இவர்கள் இந்தியாவின் மக்கட்தொகையில் 7 விழுக்காடாக உள்ளனர். தமிழ்நாட்டில் இவர்களின் எண்ணிக்கை 0.75 விழுக்காடாக இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இவர்களில் இருளர் (Irular), காணிக்கர் (Kaanikkar), குரும்பர் (Kurumpar), காட்டுநாயக்கர் (Kattunaickar), கோதர் (Kothar), மலையாளி (Malayali), பளியன் (Palliyan), பணியர் (Paniyar), சோழிகர் (Sholigar), தோடர் (Thodar) மற்றும் பிற இனத்தவர்களும் அடங்குவர். இம்மக்களே தமிழகத்தின் தொன்மை வாய்ந்த பூர்வீகப் பழங்குடியினர் என ஆய்வாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

பழங்குடி இனத்தவர்களில் ஏராளமானவர்கள் இன்றளவும் நாடோடிகளாகவோ, ஓரளவுக்கு நாடோடிகளாகவோ தனித்துள்ள மலைப்பகுதிகளிலும், பள்ளத்தாக்குகளிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் பெரும்பாலும் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளிலும், கிழக்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளிலும் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் தாங்கள் வாழும் காட்டுப்பகுதிகளில் கிடைக்கும் எண்ணற்ற தாவரங்களையும் விலங்குகளையுமே முழுமையாக நம்பியுள்ளனர். இம்மக்கள் அனைவரும் தங்கள் சூழலில் காணப்படும் தாவரங்களையும் விலங்குகளையும் எப்போது, எப்படி சேகரிப்பது என்பதையும் அவற்றைப் பயன்படுத்தும் முறைகளையும் நன்கு அறிந்தவர்கள். இவர்கள் மட்டுமல்லாது, மலைப்பகுதிகளில் வாழும் பிற இனத்தவர்களும், நாட்டுப்புற மக்களும் இவ்வறிவினை பெற்றிருக்கின்றனர். மேலும், நகர்ப்புறங்களில் வாழும் மக்களிடையேயும் இவ்வறிவானது இன்றளவும் பொதிந்து காணப்படுகிறது.

உலகில் பல்வேறு நாடுகளில் நடத்தப்பட்ட ஆய்வுகள் மற்றும் அளவீட்டின்படி, இன்றைய மருந்தறிவியல் முறைப்படி

தயாரிக்கப்பட்ட செயற்கை மருந்துகள், வளர்ந்துவரும் நாடுகளில், அங்கு வாழும் மொத்த மக்கள் தொகையில் ஒரு சிறு பகுதியினரால் மட்டுமே (அதாவது 30-50 விழுக்காடு) பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஏனைய பெரும்பாலானோர் தங்களை உடலைப் பேணிப் பாதுகாக்க எண்ணற்ற தாவர இனங்களையும், சில விலங்கினங்களையும் அவற்றின் உற்பத்தி பொருட்களான பால், தயிர், நெய், வெண்ணெய் மற்றும் மோர் போன்றவற்றையும் பயன்படுத்துகின்றனர். இப்பரம்பரைப் பழக்கங்களும், பண்பாடும் சுற்றுச்சூழலின் சமநிலைக்குத் தக்கவாறு அமைந்துள்ளமை நன்கு தெளிவாகுகின்றன.

மரபுவழி மருத்துவத்தில் பயன்படுத்தப்படும் தாவரங்களும், விலங்குகளும் மிக எளிதாகக் கிடைப்பதோடு, மிகக்குறைந்த விலையிலும் கிடைக்கின்றன. மேலும் இம்மருந்துகள் உடல்நலத்தை நன்கு பேணி பாதுகாப்பதோடு, எந்தவித பக்கவிளைவுகளையும் (Side effects) ஏற்படுத்துவதில்லை. இவ்வகை மருந்துகளைவிட செயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட மருந்துகள், அதிக விலையுடையதாக இருப்பதால், அனைவராலும் வாங்கி பயன்படுத்த முடிவதில்லை. இம்மருந்துகள் மரபுவழி மருந்துகளைவிட அதிக வீரியத்துடன், விரைவில் நோய் தீர்க்கும் ஆற்றலைக் கொண்டிருந்தபோதிலும், சில ஆபத்தான, கொடிய பக்கவிளைவுகளையும் ஏற்படுத்தும் தன்மையை தன்னகத்தே கொண்டுள்ளன. ஆனால் மரபுவழி மருந்துகள் அதிக பக்கவிளைவுகளையோ அதிக சிரமங்களையோ மனித இனத்திற்கு ஏற்படுத்துவதில்லை.

இப்போது பயன்பாட்டிலுள்ள ஏராளமான மருத்துவத் தாவரங்கள் அவர்களின் மரபுவழி அறிவின் விளைவால் இருப்பவையே. இம்மரபுவழி மருந்தானது மேற்கத்திய மருந்துகளின் இடத்தை இன்றுவரை முழுமையாகக் கைகொள்ளாவிட்டாலும், பல நாடுகளில் மனித நலனுக்குக் கணிசமான அளவில் தன் பங்கை அளித்து வருகின்றன. விலையுயர்ந்த மருந்துகளாகக் கருதப்படும் அட்ரோபின் (Atropine), ரிசர்பின் (Reserpine), கொயினின் (Quinine) மற்றும் மார்பின் (Morphine) போன்றவை மரபுவழி மருத்துவ அறிவியல் அறிவின் அடிப்படையின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டவையே ஆகும்.

நம் நாட்டுத் தாவரங்கள் மட்டுமல்லாது அயலக அல்லது அன்னிய நாடுகளிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்ட அல்லது குடியேறி நம் நாட்டுக்குரியதாக்கப்பட்ட சில தாவரங்களும் கூட நமது மரபுவழி மருத்துவத்தை ஆக்கிரமித்துள்ளன. அவற்றுள் ஆர்ஜிமோன் மெக்சிகானா (Argemone mexicana - Papavaraceae) என்னும் அமெரிக்க நாட்டைச் சேர்ந்த தாவரத்தின் வேர், பால் (Latex) மற்றும் விதைகள் பால்வினை (STD) நோயின் கொப்புளங்களைக் குணப்படுத்தப் பயன்படுத்தப்படுகின்றன. அதே நாட்டைச் சேர்ந்த Bixa Orellana (Bixaceae) என்னும் தாவரத்தின் பட்டை காய்ச்சலுக்கு மருந்தாகப் பயன்படுகிறது. மேலும், Calotropis gigantea (Asclepiadaceae)வின் வேர்ப்பட்டை பாம்புக்கடிக்கு மருந்தாகப் பயன்படுகிறது.

இந்தியாவில் பெரும்பான்மையான பகுதிகளில் வேகமாக மாறிவரும் தட்பவெப்ப நிலையாலும் வளர்ந்துவரும் மக்கட்தொகைப் பெருக்கத்தினாலும் பலதரப்பட்ட வளர்ச்சிப் பணிகளாலும் மனிதவினத் தாவரவியல் மரபுகள் சீர்குலைந்து வருகின்றன. மரபுவழி அறிவு, உலகம் முழுவதும் தினந்தோறும் அழிந்துவரும் தாவர இனங்களைக் காட்டிலும் மிக வேமாக அழிந்து வருகின்றது. அவ்வழிவின் போக்கினைக் குறைத்திட, முழுமூச்சோடும் ஊக்கமுடனும் இவ்வாய்வில் பங்கெடுத்து, இவ்வறிவிற்கு அறிவியல் அடையாளத்தையும், மிகுதியான தகவல்களையும் கொடுக்க வேண்டியது இன்றியமையாததாகிறது.

இந்தவகையில் கொல்லிமலைப் பகுதியில் மனிதனால் பயிரிடப்படாத இயற்கையாக வளர்ந்து காணப்படும் தாவரங்களில் உணவிற்காகவும், மருந்திற்காகவும் பயன்படுத்தப்படும் தாவரங்களின் இனங்கண்டறியப் பட்டுள்ளன. மேலும், மருந்தாகும் தாவரப் பகுதிகள், மருந்தாக்கும் செயல்முறைகள், மருந்தளிக்கும் விதங்கள் குறித்த தகவல்களும் முறையாக சேகரித்தளிக்கப்பட்டுள்ளன.

பயிரிடாத் தாவரங்களின் பயன்பாடுகள் ஒரு மீள் பார்வை

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கும் மேலாக மனிதர்கள் தங்களது பெருகிவரும் தேவைகளுக்கு தாவரப் பெரும் (Plant kingdom) பிரிவினையே முழுமையாக நம்பியுள்ளனர். மனிதர்களின் எண்ணற்ற தேவைகள் மட்டுமின்றி அவர்களது கால்நடைகளின் தேவைகளையும் பூர்த்தி செய்கின்றன. தங்களைச் சுற்றியுள்ள தாவரயினங்களில் உணவாக, மருந்தாக, பிற தேவைக்கு உகந்த தாவரங்களை நன்கு அறிந்திருந்தனர். இதற்காக இம்மக்கள் பல்வேறு தாவரயினங்களை மிகப்பெரிய அளவில் கள ஆய்வு, பரிசோதனை மேற்கொண்டிருக்க வேண்டும். இன்று உணவாக ஏற்கவொன்னா எண்ணற்ற தாவரங்களை உணவாக உண்ணும் வழக்கத்தையும் கொண்டிருந்தனர். உணவாக மட்டுமின்றி, தங்களது உடலைப் பேணிப் பாதுகாக்கும் மருந்தாகும் தாவரங்களையும் நன்கு அறிந்திருந்தனர். மேலும், இத்தாவரங்களின் வளரியல்பு, உணவாகும், மருந்தாகும் தாவரப் பகுதிகள், அவற்றை சேகரிக்கும் முறைகள், கிடைக்கும் பருவ காலங்கள் போன்றவற்றையும் நன்கறிந்திருந்தனர். இவ்வாறு மனிதவினத்திற்கும், தாவரத்திற்கும் இடையே இயற்கையாகவும், பரம்பரையாகவும் உள்ள உறவினைப் பற்றி விளக்குவதை "*மனிதவினத் தாவரவியல்*" (Ethnobotany) என்று அழைக்கப்படுகிறது.

மனிதவினத் தாவரவியலின் வளர்ச்சி (Development of Ethnobotany)

Power (1873) என்பார், தொன்முதுமக்கள் உணவு, மருந்து, ஆடை, அழகுப்பொருள் போன்றவற்றிற்காகப் பயன்படுத்திய அனைத்துவகைத் தாவரங்களைப் பற்றி எடுத்து விளக்குவது "தொன்முதுமக்கள் தாவரவியல்" (Aboriginal Ethno-botany) என்ற சொல்லால் அழைத்தார்.. Richard Evans Schltes (1995)இல் இம்மனிதவினத் தாவரங்களுக்கு விரிவான விளக்கம் அளிக்க வேண்டுமெனக் கருதி, "மனிதன் தாவரப் பொருட்களின் தன்மையினைக் கண்டறிந்த முறைகள்,

அவற்றை கையாண்ட விதங்கள், தங்கள் வாழ்விற்கு ஆதாரங்களாகக் கொண்ட பொருட்கள் (substances), மற்றும் அத்தொன் முதுமக்களின் பொருத்தமான கருத்துக்களை (relevant concepts) உள்ளடக்கிய குறிப்பிடத்தக்க நிகழ்வுகள் (phenomena) போன்றவற்றை ஆய்வது என விளக்கமளித்தார்.

Cotton *(1996)*இல், மனிதவினத் தாவரவியலைப் பற்றி நிலவிய பல்வேறு கருத்துக்கள், விளக்கங்கள் போன்றவற்றை மறுசீராய்வு செய்து கீழ்க்கண்டவாறு விவரித்துள்ளார்.

1. தொன் முதுமக்கள் பயன்படுத்திய அனைத்துவகைத் தாவரங்களைப் பற்றி ஆய்வு செய்தல்.
2. பயன்கள் மட்டுமின்றி, அவர்களின் வழக்கங்கள் (customs) சமய சடங்குகள் (rituals) போன்றவற்றையும், அவற்றால் அச்சூழலில் ஏற்படுத்திய பாரம்பரிய கருத்துப்பதிவுகள் பற்றியும் ஆராய்தல்.
3. மலைவாழ் மக்கள் மட்டுமின்றி, தாவரங்களைப் பற்றிய பாரம்பரிய அறிவினை ஆராய்தல்.
4. மனிதர்களுக்கும், தாவரங்களுக்கும் இடையேயுள்ள நேரிடையான தொடர்பினை ஆராய்தல்.
5. பயனுள்ள தாவரங்களை, வணிகப் பொருளாகவும், விலைப் பொருட்களாக்கப்படுவதற்கு [illegible] ஆய்வு செய்தல்.
6. நாட்டுப்புற மக்களையும் அவர்களைச் சுற்றியுள்ள தாவரங்களுக்கு இடையேயுள்ள தொடர்பினை ஆர்ராய்வது.
7. மனிதர்கள், தாவரங்கள் அவர்களின் கால்நடைகளுக்கு மிடையேயுள்ள இயற்கையாகவும், நேரிடையாகவும் உள்ள தொடர்பினை அறிவதாகும் என்பன போன்றனவாகும்.

அறிவியல் முறைகளின் தோற்றம் (Origin of Scientific Methods)

பறவைகளும், விலங்குகளும் குறிப்பிட்ட சிலவகைத் தாவரங்களை உணவாக எடுத்துக்கொண்டு பிறவற்றை தவிர்ப்பதை தொடக்ககால மனிதர்கள் உற்றுநோக்கியிருக்க வேண்டும். உணவிற்கு மட்டுமின்றி பல்வேறு நோய்களைப் போக்கி நலம் பயக்கும் தாவரங்களையும், நச்சுத்தன்மைக் கொண்ட தாவரங்களையும் உற்று நோக்கியும்,

களப்பரிசோதனை மூலம் உறுதிப்படுத்தியும் கண்டறிந்திருக்க வேண்டும். இவ்வாறு கண்டறிந்த உணவாகும் தாவரங்களில் சில சத்துமிக்கவையாக இல்லையெனினும், சுவைமிக்கதாகவும், எளிதில் சீரணிக்கக் கூடியதாகவும், உணவின் தரத்தை காக்கக் கூடிய தன்மையினைக் கொண்டதாகவும், ஏனைய பிற தாவரங்கள் கிட்டத்தட்ட இதே பண்பினைக் கொண்டிருந்தாலும், மனிதனின் உடலையும், மனதையும் நன்கு செயற்படுத்தும் ஆற்றல் கொண்டதாக இருந்தமையையும் உணவாகவும், மருந்தாகவும், பிற தேவைக்கும் ஏற்ற தாவரங்களின் தனித்தன்மையை வெளிப்படுத்தியிருக்க வேண்டும். இவ்வாறு அறிவியல் முறைகளே தங்கள் வாழ்வாகவும், தங்கள் வாழ்வே அறிவியல் முறையாகவும் கொண்டு விளங்கின என்றால் அது மிகையாகாது.

தங்களது உணவு மருந்து ஆகியவற்றின் ஆதாரமாக ஏதேனும் ஒரு தாவரவினம் கண்டறியப்படுமானால், அவற்றைப் பெருக்கும் வழிமுறைகள், பரப்பும் விதங்கள், அக்குறிப்பிட்ட இனத்தை அரியனவாக்கும் காரணிகள், அவற்றிலிருந்து பாதுகாக்கும் முறைகள் போன்றனவற்றையும் அறிந்திருந்தனர்.

முறைபடுத்தப்பட்ட அறிவியல் அறிவும் தொடர்ச்சியும்

தொடக்கக்கால மக்களில் ஆண் பெண் இருபாலரும் தாவரங்களின் பண்புகள் பற்றி நன்கு அறிந்திருந்தனர். தாவரங்களின் பயன்கள், பண்பாட்டு முறைகள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகவே வாய்வழியாக அறியப்பட்டும் பின் தொடரப்பட்டும் வந்தன. இத்துடன் இப்பயனுள்ள செய்திகளைத் தங்கள் முன்னோர்களால் வண்ணத்தால் உருவங்கள் அல்லது வடிவங்கள் வாயிலாக வெளிப்படுத்தியமையிலிருந்தும், அவர்கள் பயன்படுத்திய கருவிகள், தட்டுமுட்டுக்கலங்கள், ஆயுதங்கள், இசைக்கருவிகள் போன்றவற்றில் கீறல்களாக செதுக்கியும் வைத்துள்ள செய்திகள் வாயிலாகவும் அறியப்பட்டு வந்தன. தாவரங்களையும், அவற்றின் பயன்களையும் பயன்பாட்டு

முறையினையும் நன்கறிந்தமை யாலும் அவற்றைத் தொடர்ந்து பின்பற்றி வந்ததின் பயனே "அறிவியல் முறைகளின் முதல் படி" என்பது உண்மையாகும். பின்வரும் சந்ததியினருக்கு அவர்கள் விட்டுச்சென்ற உருவங்களும், எழுத்து ஆவணங்களும் இவ்வுண்மைக்கு சான்றாக அமைகின்றன. இவ்வாறு தோன்றிய அறிவியல் முறைகளை "முதல் முறைப்படுத்தப்பட்ட அறிவியல் அறிவு" என்ற நிலையை உருவாக்கியது. இவ்வாறாக, எழுத்து மொழிகளற்ற இம்மரபுவழி அறிவியல் அறிவே, இன்றைய அறிவியலின் முன்னோடியாகவும், மெதுவாக தொடர்ந்து முன்னேறிவரும் சமுதாய வளர்ச்சியிலிருந்தும் பிரிக்க முடியாத ஒரு கருவியாகவும் திகழ்கின்றன.

எழுத்தறிவென்பது வேளாண் தொழிலின் முன்னேற்றத்தின் அடிப்படையில் ஏற்பட்ட சமுதாயங்களின் அமைப்புகள், அச்சமுதாயங்களின் பல்வேறு தேவைகள் போன்றவற்றின் புறத்தூண்டுதலால் தோற்றுவிக்கப்பட்டதாகும். உண்மையில், அவர்களால் சேகரித்து வைக்கப்பட்ட அறுவடைப் பொருட்களைக் குறித்து வைப்பதற்கும், அவற்றை எவ்வாறு செயல்படுத்தவேண்டும் என்பதன் வழிவகையினையும் ஆவனப்படுத்தவே எழுத்துகள் தோற்றுவிக்கப்பட்டன.

தாவரங்களின் பயன்பாட்டு அறிவானது, ஒரு சமூகத்தில் வாழும் மக்களிடையே சீராக பரவியுள்ளன என்று சில சமயங்களில் தவறாக எண்ணப்படுகிறது. எனினும், ஆணுக்கும், பெண்ணுக்கும் பல்வேறு வயதினிடையேயும் தாவரங்களின் பயன்பாட்டு அறிவில் மிகப்பெரிய வேறுபாட்டினைக் கொண்டுள்ளது. பெண்கள் குறிப்பாக, குழந்தைகளுக்கு ஏற்படும் பலவித நோய்களையும் அவற்றைக் குணப்படுத்தும் முறைகள் பற்றியும், குழந்தையின் தோற்றம், பிறப்பு போன்றவற்றைப் பற்றியும், ஆண்கள், எலும்பு முறிவு, வெட்டுக்காயங்கள் மற்றும் காட்டுவிலங்குகளின் விஷக்கடிகள் இவற்றைக் குணப்படுத்தும் முறைகளைப் பற்றியும் அதிக அளவில் அறிந்துள்ளனர். மனிதனின் உணவுப் பழக்கம், சுகாதார மற்றும் வேளாண்மைத் தொழில் முறைகள், வாழ்வின் பிற கூறுகள், செயல்கள் என்றும் நிலையாக இருப்பவையல்ல.

இம்முறைகளில் ஏற்படும் அதிக அனுபவம், சூழ்நிலை, சமுதாய முன்னேற்றம், தொழில் முறைகள், நிலவும் தட்பவெப்பம் மற்றும் பிற காரணிகளால் இவ்வறிவானது தொடர்ந்து முன்னேறிய நிலையை அடைவனவாகும்.

மனிதர்களின் இவ்வறிவியல் முறைகள், அவர்களது பண்பாட்டுக் கூறுகளோடு பின்னிப் பிணைந்துள்ளதோடு, புராணக் கதைகளாகவோ, மாயாஜாலங்களாகவோ, சுற்றுச் சூழல் பற்றிய விளக்கங்களாகவோ வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அவர்கள் தாவரங்களின்மேல் வைத்துள்ள மதிப்புகள், நம்பிக்கைகள், சடங்குகள் போன்றவை பல்வேறுபட்ட தாவரயினங்களையும் மரபியல் ஆதாரங்களையும் பேணிப் பாதுகாப்பதிலும் பின்னிப் பிணைந்துள்ளன.

மரபுவழித் தொழில் நுட்பமும் நவீன தொழில் நுட்பமும்

தாவரங்களின் பல்வேறு பயன்களை அறிந்த முறைகள், அப்பயன்பாட்டு முறையால் கண்டறியப்பட்ட காலத்திற்குப் பின் அவற்றால் மனிதச் சமுதாயத்தில் ஏற்படுத்தும் ஆற்றல்மிக்க தொழில் நுட்பம், சமூகம், மனிதனின் அறிவாற்றல் போன்றவற்றின் மாற்றங்களை ஏதேனுமொரு சான்றினால் விளக்குவதன்மூலமே வெளிப்படையாகத் திகழும்.

பொதுவாக, எந்தவொரு தாவரயினங்களையும் பயன்படுத்த சிலவகைத் தொழில்நுட்பங்கள் தேவைப் படுகின்றன. தாவரங்கள் உணவாக சமைக்கப் பயன்படும் எளிய தொழில் நுட்பமாகவோ அல்லது தாவரங்களிலிருந்து எடுக்கின்ற செப்பமுறா மருந்து வகையினை (Curare) எடுக்கத் தேவைப்படும் கடின தொழில் நுட்பமாகவோ இருக்கலாம். பொதுவாக தொழில் நுட்பங்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

1. மரபுவழித் தொழில் நுட்பம் (Aboriginal Technology)
2. மேம்பட்ட தொழில் நுட்பம் (Advanced Technology)

மரபுவழித் தொழில்நுட்பம் எனப்படுவது தொன்முது மக்களால் கையாளப்பட்டு வந்த எளிய தொழில்நுட்ப

முறையாகும். இன்று நவீன தொழிற்சாலைகளிலும், அறிவியலிலும் பயன்படுத்தப்படும் கடின தொழில்நுட்பம் 'மேம்பட்ட தொழில்நுட்பம்' எனப்படும். இத்தொழில்நுட்பம் பல நூற்றாண்டுகளாக நாகரீக வளர்ச்சியுற்ற காலத்துக்குரிய மக்களால் அனுபவ ரீதியாக கண்டறியப்பட்ட தொழில் நுட்பங்களை மிகப்பெரிய அளவில் பயன்படுத்தி தோற்றுவிக்கப்பட்டவை. இவ்வுண்மையை, அறிவியல் உலகம் உணரவில்லை எனினும், இன்றைய தொழில் நுட்பம் அக்காலத்தொழில் நுட்பத்தை சார்ந்தும் அவற்றின் ஆக்கக் கூறுகளை இன்றளவும் கொண்டுள்ளது என்பதே முற்றிலும் உண்மை.

பாரம்பரிய அறிவியல் முறைகள் உயிராதாரங்களைப் பயனுள்ள வகையிலும், தொடர்ந்தும் பயன்படுத்த பெரிதும் உதவுகின்றன.

தாவரங்களுக்குப் பெயரிடும் முறை

தொன்முதுமக்கள் தாவரங்களுக்கு கருத்து, சமயக்கொள்கை, சிறப்புப் பண்புகள், சிறப்பு வெளித்தோற்றங்கள், பயன்கள் போன்றவற்றின் அடிப்படையில் வழக்குப் பெயர்கள் இட்டு அழைத்தாலும், இவை இன்றைய அறிவியல் பெயரினைப் போன்று திகழவில்லை எனினும், தாவரச் சேகரிப்பில் பெரிதும் உதவுகின்றன. இடத்திற்கு இடம் மாறுபட்டு காணப்படும் இவ்வழக்குப் பெயர்களைக் கொண்டே இவ்வகைத் தாவரங்களை இனங்காண முடியும். இவ்வகைப் பெயர்கள் விரித்துரைக்கும் சொற்றொடரை தவிர்ப்பதோடு தாவரங்களை குறிப்பாக சுட்டவும், வெளிப்படுத்தவும் உதவுகின்றன.

மஞ்சள் காமாலைச் செடி Centella asiatica (L.) Urban என்ற தாவரத்தின் வழக்குப் பெயராகும். மஞ்சள் காமாலை நோயினைக் குணப்படுத்தும் மருத்துவ தன்மையை இத்தாவரம் கொண்டுள்ளதால் இப்பெயர் வழங்கப்பட்டது. களப்பணியின் போது இவ்வழக்குப் பெயர்களே தாவர சேகரிப்பில் பெரிதும் உதவுகின்றன.

கலப்பைக் கிழங்கு - Gloriosa superba L. என்ற தாவரத்தின் வழக்குப் பெயராகும். இதன் கிழங்கு கலப்பைப் போன்ற தோற்றம் கொண்டிருப்பதால் இவ்வாறு அழைக்கப்படுகின்றன. பயிரிடப்படாத தாவரங்கள் அவற்றின் பயன்பாட்டு அடிப்படையில் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப் பட்டுள்ளன. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தாவரங்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன் வெளியான ஆய்வு நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் போன்றவற்றிலிருந்து தொகுக்கப்பட்டவையாகும். (Drury, 1878; Watts, 1889-1899; Kirtikar and Basu, 1935; Krishnamurthy, 1954; Chopra *et al.*, 1956; Vartak, 1959; Dastur, 1964, 1964; Jain, 1964; Jain and De, 1964, 1966; Singh and Arora, 1978; Anonymous, 1940-1976; Mittre, 1997).

உணவு (Food)

சில குறிப்பிட்ட தாவரங்களின் கிழங்குகள் (Tubers), மட்டநிலத் தண்டுகள் (Rhizomes), குமிழ்கள் (Bulbs) போன்றவைகள் பூமியிலிருந்து தோண்டியெடுத்து உணவாகப் பயன்படுத்துவதோடு, ஏராளமான தாவரங்களின் இலைகள் (Leaves), பூக்கள் (Flowers) மற்றும் விதைகளும் (Seeds) சேகரிக்கப்பட்டு உணவாகப் பயன்படுத்தப்படுகின்றன.

(a) கிழங்குகள், மட்டநிலத் தண்டுகள், குமிழ்கள் போன்றவை

இந்தியாவின் அனைத்து தட்பவெப்ப பகுதிகளிலும் ஏறத்தாழ 80 தாவரங்களில் கிழங்குகள், மட்டநிலத் தண்டுகள், குமிழங்கள் உணவாகின்றன. மிகப்பெரிய சேம்பினக் கிழங்கு வகைகளும் (Taros), கொடி வள்ளிக் கிழங்குகளும் (Yams), அவற்றின் கசப்பு மற்றும் காரத்தன்மை போகும்வரை திரும்பத் திரும்ப நீரில் கழுவி சுத்தம் செய்து பச்சையாகவோ, வேகவைத்தோ உணவாகப் பயன்படுத்தப்படுகின்றன. மேலும் சிலவற்றை மாவாக அரைத்து சுட்ட அப்பமாகவோ (Cakes), கூழாகவோ (Pudding), காய்ச்சி உணவாகப் பயன்படுத்தப்படு கின்றன. (*Diascorea aculeata, D.bilbifera, D.hispida* and *D.pentaphylla*); இராஜஸ்தான் மாநிலத்தில் Cyperus rotundusன் சிலகுமிழ்கள் வறுத்து உணவாகப் பயன்படுத்தப்படுகின்றன. தீபகற்ப இந்தியாவில் Cyperus bulbosus இன் கிழங்குகள் மாவாக

அரைத்து கம்பு (Bajra) மற்றும் சோளம் (Jowar) இவற்றின் மாவுடன் சேர்த்து உணவாகப் பயன்படுத்தப்படுகின்றன. இந்தியாவின் கிழக்குப் பகுதிகளில் Curcuma angustifolia, காஷ்மீரின் லாகூர் (Lahul) பகுதியில் Codonopsis ovata, கேரளாவின் திருவனந்தபுரம் பகுதிகளில் Aponogeton natans, A. appendiculatus, Phaseolus adenanthus போன்றவற்றின் கிழங்குகள், Nymphaea pubescens இன் மட்ட நிலத் தண்டுகள், உருளைக்கிழங்கு போன்று சுவைத்து உண்ணப்படுகின்றன. இந்தியாவின் வடக்கு சர்க்கார் (Circars) பகுதிகளில் Borassus flabelifer இன் கதிர்வடி வேர்கள், Costus speciosus, Balanites aegyptiaca, Hyphaene thebaica போன்றவை நீலகிரிப் பகுதிகளிலும், Plesmonium margaritiferum இன் கிழங்கினை கோளர்களும், Scirpus grossus இன் கிழங்கினை குஜராத் மலைவாழ் மக்களும் உணவாகப் பயன்படுத்துகின்றனர். மேலும், Dioscorea versicolor இன் காற்றுவெளிக் குமிழங்களும் (aerial bulbs) உணவாகின்றன. சிலவகைத் தாவரங்கள் Alpinia galanga, A. speciosa, Angelica glauca போன்றவை இமய மலையின் மேற்குப் பகுதிகளில் உணவிற்கு மணமூட்டுவதற்கு, வாசனைப் பொருட்களாகவும், Decalepis hamiltonii, தீபகற்ப பகுதியின் மேற்குப் பகுதிகளிலும், ஆந்திராவிலும், Gastrochilus pandurata, Zingiber montanum கொங்கன் மற்றும் அந்தமான் பகுதிகளிலும் Z.zerumbet பயன்படுத்தப்படுகின்றன. Asparagus racemosus உணவிற்கு இனிப்பூட்டவும் (Candied); Asparagus adscendens போன்றவை ஊறுகாயாகவும் பயன்படுத்தப்படு ன்றன.

பயிரிடப்பட்டு வருபவைகளுள் சிலவற்றையும் குறிப்பிடத்தக்கவையே. Alocacia macrorhiza இந்தியாவின் கிழக்கு மற்றும் வடகிழக்கு மலைப்பகுதிகளிலும், Amorphophallus campanulatus, Colocasia esculentum இமய மலைப்பகுதிகளில் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளிலும், Dioscorea alata, D. esculeneta, Scirpus lacustris, Zingiber zerumbet போன்றவை இமய மலையின் கிழக்குப் பகுதியிலும், இமாலயாவின் மேற்குப் பகுதிகளிலும் உணவாகப் பயன்படுத்தப்படுகின்றன.

(b) இலைகளும் இளந்தண்டுகளும் (Leaves and Shoots)

இவ்வகைத் தாவரங்களில் 250க்கும் மேலான சிறுசெடிகள், குறுஞ்செடிகள், மரங்கள் போன்றவற்றின் இலைகளும், இளந்தண்டுகளும் சேகரிக்கப்பட்டு பச்சையாகவோ, வேகவைத்தோ உணவாக பயன்படுத்தப்படுகின்றன. இலைகள் உணவாகப் பயன்படுத்துவதோடு அல்லாமல், Acronychia pedunculata, Allium sphaerocephalam, Cinnamomum tamala, Clausena excauata, C.indica, Murrya koenigii, Oenanthe javanica போன்றவை சாம்பார், குழம்பு போன்றவற்றில் மணமூட்டுவதற்கு மணமூட்டும் வாசனைப் பொருள்களாகவும் பயன்படுத்தப்படுகின்றன. Bambusa tulda, Caralluma adscendens, Cicer soongaricum, Salicornia brachiata போன்றவை ஊறுகாய் போடவும் பயன்படுத்தப்படுகின்றன.

பூக்களும் மஞ்சரிகளும் (Flowers and Inflorescence)

இவ்வகைத் தாவரங்களில், 35க்கும் மேற்பட்ட தாவரங்களின் பூக்கள் பச்சையாகவோ (Alpinia galanga, Caryota urens, Madhuca longifolia, Periploca aphylla) வேகவைத்தோ காய்கறியாகவோ (Bambusa bambos, Calligonum polygonoides); ரொட்டியாகவோ, (Madhuca longifolia, Ardisia griffithii), வேகவைத்தும் உண்ணப்படுகின்றன. Capparis spinosa வினை ஊறுகாயாகவும், Madhuca longifolia மதுபானங்கள் தயாரிக்கவும், Rhododendron arboretum, Woodfordia fruticosa போன்றவை குளிர்பானங்கள் தயாரிக்கவும் பயன்படுத்தப்படுகின்றன.

(c) பழங்கள் (Fruits)

இவ்வகைப் பழங்கள், 300க்கும் மேலான மரம் மற்றும் குறுஞ்செடிகளின் பழங்கள் அவற்றின் இனிப்பான விதைகளுக்காகவும், சதைப்பற்றுக்காகவும், பருத்த, விதைப் பங்குகளையும் (aril) உணவாக உண்ணப்படுகின்றன. (Aglaia edulis; Aporusa oclandra, Baccaurea courtallensis). Coriaria nepalensis இன் சுவையற்ற பழங்களும், Crataegus oxycantha வின் அமிலத்தன்மைக் கொண்ட பழங்களும் உண்ணப்படுகின்றன. Dillenia aurea, Feronia limonia, Myristica esculenta போன்றவற்றின்

பழங்கள் இனிப்பான பானங்கள் தயாரிப்பதிலும் வடகிழக்கு மாநிலங்களில் Docynia hookeriana பொதியப்பம் செய்வதிலும், Elaeagnus latifolia பழச்சாற்றில் வடிக்குழம்பாகவும், Emblica officinalis பழப்பாகு (Jams) தயாரிக்கவும், Elaeagnus angustifolia வின் பழங்கள் நாட்டு வாற்கோதுமைகள் (beer) தயாரிக்கவும், Euodia fraxinifolia மற்றும் Feronia limonia போன்றவற்றின் பழச்சதைப்பற்றுகள் சட்னி செய்யவும் பயன்படுகின்றன.

Hovenia acerba இன் பழுத்த சதைப்பற்றுள்ள கனிகள் பேரிக்காய் போன்று உண்ணப்படுகின்றன. Madhua longifolia வின் பழங்கள் வேகவைத்து உண்ணப்படுகின்றன. மேற்கு மலைத் தொடர்களில் Pinanga dicksonii ன் பழங்கள் பாக்கிற்குப் பதிலாக பயன்படுத்தப்படுகின்றன. பயிரிடப்படாமல் விளையும் Rubus niveus இன் பழங்கள் சந்தைகளில் விற்கப்படுகின்றன.

(e) விதைகள் / தானியங்கள் (Seeds / Grains)

இவ்வகை விதைகள், 50க்கும் மேலான தாவரயினங்களின் விதைகள் வறுத்து வேகவைத்தும் (Artocarpus heterophyllus, Bauhinia vahlii); பச்சையாகவோ, இனிப்புக்களுடனோ (Buchanania lanzan, Euryale ferox); அந்தமானில் Caryota mitisஇன் விதைகள் வெற்றிலையுடன் சேர்த்து மெல்லவும், லடாக் பகுதிகளில் Cicer soongaricum இன் விதைகள் பச்சையாகவும் வேகவைத்தும், Mucuna pruriens ன் விதைகள் வறுத்து காபியாகவும், Vigna vexillata, V. pilosa வின் விதைகள் பருப்பாக வேகவைத்தும் உண்ணப்படுகின்றன. தீபகர்ப்பப் பகுதிகளிலும், அந்தமான் தீவுகளிலும் Ximenia americana வின் கொட்டைப் பருப்பு பக்குவப்படுத்தப்பட்டு உண்ணப்படுகின்றன.

வறுமையான காலங்களில், Sorghum halepense, Echinochloa colonum (காட்டு அரிசி), Dinochloa scandens, Panicum turgidum போன்றவற்றின் தானியங்கள் உணவாகப் பயன்படுத்தப்படுகின்றன.

கால்நடை தீவனப் பயிர்கள்,பல்வேறு Panicum என்னும் பேரினத்தின் சிற்றினங்கள் (P. atrosanguineum, P. hippothrix, P. paludosum, P.trypheron), Echinochloa வின் சிற்றினங்களான (E.atagnina, E.crusgalli மற்றும் colonum), Pennisetum alopecuroides, மற்றும் Paspalidium flavidum போன்றவை பயன்படுத்தப் படுகின்றன.

பஞ்சம் மற்றும் உணவுப் பற்றாக்குறை காலங்களின் உணவு (Famines and Scarcity)

இந்தியாவில் பஞ்சம் மற்றும் உணவுப் பற்றாக்குறை ஏற்படும் காலங்களில் Amorphophallus commutatus, Arisaema concinnum, Asparagus sarmentosus, Asphodelus tenuifolius, Borassus flabellifer, Butea monosperma, Crinum defixum, Cyperus rotundus, Hedychium coronarium, Kaempferia scaposa, Solena heterophylla, Nymphaea alba, Nymphia nouchali, Vigna adenantha, Pouzolzia zeylanica, Smilax zeylanica, Typha angustata, Typhonium bulbiferum, T.divaricatum, Scripus tuberosus போன்றவற்றின் மட்ட நிலத்தண்டும், கிழங்குகள் மற்றும் குமிழங்களும Scirpus tuberosus, Tamarindus indica ன் கொட்டைப் பருப்பும் உணவாக உண்ணப்படுகின்றன.

மேலும்; Brachiaria deflexa, B.reptans, Chrysopogon fulvus, Citrulus colocynthis, Dactyloctenium aegyptium, Echinochloa colonum, E.crus-galli, E.stagnina, E.hirsutus, Ephedra foliata, Eragrostis tremula, Ischaemum rugosum, Oryza rufipogon, Sacciolepis interrupta, Setaria glauca, S.pallidefusca, Paspalidium flavidum, Pennisetum alopecuroides, Panicum trypheron போன்றவற்றின் விதைகள் உணவாகப் பயன்படுத்தப்படுகின்றன.

மரபிலா பயிரினங்கள் (Unconventional cultivars)

காட்டு அரிசி எனப்படும் Oryza rufipogon விதைகளும், மூங்கில் அரிசி எனப்படும் Bambusa arundinacea வின் விதைகளும் சேகரிக்கப்பட்டு உணவாகப் பயன்படுத்தப்படுகின்றன. ஒரிசா மாநிலத்திலும், ஆந்திர மாநிலத்தின் இராஜமுந்திரி எனப்படும் இடங்களில் இவ்வகை காட்டு அரிசிகள் சேகரிக்கப்பட்டு,

சந்தைகளிலும் விற்கப்படுகின்றன. நாட்டுவகைத் தின்பண்டங்களும் இவற்றிலிருந்து தயாரிக்கப்படுகின்றன.

லடாக் பகுதியில் உண்ணப்படும் கோதுமை வகையினைப் போன்று **Polygonum convolvulus** இன் விதைகள், உண்ணப்படுகின்றன. தோல் நீக்கப்பட்ட **Euryale ferox** இன் விதைகளும், **Citrulus colocynthus** இன் விதைப்பருப்புகளும் நன்றாக வறுத்து உண்ணப்படுகின்றன. நீலகிரி மலைத் தொடரில் வாழும் மக்கள் **Anogeissus latifolia** மரத்தின் சாம்பலை பொட்டாசியம் கார்பனேட் நிறைந்ததால் தங்களது உணவில் ஒரு முக்கியப் பொருளாக உட்கொள்கின்றனர்.

கோயம்புத்தூர் மாவட்ட மலைவாழ் மக்களும், நீலகிரி மாவட்டத்திலுள்ள படுகர்கள் எனப்படும் இனத்தவரும், **Amarnathus hybridus ssp. cruentus var. paniculata** வின் விதைகளை மாவாக அரைத்து உட்கொள்வதோடு அவற்றை பயிரிட்டும் வருகின்றனர். **Vigna trilobata** வின் விதைகள் உண்பதோடு, **Vigna mungo** வின் விதைகளிலிருந்து ரொட்டிகள் தயாரிக்கப்பட்டு, மதச் சடங்குகளின் போது பரிமாறப்படுகின்றன. பஞ்சாப், மக்கள் **Coix lacryma jobi** ன் விதைகளும், **Saccharum bengalense**ன் உள்ளீடான மென்சோறு உணவாக உட்கொள்ளப்படுகின்றன.

சிந்து மாகாணத்தில் **Typha elephantina** வின் மகரந்தமும், **Panicum atrisanguineum** இன் விதைகளும் உட்கொள்ளப் படுகின்றன. பாம்பே மற்றும் தக்காண பீடபூமிப் பகுதியில் **Panicum hippothrix** இன் விதைகளும், **P. paludosum** விதைகளும் உணவாகப் பயன்படுத்தப்படுகின்றன. பயிரிட்டும், பயிரிடாமலும் கிடைக்கும் **Lasiurus hirsutus, Setaria glauca** மற்றும் **S verticillata** வின் விதைகளும் உணவாகின்றன.

கால்நடைத் தீவனப் பயிர்கள் (FEEDS AND FODDERS)

1. கோழியினங்கள் (Birds and Poultry)

Cannabis sativa, Phalaris arundinacea வும் Phalaris ன் பிற இனங்களும், Sorghum போன்றவற்றின் விதைகள் பயன்படுத்தப்படுகின்றன.

2. ஆடு, மாடுகள் (Cattle)

Pterocarpus marsupium, Eleusine compressa, Eragrostis ciliaris, E.diarrhena, E.gangetica, E.tenella, E.tremula, E.viscosa, Eremopogon foveolatus, Hackelochloa granulauris, Heteropogon contortus, Polypogon monospeliensis, Indigofera cordifolia, Vigna lobata, Schima nervosum, Setaria vertifillata, Sorghum halepene, Tetrapogon tenellus, Panicumm antisotale, Echinochloa colonum, Lasiurus ecaudatus, L.hirsutus, Tragus roxburghii போன்றவை இராஜஸ்தான், மத்திய பிரதேசம் மற்றும் மகாராஷ்டிர மாநிலங்களில் பயன்படுத்தப்படுகின்றன.

3. ஒட்டகங்கள் (Camel)

Lasiurus ecaudatus, L.hirsutus, Panicum antisotale.' Crotalaria burhia, Panicum turgidum, Suaeda fruti :osa, Haloxylon salicomicum, Clerodendrum phlomidis, Acacia nilotica, Schoenefeldia gracilis போன்றவைகள்.

4. குதிரைகள் (Horses)

Echinochloa colonum, Citrullus colocynthis, Melilotus indica, Medicago sativa, Avena வின் சிற்றினங்கள் போன்றவைகள்

5. வெள்ளாடுகள் (Goats)

Panicum antidotale, Lasiurus ecaudotus, Indigofera cordifolia, Prosopis cineraria, Pithocellobium dulce, Acacia nilotica போன்றவைகள்

6. செம்மறியாடுகள் (Sheep)

Citrullus colocynthis, Indigofera oblongifolia, Schoenefeldia gracilis, Lasiurus hirsutus போன்றவைகள்.

7. யானைகள் (Elephants)
Typha elephantina

8. பன்றிகள் (Pigs)

Cyperus rotundus *மற்றும்* Gynura cusimbua *போன்றவற்றின் மட்ட நிலத்தண்டுகள்* (Rhizomes) *கால்நடைகளின் பால் உற்பத்தித் திறனைப் பெருக்க* Blepharis indica, Nymphoides cristatum *போன்ற எண்ணெய் பெறும் தாவரங்கள் உணவாக அளிக்கப்பட்டன.*

எண்ணெய் தாவரங்கள் (Oil from wild plants)

விளக்கு ஏற்றவும் உணவு தயாரிக்கப்படும் சமையல் எண்ணெய், Derris indica, Schleichera oleosa, Prinsepia utilis *(பஞ்சாப் மாநிலம்),* Aleurites moluccana, Azadirachta indica, Calophyllum inophyllum, Carallia brachiata, Diploknema butyracea *(தாவர எண்ணெய்),* Carcinia morella *(Kokam வெண்ணெய்)* Moringa oleifera, Mimusops elengi, Shorea robusta (Sal *வெண்ணெய்) போன்றவற்றின் விதைகளிலிருந்து பெறப்படு கின்றன.* Cinnamomum tamala *வின் மரப்பட்டையிலிருந்து பெறப்படும் எண்ணெய் சோப் தயாரிக்கப் பயன்படுத்தப் பட்டது.* Cinnamomum zeylanicum *மரத்தின் மரப்பட்டை, இலை மற்றும் விதைகளிலிருந்தும் எண்ணெய் எடுக்கப்பட்டது.*

சுவையூட்டும் தாவரங்கள் (Condiments)

நீலகிரியில் வாழும் தோடர்கள் காட்டு ஏலக்காய், Carcinia cambogia *வின் பழப்பட்டையும்,* Zanthoxylum rhetsa *(மிளகாகவும், இதன் நறுமணப் பட்டையும்) முற்றிய விதைகளும்,* Piper schmidtii *மற்றும்* P.mullesua *வின் முற்றிய விதைகளும் உணவில் பயன்படுத்தி வந்தனர்.*

மணமூட்டும் தாவரங்கள் (Spices)

சாம்பார் மற்றும் குழம்புகளிலும், கறிகளுக்கும் மணமூட்டுவதற்காக Murraya koenigii, Premna latifolia *போன்றவற்றின் இலைகள் பயன்படுத்தப்பட்டன.*

பாக்கு தாவரங்கள் (Substitute for Betelnut)

Pinanga decksonii *யின் கொட்டைகளும்,* **Calamus erectus** *மலபார் மற்றும் திருவாங்கூர் பகுதிகளில் காடுகளில் கிடைக்கும் விதைகள் பாக்கிற்கு பதிலாகப் பயன்படுத்தப்பட்டன.*

மதுபானங்கள் (Alcoholic drinks)

கோளர்கள் எனப்படும் மலைவாழ் மக்கள் **Madhuca longifolia** *வின் பூக்கள்,* **Imperata cylindrica** *வின் வேர்களும் பீரினை* **(Beer)** *கொதிக்கவைக்கப் பயன்படுத்தப்பட்டன.*

தேநீர் மற்றும் குளிர் பானங்கள் (Non-Alcoholic Beverages)

தேநீர் போன்ற பானங்கள் தயாரிக்க **Cymbopogon citrates, Lepidagathis bandraensis** *மற்றும்* **Ocimum basilicum** போன்றவற்றின் விதைகள் பயன்படுத்தப்பட்டன.

விஷமுறிவுகள் (Antidotes)

விலங்குகள், பூச்சிகள் விஷத்தை முறிப்பதற்கு பல்வேறு தாவரங்கள் விஷமுறிவாகப் பயன்படுத்தப்பட்டன.

பாம்பு கடிகளுக்கு விஷமுறிவாக, **Gymnema sylvestre, Kyllinga erecta, Aneilema divergens, Anogeissus latifolia, Berberis aristata, Flacourtia indica** *வின் வேர்களும்,* **Mesua ferrea, Peristrophe paniculata, Sarcostemma acidum** *போன்றவற்றின் இலைகளும் பயன்படுத்தப்பட்டன.*

தேள் கடிக்கு **Anogeissus latifolia, Leucas cephalotes** *போன்ற தாவரங்களும், எலிக்கடிக்கு* **Berberis aristata***வும் பயன்படுத்தப்பட்டன.*

அஸ்ஸாம் போன்ற பகுதிகளில் **Zanthoxylum scandens, Caesalpenia terruosa***வின் இலைகளையும்* **Rosa longicuspis** *இவற்றின் இலைகளையும் பூக்களையும் நாய் கடித்த காயத்தின் மேல் வைத்துக் கட்டப்படுகின்றன.*

பூச்சிக்கடிகளுக்கு **Calotropis gigantean***வின் பால் போன்ற சாறு பயன்படுத்தப்பட்டன.*

வேளாண் கருவிகள் (Agricultural implements)

கைப்பிடிகள் (Tool handles), அச்சுகள் (axies), வலக்கைகள் (pounders), உரல்கள் (Mortars), வண்டிகள் (Carts), சக்கரங்கள் (Wheels), ஏர்க்கருவிகள் (Ploughs), நுகத்தடிகள் (Yokes) சர்க்கரை மற்றும் எண்ணெய் பிழிந்தெடுக்கும் கருவிகள் போன்றவை கீழ்க்கண்ட பயிரிடப்படாத தாவரங்களிலேயே உருவாக்கப்பட்டன.

Acacia nilotica, Acina corkifolia, Aegle marmelos, Alangium salviifolium, Albizzia spp., Anogeissus latifolia, Artocarpus spp., Azadirachta indica, Berrya cordifolia, Bischofia javanica, Holigarna amotiana, Holoptelea integrifolia, Hardwickia binata, Heritiera minor, Capparis decidua, Lagerostriemia lanceolata, L.speciosa, Carallia brachiata, Careya arborea, Caryota urens, Cassia fistula, Cordia wallichii, Dysoxylon malabaricum, Embelica officinalis, Feronia limonia, Ficus bengalensis, F.recemosa, Gmelina arborea, Grewia subinaequalis, Hopia odorata, Chloroxylon swietinia, Cinnamom glaucescens, Mesua ferrea, Mimusops elengi, Mitragyana parviflora, Madhuca longifolia, Mangifera indica, Lannea coromandelica, Melia azedarach, Memecylon umbellatum, Morinda coreia, Morus alba, Ougenia aojeinensis, Pongamia pinnata, Pterocarpus marsupium, P.santalinus, Sapindus laurifolia, Schlechera oleosa, Shorea robusta, Soymida febrifaga, Strychnos num-vomica, S.potatorum, Santalum album, Tamarindus indica, Tamaric aphylla, T.dioica, T.troupii, Terminalia arjuna, T.bellerica, T.alata, Thespesia populnea, Trewia nudiflora, Wrightia tinctoria, Vitex altissima, Xylia xylocarpa, Zizyphus mauritiana, Z.xylopyra, etc.

நார்தரும் தாவரங்கள் (Fibre yielding Plants)

கயறு (Cordage), ஆடைகள் (Garments), கோணிப்பை (Sacks), பாய்கள் (Mats), போர்வைகள் (Shawls) கடினமான துணிகள் (Coarse cloth) போன்றவைகள் கீழ்க்கண்ட தாவரங்களிலிருந்து பெறப்பட்டன.

Abelmoschus moschatus, Abroma angustata போன்றவற்றின் மரப்பட்டை, Abutilon theophrastii, Acacia senegal, Agave americana, A.sisalana போன்றவற்றின் தண்டுகள், Acacia niloticaவின் இளந்தண்டுகள், Antiaris toxicaria (ஆடைகள் பின்ன) Butea monosperma, Azadirachta indica, Bauhini vahliiயின் பட்டைகள், Calotropis giganteaவின் கனியிலிருந்து கிடைக்கும் பஞ்சு, கைக்குட்டைகள், போர்வைகள் தயாரிக்க பயன் படுத்தப்பட்டன. Cannabis sativa, Careya arborea, Caryota urens போன்றவைகள் தயாரிக்க பயன்படுத்தப்பட்டன. Cannabis sativa, Careya arborea, Caryota urens போன்றவைகளிலிருந்து யானைகளின் தாம்புக் கயறுகள், Imperata cylindricaவின் தண்டுகள், Ceibia pentandra வின் கனியின் பஞ்சுகள் உயிர்காக்கும் கருவிகள் தயாரிப்பதிலும், Cordia wallichii யின் மரக்கட்டையும், Carypha umbraculifera, Dillenia pentagynaவின் மரக்கட்டை, Saccharam officinarum த்தின் இலைகளும், தண்டும், Erythrina suberosa, E.variegata. Ficus religiosa, F.bengalensis, Hardwickia binata, Girardinia palmata, Grewia suninequalis, G.elastics, Helicteres isora, Hibiscus cannabinus, H.tillaceus, Kydia calycina, Mitragyra parviflora, Marsdenia tenacisima, Morus alba மரப்பட்டைகள், Ougenia oojeinensis, Oreocnide integrifoliaவின் மரப்பட்டைகள், Pandanus tectorius, Saccharum spontaneum வின் இலைகள் மற்றும் காற்று வேர்கள், Sansevieria roxburghiana வின் இலைகள், Soymida febrifuga, Sterculia foetida, S.urens, S.villosa, Ventilaga madraspatana வின் மரப்பட்டைகள், Themeda arundinecea, Trema orientalis, Urena lobata வின் தண்டுகளும் பயன்படுத்தப்பட்டன.

நறுமணம் மற்றும் வாசனைத் திரவியங்கள் (Incense and Perfumes)

கோயில்களில், Santalum album, Shorea robusta போன்றனவற்றில் நறுமணம் மிகுந்துள்ளதால் பயன்படுத்தப் பட்டன. Erythroxylum monogynum த்தின் கட்டை சந்தனத்தில் நறுமணத்தை பெற்றிருப்பதால் சந்தனத்திற்குப் பதிலாக பயன்படுத்தப்பட்டது. Pogostemon patchouliயின் காய்ந்த இலைகளும், மஞ்சரியும் பயன்படுத்தப்பட்டன. Abelmoschus moschotusன் காயிலிருந்து பெறப்படும் எண்ணெய் வாசனைப் பொருளாக பயன்படுத்தப்பட்டன. Aquilaria agallochaவின்

மரப்பிசின் அகர்ப்பத்திகளாகவும், Boswellia serrataவின் ஒலியோ ரெசினும், Canarium ordoratumவின் பூவிலிருந்து காய்ச்சி வடிக்கப்பட்ட நறுமணப் பொருளும் வாசனைத் திரவியமாய் பயன்படுத்தப்பட்டன. Michelia champaca, Lawsonia inermis, Jurinea macocephala, Saussurea lappa, Skimmia laureola போன்ற பிற தாவரங்களும் பயன்படுத்தப்பட்டன.

தெய்வீகத் தாவரங்கள் (Sacred Plants)

குறிப்பாக சில மரங்கள் Mangifera indica, Santalum album, Ficus religosa, Saraca asoca, Elaeocarpus sphaericus போன்றவை பொதுவாக இந்துக்களால் தெய்வீகத் தாவரங்களாகக் கருதப்பட்டன. Achyranthes aspera- வின் காய்ந்த மஞ்சரியானது யாகத்தில் சிதைகளாகப் பயன்படுத்தப்பட்டன. Prosopis cineraris என்னும் தாவரம் வைணவர்களால் புனிதமாகக் கருதப்பட்டன.

மருந்து (Medicine)

மனிதர்களுக்கும் கால்நடைகளுக்கும் ஏற்படும் பல்வேறு நோய்களை குணப்படுத்த, 3500க்கும் மேற்பட்ட தாவரங்கள் மருந்தாக பயன்படுத்தப்படுகின்றன. காயங்களுக்கு நச்சுத்தடைக் காப்புப் பொருளாக - Panicum antidotale, Artemisia maritima; சுவாசநோய் கோளாறுகளுக்கு - Urginea indica வின் குமிழங்களும், இரத்தத்தைச் சுத்திகரிக்க Mollugo cerviana; சிறுநீரக கோளாறுகளுக்கு Glinus lotoides; வீக்கங்களுக்கு Corallocarpus epigaeusயின் வேர்ப்பசையும், வலிமையைப் பெருக்கிகளாக Neurada procumbens, Colchium luteum, Mimosa hamataவின் விதைகளும், Asparagus racemosusவின் வேர்களும், நிமோனியா காய்ச்சலுக்கு Achyranthes aspera; வயிற்றுப் போக்கிற்கு Podophyllum hexandrum, Salvia aegyptiacaவும்; கருத்தடை செய்வதற்கு Zalyca redimita; மேகவெட்டை மற்றும் சூட்டு கோலிற்கும் Solanum nigrum, Rivea hypicrateriformis; Pedalium murex; வெறிநாய்க்கடிக்கு Datura innoxia; நெஞ்சு வலிக்கு Cuscuta hyalina; மேக புண்ணுக்கு Tephrosia uniflora subsp. petrosa; காதுவலிக்கு Cardiospermum halicacabumத்தின் இலைகள், வேர்கள்; ஆண்மையின்மைக்கு Tribulus terrestrisன்

சாறு; காய்ச்சலுக்கு Viola sp.ன் கஷாயம்; கால்நடைகளின் வயிற்றுக் கோளாறுக்கு Glochidion acuminatum; காலராவிற்கு Zanthoxylum acanthopodium; கடுமையான தலைச்சுற்று நீர்க்கோவைக்கு Mucuna monosperma; இரத்தக்கட்டு நோயிற்கு Carum caryi, Inula racemosa; வாயுத் தொல்லைகளுக்கு Achillea millaefolia;; வயிற்றுப் பூச்சியைப் போக்க Hyoscyamus niger, கால்நடை நோய்களுக்கு Mentha millaefolia; மண்ணீரல் கோளாறுக்களுக்கு Capparis spinosa; அதிகமான அமிலத்தன்மைக்கு Nepeta lingibracteata; தோல் நோய்களுக்கு Ranunculus hirtellus இமைபடல அழற்சிக்கு Thalictum minus போன்றவை பயன்படுத்தப்படுகின்றன.

ஆய்வின் விவரங்கள்

1. களப்பணி

இவ்வாய்வினை மேற்கொண்ட காலங்களில் கொல்லிமலையில் மலையின மக்கள் வசிக்கும் பல்வேறு இடங்களுக்குக் கீழ்க்கண்டவாறு களப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

திசம்பர் (9-12), 1998	-	சோளக்காடு, எழிசிரைப்பட்டி, தேவனா நாடு, இடப்புளி நாடு
சூன் (11-15), 1999	-	குளத்து வளைவு, சூரப்பிள்ளை வளைவு, ஊரப்புரம்
ஆகஸ்ட் (14-17), 1999	-	அரப்பளிஸ்வரர் கோயில், சின்னக்காரை காடு, முத்துக் காடு, பெருங்கீரைப்பட்டி
நவம்பர் (19-22), 1999	-	வாளவந்தி நாடு, வண்டியூர், தென்னிமந்திப்பட்டி
பிப்ரவரி (3-6), 2000	-	செம்மேடு, விளார்
மே (19-23), 2000	-	காரவள்ளிக் கோம்பைக்காடு, சோளக்காடு, செம்மேடு
ஜூன் (25-29), 2001	-	[illegible]வு, தேனூர், [illegible]ளிநாடு
டிசம்பர் (26-31), 2002	-	செம்மேடு, ஆரியூர், பெரியண்ணன் கோயில் சோலை

ஆய்வின் நோக்கம்

- ❖ தமிழ் நூல்கள் கூறும் கொல்லிமலையைப் பற்றிய தொன்மைச் செய்திகளையும் அவற்றில் இடம்பெற்றுள்ள மருத்துவத் தாவரங்களின் வழக்குப் பெயர்களைக் கொண்டு அவற்றின் தாவரப் பெயர்களை கணித்தல்.

- ❖ *களப்பணி மேற்கொண்டு, கொல்லிமலையில் வாழும் மலையின மக்கள் உணவாகவும், மருந்தாகவும் பயன்படுத்தும் பயிரிடாத்*

தாவரங்களைப் பற்றிய வாய்மொழிச் செய்திகள் சேகரித்துத் தொகுத்தல்.

அம்மக்கள் பயன்படுத்திவரும் பயிரிடாத் தாவரங்களைக் குறித்த செய்திகளை வெளியிட்டுள்ள பிற அறிவியல் நூல்கள், கட்டுரை, ஏடுகள், ஆய்வுத் தொகுப்புகள், துணுக்குகள் முதலியவற்றை ஆராய்ந்து குறிப்பெடுத்தல்.

2. ஆய்வு முறைகள்

கொல்லிமலையில் பல்வேறு இடங்களில் வசித்துவரும் மலைவாழின மக்களின் வாழ்விடங்களுக்கு ஒழுங்கான இடைவெளியில் முறையாக களப்பணிகள் மேற்கொள்ளப் பட்டன. இவ்வாய்விற்கான மூலிகைத் தாவரங்களின் தரவுகள் மூலிகைத் தாவரங்களின் மருத்துவப் பண்புகள் நன்கறிந்த மருத்துவர்களிடமும், முதியோர்களிடமும் சேகரிக்கப்பட்டன. இருதரப்பு பேச்சுக்களின் வாயிலாகவும், நேர்காணல் மூலமாகவும் மூலிகைகளின் பயன்பாடுகளைப் பற்றி அதிகப்படியான தகவல்கள் பெறப்பட்டன. அதுசமயம் மூலிகைகள் பற்றிய அனைத்து விபரங்களும் குறிப்பாக மூலிகைகளைப் பயன்படுத்தி இயற்கை மருந்துக்கலவை எவ்வாறு தயாரிக்கப்படுகின்றன? அம்மூலிகைகளை எப்போது, எவ்வாறு சேகரிக்கவேண்டும், அவற்றுடன் சேர்க்கப்படும் பிற தாவரங்கள் அல்லது பிற பொருட்கள், அவற்றைப் பயன்படுத்தும் முறைகள், மருந்தின் அளவு, கால அளவு, உணவுக் கட்டுப்பாடுகள் ஏதேனும் இருப்பின் போன்ற விவரங்களும் சேகரிக்கப்பட்டன. அத்துடன் அம்மூலிகைகளுக்கு அங்கு வழங்கப்படும் வழக்குப் பெயர்களும் தொகுக்கப்பட்டன.

மருந்தாகப் பயன்படுத்தப்படும் தாவரங்களை, அவற்றின் மருத்துவப் பயன்கள் பற்றிய செய்திகளுடன் பதிவு செய்து கொண்டதோடு அவற்றின் இனம் கண்டறியப்பட்டது. (Gamble, 1950 ; Mathew, 1983) மேலும் அவற்றுக்கு அை ஏத்துலக

தாவரப்பெயர் முறை (International Code of Botonical Nomenclature - ICBN) விதிகளின்படி தாவரப்பெயர்கள் வழங்கப் பட்டுள்ளன.

ஆய்வுக் களம்

கொல்லி மலை

இந்தியாவில் 1991ஆம் ஆண்டு மக்கட்தொகைக் கணக்கெடுப்பின்படி மலைவாழ் மக்களின் எண்ணிக்கை 87.7 மில்லியன்களாகும். இது இந்தியாவின் மொத்த மக்கட்தொகையில் 9.55 சதவிகிதமாகும். தமிழகத்தில் மட்டும் கிட்டத்தட்ட 36 வகை பலதரப்பட்ட மலைவாழ் மக்கள் உள்ளனர். இவர்களின் மொத்த எண்ணிக்கை 574194 ஆகும். இவர்களில் மலையாளிகள் எனப்படும் மலைவாழ் மக்களே பெரும்பாலானோர் ஆவர்.

சேலம் மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் 19 விழுக்காடு பரப்பளவில் மலையின மக்கள் (Tribal) பரவியுள்ளனர். இம்மாவட்டத்தின் 1991-ஆம் ஆண்டின் மக்கள்தொகை கணக்கீட்டின்படி மொத்தம் 1.36 இலட்சம் மலையின மக்கள் வாழ்கின்றனர். இது தமிழ்நாட்டில் வாழும் மொத்த மலையின மக்கள் தொகையில் 27 விழுக்காடாகும். இவற்றில் கிட்டதட்ட 69,000 ஆண்களும், 66,000 பெண்களும் ஆவர்.

சேலம் மாவட்டத்தில் மொத்த மலைவாழ் பகுதிகள்5 பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவையாவன : 1 ஏற்காடு (Yercaud) 2. கொல்லிமலை (Kolli Hills), 3. கல்ராயன் மலை (Kalrayan Hills), 4. பச்சை மலை (Pacha Malai), மற்றும் அருநூத்து மலை (Arunoothy Malai) ஆகும். இக்குறுங்கால ஆய்வுத் திட்டத்திற்குக் கொல்லி மலைப் பகுதியையே முதன்மையாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது (படம் 1).

கொல்லிமலையின் பெயர்க் காரணம்

இம்மலையின் பெயர்க்காரணம் பற்றி பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. இங்கு கொல்லி என்றழைக்கப்பட்ட மரங்கள் மிகுந்து காணப்பட்டமையால் இப்பெயர்

வரப்பெற்றதாகக் கூறப்படுகிறது. கொல்லும் (Killer) தன்மையுடையதால் கொல்லி மலை (Killer Mountain) என அழைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இம்மலை மேலும் குடவரை (Kudavarai) என்றும் அரப்பளிஸ்வரர் மலை (Arapalli Isvarar Malai) என்ற பிற பெயர்களாலும் அழைக்கப்படுகின்றன.

இம்மலையை நாமக்கல்லில் சமவெளிப் பகுதியிலிருந்து பார்க்கும்போது இதன் இயற்கை அமைவு ஒரு பம்பரம் (Flat-topped mass) போன்ற மலைப்பகுதியைக் கொண்டதாகக் காட்சியளிக்கின்றது. இதன் இயற்கை தோற்றமும், அங்கு காணப்படும் செவ்வக வடிவ (Rectangular pleateau) பீடபூமி பகுதிகளும் இதனை சதுரகிரி (Chathuragiri) மலை என்று அழைக்கக் காரணமாக இருந்திருக்கலாம் எனவும் கருதப்படுகிறது.

"கொல்" என்பது ஒலிக் குறிப்பு. இரும்பு தொழில் புரிவோர் "கொல் கொல்" என ஒலியெழுப்புவதால் கொல்லர் எனப்படுவது போல் கொல்லெனச் சிரித்து காண்போர் கண்ணையும் கருத்தையும் கவர்ந்து அணங்கும் பாவை "கொல்லி" எனப்பட்டது. பாவையின் பெயரது நிலவிய மலைக்காகி அம்மலை கொல்லிமலை என வழங்கியிருக்கலாம் எனவும் கருதப்படுகிறது. இம்மலையில் வசிப்போர் ஏதேனும் தவறுகள் செய்தால் அவர்கள் கொல்லப்பட்டு இருந்திருக்கலாம் எனவும் அதனால் அம்மலை கொல்லி மலை என்றும் அழைக்கப்பட்டிருக்கலாம் என்ற கருத்தும் நிலவி வருகிறது.

கொல்லிமலை தொடர்ந்து சுமார் 490 சதுர கிலோ மீட்டர் பரந்து காணப்படுகிறது. இம்மலையில்தான் சுவேதநதி உற்பத்தியாகிறது. பெரிய கோட்டை ஆறு, அய்யாறு, கடலாறு, கல்லக் குழியாறு போன்ற ஆறுகளும் ஓடுகின்றன. இம்மலையில் தாவர இனங்களும் விலங்கினங்களும் மிகுதியாகக் காணப்படுகின்றன. இதன் பலதரப்பட்ட சூழலும், பல்வேறு உயிரினங்களும் மனிதனின் வாழ்விற்கு உகந்ததாக மட்டுமின்றி, பிற சூழ்நிலைகளைச் சேர்ந்த பல்வேறு குடியேறிய உயிரினங்களையும் (Alien species) தன்னகத்தே கவர்ந்திழுக்கும் பேராற்றல் கொண்டதாக இருந்துள்ளது. மலையின் வனப்பகுதிகளில் வளரும் மூலிகைத் தாவரங்கள்

மிகவும் பெயர்பெற்றவையாகும். இங்கு காணப்படும் தாவரங்கள், தாவர அளவீட்டின்படி கிட்டதட்ட 916 தாவரங்கள் இருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளன. இவற்றில் 854 வகை பூக்கும் தாவர இனங்களும் (Flowering plants), 57 டெரிடோபைட்டுகளும் (Pteridophytes) ஜிம்னோஸ்பேர்களும் (Gymnosperms) ஆகும். இம்மலைத் தொடர்ச்சியில் காணப்படும் சேர்வராயன் என்ற மலைக்கு அடுத்தபடியாக கொல்லிமலையில் பருவமழைக் காடுகளின் இன்றும் மிஞ்சியப் பகுதிகளைக் கொண்டு காணப்படுகிறது.

கொல்லிமலையில் வனவிலங்குகளான புலிகளும் யானைகளும் ஒரு காலத்தில் மிகுதியாகக் காணப்பட்டன. எனினும் தற்போது இவை முற்றிலும் அழிந்து போயிற்று. இருப்பினும் சிறு விலங்குகளான கருங்கரடி (Black Bear), முயல் (Hares), காட்டுப்பன்றி (Porcupins) மற்றும் காட்டு நாய் (Wild Dogs) முதலானவைகளும் காணப்படுகின்றன.

கொல்லிமலையின் வனப்பகுதிகளில் மூலிகைகள் தவிர, பதினென் சித்தர்களால் செய்யப்பட்ட பல அரிய மருந்துகளான தைலம், ரசமணி, முப்பு, சுண்ணம் போன்றவைகள் இங்குள்ள கல்லறைகளில் புதைப்பொருளாக வைக்கப்பட்டிருப்பதாகவும் இதற்குக் காவலாகவே கொல்லிப்பாவை, பெரியண்ணசாமி போன்ற தெய்வங்களை அமைத்து வைத்திருப்பதாகவும் “காலங்கிநாதரின் மலைவளம்” என்னும் நூலில் சொல்லப்பட்டிருக்கிறது.

கொல்லிமலையில் கோரக்கர் என்னும் சித்தர் தன் மாணவர்களுடன் கூடி தவம் செய்ததாகச் சொல்லப்படுகிறது. இச்சித்தர் குகையைச் சுற்றிப் பல அரிய மூலிகைகளான வேலால் தாக்கப்பட்ட புண்ணை ஆற்றும் காவல்யகரணி என்ற மூலிகையும், துண்டிக்கப்பட்ட பாகங்களை ஒன்றுசேர்க்கும் சந்தனகரணி என்ற மூலிகையும், கருநெல்லி, கருநொச்சி, கருவாழை, மூவிலை குருத்து, செங்கொடி வேளி, பேய் தேத்தான், ஜோதி விருட்சம், காயா விருட்சம், சுணங்கி விருட்சம், சுண எருமை, சிறியா நங்கை, பெரியா நங்கை மற்றும் அனேக மூலிகைகள் உள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

தமிழ் நூல்களில் கொல்லிமலையின் சிறப்புகள்

கொல்லிமலையைப் பற்றியும் அதன் இயற்கை வளத்தைப் பற்றியும் சங்க இலக்கிய நூல்களான நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு, பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு முதலிய நூல்களில் பல்வேறு புலவர்களால் சிறப்பித்துக் பாடப்பட்டுள்ளன. இம்மலையின் சிறப்பினை புராணக் காவியமாகிய இராமாயணத்திலும் குறிப்பிடப் பட்டுள்ளது. முந்தைய வரலாற்றுக் காலங்களில் இம்மலை கொங்கு நாட்டிற்கும் சோழ நாட்டிற்கும் இடையில் இயற்கையாக அமைந்த ஒரு தடுப்பாகவும், எல்லைய்ாகவும் அமைந்து விளங்கியது.

இராமாயணச் செய்திகள்

இராமாயணத்தில் குரங்குகளின் தலைவனாகிய சுக்கீரிவனைப் (Ape King Sugriva) பற்றிக் கூறும் மதுவனம் என்னும் பகுதியில் இம்மலையினைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இம்மலையில் சுக்கிரீவனின் மூத்த சகோதரனான வாலி (Vali) ஐந்து லிங்கங்களை வைத்து வ்ழிபட்டதாகவும் கூறப்படுகிறது. இம்மலையினை ரிஷிமுக பர்வதம் (Rishyamukha Parvatham), சுக்ரீவ பர்வதம் (Sugriva Parvatham) மற்றும் கோலாச்சலம் (Kolachalam) எனவும் இராமாயணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

கொல்லிமலையின் சங்க கால சிறப்புகள்

சங்கப் புலவர்களுள் தலைசிறந்த கபிலர் முதல் பரணர், ஔவையார், மறுவில்வாய்மொழியரசில் கிழார், மதுரைக் கணக்காயர், இளங்கீரனார், குறுங்கோழியூர் கிழார், கல்லாடனார் போன்ற பிற புலவர்களால் இதன் இயற்கை அழகினைப் பற்றியும் அங்கு வாழ்ந்த மக்களின் அகம், புற வாழ்வினைப் பற்றியும் பாடப்பட்டுள்ளது. இம்மலையிலுள்ள சோலைகளைப் பற்றியும், அங்கு விளையும் காய்களையும் கனிகளையும், இனிய நீரையுடைய பெரிய சுனைகளைப் பற்றியும் சிறப்பாக பாடப்பட்டுள்ளது.

இரவலர்க்குப் பொய்த்தலறியாத செல்வத்தையுடைய கொல்லிமலை என்பதை,

> பொய்யில் செல்வக் கடுங்கோ வுக்கு
> வேளாவிக் கோமான் பதுமன் றேவியீன்ற மகன்
> கொல்லிக் கூற்றந்து நீர்கூர் மீமிசைப்...
> பல்வேற் றானை யதிக மானோ
> டிருபெரு வேந்தரையு முடனிலை வென்று
> முரசுங் குடையுங் கலனுங் கொண்
> டுரைசால் சிறப்பினடுகளம் வேட்டுத்
> துகளர் மகளி ரிரங்கத் துப்பறுத்தத்
> தகடு ரெறிந்து நொச்சிதற் கெய்திய
> அருந்திற லொள்ளிசைப் பெருஞ்சேர லிரும்பொறை
> (பத்துப்பாட்டு, 80)

என்று மறுவில் வாய்மொழியரசில் கிழார் பாடியுள்ளார்.

கரிய நீர் சுமந்த முகில் உயர்ந்தெழுந்த, சூர்த் தெய்வம் விரும்பும் அகன்ற நிலப்பரப்பினையுடைய பெரிய வலிய கொல்லி என்பதனை,

> இடை பிறர் அறிதல் அஞ்சி, மறை கரந்து,
> பேஎய் கண்ட கனவின், பல் மாண்
> நுண்ணிதின் இயைந்த காமம் வெண் வேல்,
> மறம் மிகுதாணை, பசும் பூண், பொறையன்
> கார் புகன்று எடுத்த சூர் புகல் நனந்தலை
> மா இருங் கொல்லி உச்சித் தா அய்(அகநானூறு, 303)

என்று ஔவையாரால் பாடப்பட்டுள்ளது.

கொல்லிமலையின் இயற்கை வளத்தை குறிப்பிடுகையில், பொறையனுடைய அகன்ற வலிய காடுகளையுடைய கொல்லிமலை போல என்பதனை,

> குன்று ஓங்கு வைப்பின் நாடு மீகக் கூறும்
> மறம் கொமு தானை அரச ருளளும்
> அறம் கடைப்பிடித்த செங்கோலுடன், அமர்

மறம் காய்ந்து எழுந்த வலன் உயிர் திணி தோள்,
பலர் புகழ் திருவின் பசும் புட் பாண்டியன்
அணங் குடை உயிர்நிலைப் பொருப்பின் கவா அன்,
சினை ஒண் காந்தள் நாறும் நற நுதல்
துணை ஈர் ஓதிமா அயனோன்வயின்,
நுண் கோல் அவிர் தொடி யண்புறம் சுற்ற
முயங்கல் இயையாது ஆயினும், என்றும்
வயவு உறு நெஞ்சத்து உயவுத் துணையாக
ஒன்னார் தேஎம் பாழ் பட நூறும்
துன் அருந் துப்பின் வெண் வேற் பொறையன்
அகல் இருங் கானத்துக் கொல்லி போல (அகநானூறு, 338)

என மதுரைக் கணக்காயர் பாடியுள்ளார்.

பொறையனுடைய பெரிய குளிர் நிறைந்த கொல்லிமலையின்கண் செழித்த பசுமையான கானமுல்லை மலரின் மிக்க நறுமணம் கமழும் கூந்தல் என்பதனை,

குண கடல் முகந்து, குடக்கு ஏர்பு இருளி,
தண் கார் தலை இய நிலம் தணி காலை,
அரசு பகை நவலும் அருமுனை இயலின்,
அழிந்த வேலி அம் குடிச் சீறூர்
ஆன் இல் மன்றத்து, அல்கி வனி ஆட்ட,
தாள் வலி ஆகிய வன்கண் இருக்கை,
இன்றி, நச்சனைகள் போலா. - என்றும்
நிறையுறு மதியின் இலங்கும் பொறையன்
பெருந் தன் கொல்லிச் சறு பசுங் குளவிக்
கடி பதம் கமழும் கூந்தல்
மட மா அரிவை தட மென் தோளே? (நற்றிணை, 346)

என்று இளங்கீரனார் பாடியுள்ளார்.

சிகரங்கள் சிறைந்ததும் ஓங்கியதும் ஆகிய கொல்லிமலை என்பதனை,

வியன்பாசறைக் காப்பான
வேந்து தந்து பணிதிறை யாற்
சேர்ந்தவர் கடும் பார்த்தும்

ஓங் கு கொல்லியோ ரடுபொருந
வேழ நோக்கின் விறல் வெஞ்சே எய் (புறநானூறு, 22)

என்று குறுங்கோழியூர் கிழார் பாடிள்ளார்.

மலைநீர் அருவி பரவும் நிலத்தின்கண் ஐவன நெல்லை விதைத்து அகன்ற மலைகளையுடைய கானமுல்லை மலர்களொடு பசுமையான மரங்கள் தழைக்கும் காந்தள் செடி வேலியாகச் சூழ்ந்த குறுகுடிலின்கண் வாழும் மக்கள் பசி ஏழின் கரிய கண்களை உடைய வேழ யானையின் கோடுகளை விலையாகக் கொடுத்து உண்பண்டங்களைப் பெற்றுண்ணும் வளம் சான்ற வல்வில் ஓரிக்குச் சொந்தமான கொல்லி மலை என்பதனை,

அருவிப் பரப்பின் ஐவனம் வித்திப்
பரு இலைக் குளவியொடு பசுமரல் கட்கும்
காந்தல் வேலிச் சிறுகுடி பசிப்பின்
கருங்கண் வேழத்துக்கோடு நொடுத்து உண்ணும்
வல்வில் ஓரி கொல்லிக் குடவரை
(குறிஞ்சி - 100 - குறுந்தொகை)

என்று கபிலரும் பாடியுள்ளார்.

இம்மலை அடர்ந்து செறிந்த, நெடிதுயர்ந்து வளர்ந்த மரங்களைக் கொண்டது. இக்கொல்லிமலைச் சிறப்புகளில் ஒன்று வேர்ப்பலா .... கொல்லி எனவும் .... பலவாகக் கிளைத்து பலாப் பழங்களாகிய பயனைப் பொருந்திய கொல்லிமலை என்பதனை,

யாம இரவின் நெடுங் கடை நின்று
தேம் முதிர் சிமையக் குன்றம் பாடும்
நுண் கோல் அகவுநர் வேண்டின், வெண் கோட்டு
அண்ணல் யானை ஈயும் வண் மகிழ்
வெளியன் வேண்மான் ஆஅய் எயினன்
அளி இயல் வாழ்க்கைப் பாழிப் பறந்தலை,
இழை அணி யானை இயல் தேர் மிஞிலியொடு
நண்பகல் உற்ற செருவில் புண் கூர்ந்து,
ஒள் வாள் மயங்கு அமர் வீழ்ந்தென, புள் ஒருங்கு

அம் கண் விசும்பின் விளங்கு ஞாயிற்று
ஒண் கதிர் தெருமை, சிறகரின் கோலி,
நிழல் செய்து உழறல் காணேன், யான் எனப்
படுகளம் காண்டல் செல்லான், சினம் சிறந்து,
உருவினை நன்னன், அருளான் கரப்ப,
பெரு விதுப்புற்ற பல் வேள் மகளிர்க்
குரு உப்பும் பைந் தார் அருந்திய பூசல்,
வசை விடக் கடக்கும் வயங்கு பெருந் தானை
அருதை களை தந்தாங்கு, மிகு பெயல்
உப்புச் சிறை நில்லா வெள்ளம் போல்
நாஞு வரை நில்லாக் காமம் நண்ணி,
நங்கினள், வாழியர், வந்தே - ஓர்
பல் பழப் பலனின் பயம் கெழு கொல்லிக்
கார் மலர் கடுப்ப நாறும்
ஏர்நுண், ஓதி மா அயோளே (அகநானூறு, 208)

என்று பாணரால் பாடப்பட்டது இக்கொல்லிமலை.

செவ்விய வேர்ப்பலாவாகிய பயனையுடைய கொல்லிமலை என்பதனை,

தோளும் தொல் கவின் தொலைந்தன; நாளும்
அன்னையும் அருந்துயர் உற்றனள்; அலரே,
பொன் அணி நெடுந் தேர்த் தென்னக் கோமான்,
எழு உறழ்திணி தோள் இயல் தேர்ச் செழியன்,
நேரா எழுவா அடிப்படக் கடந்த
ஆலங்கானத்து ஆர்ப்பினும் பெரிது என,
ஆழல் - வாழி, தோழி! அவரே,
மாஅல் யானை மறபோர்ப் புல்லி
காம்புடை நெடுவரை வேங்கடத்து உம்பர்
அறை இறநது அகன்றனர் ஆயினும், நிறை இறந்து
உள்ளார் ஆதலோ அரிதே செவ் வேல்
முள்ளூர் மன்னன் கழல்தொடிக் காரி
செல்லா நல்இசை நிறுத்த வல்வில்
ஓரிக் கொன்று சேரலார்க்கு ஈந்த
செவ் வேர்ப் பலனில் பயம் கெழுகொல்லி

நிலைபெறு கடவுள் ஆக்கிய,
பலர்புகழ பாவை அன்ன நின் னலனே
(அகநானூறு. 209)

இவ்வாறு கலலாடனார் பாடியுள்ளார்

வல்வில் ஓரி

கொல்லிமலையும் அதைச் சார்ந்த கிராமங்களையும் கடை 'யோழ வள்ளல்களில் ஒருவரான வல்வில் ஓரி என்ற அரசன் ஆட்சி புரிந்ததாகவும் சங்க இலக்கியங்களின் வாயிலாக அறியபபடுகிறது இதனை சென்னி வேந்தன் ஆத்திமாலையை அணிந்துள்ள போல - கருமுகில் விண்ணிடை விளங்கும் ஓரியின கொல்லிமலையில் விளங்கும நடமாடும மயிலின் கலாவத்தைப போல இவர் ஒலிமென் கூநதல் என்பதை,

குறுகு புனம மேய்ந்த அறு கோட்டு முற்றல்
அள்ளல் ஆடிய புள்ளி வரிக் கலை
வீணை அமபின விலலோர் பெருமகள்
பூந தோள யாபபின் மிஞிலி, காககும்
பார்த்து அன்ன - ஆர மார்பின்
சிறு கோற சென்னி ஆரேற்றனன -
மாரி வண் மகிழ் ஓரி கொல்விக்
கலி மயில கலாவந்து அன்ன இவா
ஒலி மென் கூந்தல் நம் வயினானே
(குறிஞ்சி - 265, நற்றிணை)

என்று பரணரும் பாடியுள்ளார்.

மேலும் இதனை,

முரசு கடிப் பிடுபபவும வால்வளை துவைப்பவும்
அரசுடன் பொருத வணண னெடுவரைக்
கறங்குதவள் ளருவி கல்லலைத் தொழுகும்
பறம்பிற் கோமான பாசியும பிறங்கு மிசைக்
கொல்லி யாணட வில்லி லோரியம்
காரி யூர்ந்து பேரமா கடந்த
மாரி யீகை மறப்போா மலையனும
ஊரா தேநதிய குதிரைக கூாவேற்
கூவிளங் கண்ணில் கொடும்பூ ணெழினியும் (புறநானூறு. 158)

என்று பெருஞ்சித்திரனாரும பாடியுள்ளார்

வீரமும் ஈரமும் ஒருங்கே அமையப்பெற்றவன் ஓரி என்பதனை,

பெறுவது இயையாது ஆயினும், உறுவது ஒன்று
உண்டுமென் வாழிய - நெஞ்சே திண் தேர்க்
கை வள் ஓரி கானம் தீண்டி
எறிவளி கமழும் நெறிபடு கூந்தல்
மை ஈர் ஓதி மா அயோன்வயின் .... (குறிஞ்சி 199 ; பரணர்)

ஒன்றேன் அல்லேன், ஒன்றுவென், குன்றத்துப்
பொருகளிறு மதித்த நெரிதாள் வேங்கை
குறவர் மகளிர் கூந்தற் பெய்ம்மார்
நின்று கொய மலரும் நாடனொடு
ஒன்றேன் - தோழி ஒன்றினானே (குறிஞ்சி ; 208, கபிலர்)

நெடிய திரண்ட தோளினைப் பெற்றவனும் இன்முகம் தெரியாது வாரி வழங்கும் வள்ளல் ஓரி என்பதனை,

நெடிய திரண்ட தோள் வளை ஞெகிழ்த்த
கொடியன் ஆகிய குனறு கெழு நாடன்
வருவதோர் காலை, இன்முகம் திரியாது,
கடவுட் கற்பின் அவன் எதிர் பேணி,
மடவை மன்ற நீ எனக் கடவுடி
துணியல் வாழி தோழ சான்றோர்
புகழும முன்னர் நாணுப
பழி யாங்கு ஒல்பவோ காணுங்காலே
(குறிஞ்சி : 252, கிடங்கில் குலபதி நக்கண்ணன்)

ஓரி குதிரையைக் கொண்ட ஓரி, காரிக் குதிரை காரியுடன் பொருதான் முள்ளூர் புகுந்தான். அது பெறாத கொல்லிமலை மக்கள் அவனை எதிர்த்து ஆர்ப்பறித்தனர். இதனால் மலைவாழ்நர் ஓரியின்பால் கொண்டிருந்த அன்பு புலனாகும். இதனை,

காரிக் குதிரைக் காரியொடு மலைந்த
ஓரிக் குதிரை ஓரியும் என வாங்கு (சிறுபா. 1954)

விழவும் மூழ்ந்தன்று, முழவும் தூங்கின்று
எவன் குறித்தனல்கொல் என்றி ஆயின்
தழை அணிந்து அலமரும் அல்குல், தெருவின்
இளையோள் இறந்த அனைத்தற்கு, பழ விறல்
ஓரிக் கொன்ற ஒரு பெருந் தெருவில்
காரி புக்க நேரார் புலம்போல்,
கல்லென்றால், ஊரே அதற்கொண்டு
காவல் செறிய மாட்டி, ஆய்தொடி
எழில் மா மேனி மகளிர்
விழு மாநர்தனர், தம் கொழு நரைக் காத்தே
(மருதம் : 320, கபிலர்)

கொல்லெனச் சிரித்து கண்டார் கண்ணையும் கருத்தையும் கவர்ந்து அணங்கும் கொல்லிப்பாவை கொல்லி எனவும் அம்மலையை ஆண்டவன் ஓரி என்பதனை,

வேழம் வீழ்ந்த விழுந்தொடைப் பகழி
பேழ்வா யுழுவையைப் பெரும்பிறி துறீஇப்
புழற்றலைப் புகர்க்கலை யுருட்டி புரற்றலைக்
கேழற் பன்றி வீழ வயல
தாழற் புற்றத் துடுப்பிற் செற்றும்
வல்வில் வேட்டம் வலம்படுத் திருந்தோன்
புகழ்சால் சிறப்பி னம்மிகத் திளைக்கும்
கொலைவன் யார்கொலோ கொலைவன் மற்றிவன்
விலைவன் போலான் வெறுக்கைநன் குடையன்
ஆரந் தாழ்ந்த வம்பகட்டு மார்பிற்
சார லருவிப் பயமலைக் கிழவன்
ஓரிக் கொல்லோ வல்லன் கொல்லோ
பாடுவல் விறலியோர் வண்ண நீரும்
மண்முழா வமையின் பண்யாழ் நிறுமின்
கண்விடு தூம்பிற் களிற்றுயிர் தொடுமின்
எல்லரி தொடுமி னாகுளி தொடுமின்
பதலை யொருகண் பையென வியக்குமின்
மதலை மாக்கோல் கைவலந் தமினென்
றிறைவ னாகலிற் சொல்லுபு குறுகி
மூவேழ் துறையு முறையுளிக் கழிப்பிக்

கோவெனப் பெயரிய காலை யாங்கது
தன்பெய ராகலி னாணி மற்றியாம்
நாட்டிட னாட்டின் வருது மீங்கோர்
வேட்டுவ னில்லை நின்னொப் போரென
வேட்டது மொழியாவும் விடாஅன் வேட்டத்திற்
றானுயிர் கெழுத்த மானினைப் புழுக்கோ
டானுருக் கன்ன வேரியை நல்கித்
தன்மலைப் பிறந்த தாவி னன்பொன்
பன்மணிக் குவையொடும் விரைஇக் கொண்மெனச்
சுரத்திடை நல்கி யோனே விடர்ச்சிமை
ஓங்கிருங் கொல்லிப் பொருநன்....... (பரணர்)

மழவர் பெருமகன் வல்வில் ஓரி என்பதனை,

மாக்கொடி அதிரற் பூவொடு பாதிரித்
தாத் தகட்டு எதிர் மலர் வேய்ந்த கூந்தல்
மணம் கமழ் நாற்றம் மரீஇ. யாம் இவன்
சுணங்கு அணி ஆகம் அடைய முயங்கி
வீங்கு உவர்க் கவவின் நீங்கல்செல்லேம்
நீயே, ஆள்வினை சிறப்ப எண்ணி, நாளும்
பிரிந்து உறை வாழ்க்கை புரிந்து அமையைலையே
அன்பு இலை, வாழி, என் நெஞ்சே வெம்போர்
மழவர் பெரு மகன் மாவள் ஓரி
கை வளம் இயைவது ஆயினும்
ஐதே கம்ம, இயைந்து செய் பொருளே
(நற்றிணை 52 : பாலத்தனார்)

கொல்லிப் பாவை (Killer Woman)

இயற்கை எழில் கொஞ்சும் கொல்லிமலையில் மா, பலா, வாழை, கொய்யா, ஆரஞ்சு முதலிய பழமரங்களின் சோலை மிகுந்து காணப்பட்டது. சித்தர்களும் முனிவர்களும் தனித்து வாழ்வதற்கும் தவம் புரிவதற்கும் உகந்ததாகவும் விளங்கியது. இதனால் சித்தர்களும் முனிவர்களும் அங்கு வாழ்ந்து தவம் செய்து வந்தனர். இதனை அறிந்த அசுரர்களும் இராட்சதர்களும் அங்கு வந்து கூடுவாராயினர். இவ்வாறு

இவர்கள் வந்து கூடவே முனிவர்களின் தவத்திற்கு பல்வேறு இடையூறுகள் ஏற்பட்டன. அப்போது தேவர்களாளும் முனிவர்களாளும் அப்பகைவர்களை அடக்கவோ, எதிர்க்கவோ முடியவில்லை. இந்நிலையில் இவர்கள் தாங்கள் உற்ற துன்பத்தினை விஸ்வகர்மாவை அழைத்துக் கூறினார்கள்.

கொல்லிப்பாவையின் வரலாறு சங்க இலக்கியங்களில் பல்வேறு விதமாகக் கூறப்படுகிறது. கொல்லிப்பாவை என்பது கொல்லி மலைமேல் சித்தர்களால் செய்து வைக்கப்பட்ட ஒரு பதுமை. தமிழ் இலக்கியங்களின் கூற்றுபடி கொல்லிப்பாவை ஒரு இயந்திர மனிதனைப் போன்ற (Robot like structure) தோற்றத்தில் கல்லால் உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வுருவினை விஸ்வகர்மா என்ற ஒரு தெய்வீகக் கலைஞனால் காண்போர் கண்டு மயங்கும் வண்ணம் அழகமைந்த பெண் வடிவமாக உருவாக்கப் பட்டுள்ளது. அசுரர்களையும் இராட்சதர்களையும் அழிக்கும் வகையில் பல அரிய சக்திகளை உள்ளடக்கியதாக அச்சிலை வடிவமைக்கப்பட்டுள்ளது. அசுரர்களின் வாடை பட்டவுடன் நகைக்கும் திறமும், காண்போரின் விழியும் உள்ளமும் கவர்ந்து அவர்களுக்குப் பெரும் காமவேட்கை வருவித்து இறுதியில் கொல்லத்தக்க மோகினி வடிவம் அமைத்து அங்கே பிரதிஷ்டை செய்தார் எனக் கூறப்படுகிறது.

இப்பாவையை நோக்கினோர் அசசக்தி இயங்குவதையும், நகைப்பதையும் கண்டு மடந்தை போலும் என மயங்கி காமநோய் கொண்டு அருகே நெருங்கும்போது அதன் மாய சக்தியால் அவரைக் கொன்றுவிடும்.

கொல்லிப்பாவை அய்யாற்றின் சித்தம் குட்டு உச்சியில் (Siddham Kuttu Peak) ஏறத்தாழ 4500 அடி உயரத்தில் நிறுவியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. தற்போது அங்கே கொங்கு ஆயி (Kongu Ayi) என்னும் கோயில் நிறுவப்பட்டுள்ளது. கொல்லி என்ற வார்த்தை ஒரு வனத்தைக் குறிக்கும் என்பது ஒரு தொன்மையான விளக்கம். கொல்லி மலைப்பகுதி அடர்ந்த கொடிய காடுகளைக் கொண்டு விளங்குவதாலும், நிலம், காடு, மலை போன்றவைகளை இலக்கியப் போக்கில் பெண்பாலாகக்

கருதியமையாலும் இதனை கொல்லிப்பாவை என அழைக்கப்பட்டது.

கொல்லிமலையானது, அடர்ந்து கொடிய விலங்குகளைக் கொண்டு மனித வாழ்விற்கு உகந்ததாக இன்றி கொடூர தன்மையினைக் கொண்டிருந்தமையால் இது கொல்லிமலை என்று அழைக்கப்பட்டதாகவும் கருதப்படுகிறது. முக்காலத்தில் இதன் கொடிய தன்மையினால் இங்கு வாழும் பழங்குடியினரின் தனித்தன்மையை அன்னியர்கள் யாரும் உள்ளே நுழைந்து கெடுத்துவிடாமல் ஒரு குறிப்பிட்ட காலம்வரை நிலைநிறுத்தி யிருத்ததாகவும் கூறப்படுகிறது.

கொல்லிப்பாவையைப் பற்றி சங்க காலப் புலவர்களான கல்லாடனார், கபிலர், பரணர் போன்றவர்களால் பலவாறு சிறப்பித்துப் பாடப்பட்டுள்ளன. கொல்லிப்பாவை காற்று, இடி, மின்னல், மழை, பூகம்பம் போன்றவற்றால் அழியா என்பதைக் குறித்துப் பாடப்பட்டுள்ளது.

செவ்விய வேர்ப்பலாவின் பயன்பொருந்திய கொல்லிமலைத் தெய்வம் காவல்புரியும் குறையற்ற நெடிய சிகரங்களின்று வழியும் அழகிய வெண்மையான அருவி பாயும் மேற்குவரையகத்து என்பதனை பரணரால் குறிப்பிடப் பட்டுள்ளது.

மலை உறை குறவன் காதல் மட மகள்
பெறல் அருங்குரையாள், அருங் கடிக் காப்பினள்
சொல் எதிர் கொள்ளாள், இளையள், அனையோள்
உள்ளங் கூடாது என்றோய்! மற்றும்
செவ் வேர்ப் பலவின் பயம் கெழு கொல்லித்
தெய்வம் காக்கும் தீதுநீர் நெடுங் கோட்டு,
அவ் வெல் அருவிக் குட வரையகத்து,
கால் பொருது இடிப்பினும், கதழ் உறை கருகினும்
உரும் உடன்று எறியினும், ஊறு பல தோன்றினும்

பெரு நிலம் கிளரினும், திரு நல உருவின்
மாயா இயற்கைப் பாவையின்
போதல் ஒவ்லாள் என் நெஞ்சத் தானே (நற்றிணை,201)

கடவுள் எழுதிய கொல்லிப்பாவை என்பதனை,

அயத்து வளர் பைஞ்சாய் முகுந்தின் அன்ன
நகைப் பொலிந்து இலங்கும் எயிறு கெழு துவர் வாய்,
ஆகந்து அரும்பிய முலையின், பனைத் தோள்,
மாத் தாட் டுவனை மலர்பிணைந் தன்ன
மா இதழ் மழைக் கண், மா அயோளொடு
பேயும் அறியா மறை அமை புணர்ச்சி
பூசல் துடியின் புணர்பு பிரிந்து இசைப்ப
கரந்த கரப்பொடு நாம் செலற்கு அருமையின்
கடும் புனல் மலிந்த காவிரிப் பேரியாற்று
நெடுஞ்சுழி நீத்தம் மண்ணுநன் போல
நடுங்குஅஞர் தீர முயங்கி நெருநல்
ஆகம் அடைந்தோளே வென் வேற்
களிறு கெழு தானைப் பொறையன் கொல்லி
ஒளிறு நீர் அடுக்கத்து வியல் அகம் பொற்பக்
கடவுள் எழுதிய பாவையின்
மடவது மாண்ட மா அயோளே (அகநா. பரணர்)

பெரிய அணிகலத்தைப் பூண்டுள்ள சேரனுக்குரிய அச்சம் தருதலில் மிக்கதான கொல்லி மலையிலுள்ள கரிய கண்களையுடைய தெய்வத்தால் அம்மலையின் மேல்பால் எழுதி வைக்கப்பெற்ற நல்ல அழகினையுடைய கொல்லிப்பாவை என்பதனை குறுந்தொகை நூலின் பரணர் பாடியுள்ளார்.

பாஅடி உரல பகுவாய் வள்ளன
ஏதில் மாக்கள் நுவறலும் நுவல்ப
அழிவது எவன்கொல்இப் பேதை ஊர்க்கே
பெரும்பூண் பொறையின் பேஎம் முதிர் கொல்லிக்
கடுங்கட் தெய்வக் குடவரை எழுதிய
நல்இயல் பாவை அன்னமும்
மெல் இயல் குறுமகள் பாடினள் குறினே

(குறுந்தொகை, மருதம், 89)

ஓவியம் போலும் அழகினையுடைத்தாகிய இடமுடைய இல்லின்கண் கொல்லிப்பாவை என்பதனை மற்பித்தியாரின் பாடல் தெளிவாக்குகின்றன.

ஓவந் தன்ன விடனுடை வரைப்பிற்
பாவை யன்ன குறுந்தொடி மகளிர்
இழைநிலை நெகிழ்ந்த மன்னற் கண்டிகும்
கழைக்க ணெடுவரை யருவி யாடிக்
கான யானை தந்த விறகிற்
கடுந்தெறற் செந்நீ வேட்டுப்
புறந்தாற் புரீசடை புலர்ந்து வோனே (புறநானூறு, 251)

இம்மலையில் கொல்லிப்பாவை தவிர பிற தெய்வங்களும் இருந்ததாகக் கருதப்படுகிறது. புத்த மற்றும் ஜெயின் இன முனிவர்களும் ஏராளமான கோயில்களை நிறுவியிருந்தனர் என்றும் அவற்றுள் ஒன்றில் தீர்த்தங்கரரின் கல் வடிவம் உள்ளதாகவும் கூறப்படுகிறது. இங்கு புகழ்பெற்று விளங்கும் அரப்பளீஸ்வரர் கோயிலானது உண்மையிலேயே இந்துமத ஆதிக்கத்தின் முன்பு ஒரு ஜெயின் இன முனிவர்களின் கோயிலாக விளங்கியது. இத்துடன் பத்ரகாளி (Bhadhrakali), புத்தர் (Buddar), கன்னிமார்கள் (Kannimars), கிருஷ்ணன் (Krishnan), மகிசாசுர மர்த்தினி (Mahishasura Mardhini) மற்றும் பண்டாரா அப்பன் (Pandara Appan)கோயில்களும் உள்ளன. இங்கு ஏராளமான ஜெயின் மகாவீர் மற்றும் அவரது சீடர்களின் கற்சிலைகள் காணப்படுகின்றன. இம்மக்களும் இச்சிலைகளை வழிபட்டு வந்திருக்கின்றனர். இருப்பினும் இவர்கள் ஜெயினிசம் (Jainism) அதன் தத்துவங்கள் பற்றிய அறிவினைப் பெற்றிருக்கவில்லை.

அரப்பளீஸ்வரர் கோயில்

இச்சிவன்கோயில் மிகவும் பழமைவாய்ந்ததாகும். இதனை அரப்பளீஸ்வரர் ஆலயம் எனவும் அழைக்கப்படுகிறது. இக்கோயில் கி.பி. 7ம் நூற்றாண்டில் வாழ்ந்த அப்பர் சுவாமிகளால் குறிப்பிடப்பட்டுள்ளது. இவரது பக்திப் பாடல்களின் தொகுப்பான தேவாரத்தில் வலப்பூர் நாடு

என்னும் இடத்தில் அமைந்துள்ளதாகவும் இங்குள்ள கடவுள் அரப்பள்ளி உடையார் என்றும் விவரித்துள்ளார். மேலும் இக்கோயிலுக்கு அருகாமையில் உள்ள நீரருவியில் சிவபெருமான் வாழ்ந்ததாக ஒரு நாட்டுப்புறப் பாடல் தொடர்புபடுத்திப் பாடப்பட்டுள்ளது. இந்நீர் அருவி ஏராளமான மீன்களைக் கொண்டிருந்ததாகவும் இவைகள் தெய்வீகத் தன்மையைப் பெற்றிருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இம்மீன்கள் கோயிலின் பூசை மணி அடிக்கத் தொடங்கியவுடன் பூசாரியார் அளிக்கும் உணவினைப் பகிர்ந்துண்ண ஒன்று கூடுவனவாகவும குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தெய்வீக மீன்களை இங்கு வாழ்ந்த மக்கள் கொன்றமையினால் சிவபெருமான் சினங்கொண்டு அவர்களை அழித்ததாகவும் கூறப்படுகிறது. இன்றளவும் இங்குள்ள மக்கள் தங்கள் கோரிக்கைகள் நிறைவேறினால் இம்மீன்களில் ஒன்றுக்கு தங்க மூக்குத்தி அணியவேண்டுமென்ற உறுதிமொழியைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கொல்லிமலை நாடு

கொல்லிமலை நாடு எனப்படுவது கொல்லி மலைவாழ் மக்களின் அரசின் கீழ் இருந்த வனப்பகுதிகளைக் கொண்டிருந்த ஒரு மலைப்பகுதியாகும். இப்பகுதி இராசிபுர நாட்டின் ஒரு பகுதியாக விளங்கியது. கொல்லி மலை நாடு 14 சிறுசிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவையாவன :

1. ஆலத்தூர் (Alathur), *2.* ஆரியூர் (Ariyur), *3.* பெயில் (Bail), *4.* சித்தூர் (Chittur), *5.* தேவானூர் (Dhevanur), *6.* இடப்புளி (Edapuli), *7.* குண்டானி Gundani), *8.* குண்டூர் (Gundur), *9.* குர்க்கா (Kurka), *10.* முண்டூர் (Mundur), *11.* பூரக்கரை Perakarai), *12.* செலூர் (Selur), *13.* தூசூர் (Thusur), *14.* திண்ணனூர் (Thinnanur), *15.* திருப்புளி (Thirupuli), *16.* வளப்பூர் (Valapur), *17.* வாளவவந்தி நாடு (Valavandhi Nadu)

இக்கொல்லிமலை நாடு தற்போது நாமக்கல், இராசிபுரம் என இரு பெரும் வட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இப்பகுதி 86.81 சதுர கிலோமீட்டர் தூரப்

பரப்பளவும் 256 கிராமப்புறப் பகுதிகளும் கொண்டுள்ளது. இப்பகுதி தற்சமயம் கொல்லிமலை ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் இயங்கி வருகிறது.

இம்மலையின் உச்சிக்குச் செல்ல காளப்பநாயக்கன் பட்டியிலிருந்து வாகனங்கள் செல்லுவதற்கு 17 கொண்டை ஊசி வளைவுகளைக் கொண்ட நெடுஞ்சாலை ஒன்று உண்டு. இங்கிருந்து பல பாதைகள் பல்வேறாகப் பிரிந்து 'மலையாளி' எனப்படும் மலைவாழ் மக்களின் குடியிருப்புகளுக்குச் செல்கின்றன. இங்கு வாழும் மலையாளிகள் இருமலையின் முகடுகளின் வனப்பகுதிகளில் வாழ்ந்து வருவதோடு திராட்சை, ஆரஞ்சு, அன்னாசி, வாழை போன்ற பழவகைத் தாவரங்களையும், நெல் திணை, சாமை போன்ற உணவுப் பயிர்களையும் பயிரிட்டு வருகின்றனர்.

மலையாளிகள்

மலையாளி என்னும் சொல் மலையில் வாழ்பவர்களைக் குறிப்பிடும் ஒரு சொல் ஆகும். இவ்வினத்தவர்கள் சேலம் மாவட்டத்திலுள்ள அருனூற்று மலை, போதிமலை, கல்ராயன் மலை, கொல்லி மலை, பச்சை மலை, பால மலை, மற்றும் சேர்வராயன் மலை பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர். கேரள மாநிலத்தில் வாழும் மலையாளிகளுக்கும் இவ்வினத்தவர் களுக்கும் பெயரளவில் ஒற்றுமையிருந்தாலும் இவ்விரு இனத்தவர்களும் ஒன்றுபட்டவர்கள் அல்ல.

மலையாளி என்னும் பெயர்ச்சொல் மலையில் வாழ்பவர்கள் என்பதனை எளிதாக உணர்த்தவும், சமவெளிப் பகுதிகளில் வாழும் மக்களிடமிருந்து வேறுபடுத்தவுமே எளிதாக மலையாளி என்றழைக்கப்பட்டனர். இருப்பினும் கேரளவாழ் மலையாளிகளின் தாய்வழி தோன்றல் எனக் கருதத் தோன்றுமென ஒரு சிலரும், நாகரீக - வரலாற்றுக் கூறுகளின் இடையுறவை அடிப்படையாகக் கொண்டு விளங்குகின்றன என ஒரு சிலரும் கருதுகின்றனர். இருப்பினும் இவர்களின் வாழ்க்கையானது இதனினும் பழமையானதாகக் கருதப்படுகிறது.

மலையாளிகள் தங்கள் புறத்தோற்றத்தாலும், அகத்தோற்றத்தாலும் சமவெளிப் பகுதிகளில் வாழ்பவரைவிட சற்றே மாறுபட்டுக் காணப்படுகின்றனர். இவர்கள் தமிழ்மொழியை தங்கள் சொந்த நடையிலேயே இன்றளவும் பேசி வருகின்றனர்.

தோற்றம் (Origin)

இவர்களின் தோற்றம் குறித்துப் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. இவர்கள் காஞ்சிபுரம் வெள்ளாளர் மரபுவழி தோன்றலால் இவர்கள் காஞ்சி மண்டல வெள்ளாளர் என அழைக்கப்பட்டனர். இவர்கள் கொங்கு நாட்டில் வாழும் கொங்கு வெள்ளாளர் (Kongu Vellalar)களிடமிருந்து வேறுபடுத்து வதற்காக கார்காத்த வெள்ளாளர் (Karkatha Vellalar)என்றும் அழைக்கப்பட்டனர். இந்துக்களின் சாதி அடிப்படையில் இவர்கள் காராளர் (Karalar) என்றும் காராள முதலி (Karala Mudhali) என்றும் அழைக்கப்பட்டனர். கார் ஆளர் என்றால் மேகங்களை ஆள்பவர்கள் (Rulers of the Clouds) எனப்படும். இவர்கள் தங்களின் சொந்தப் பெயருடன் தாங்கள் இன்னஇனத்தைச சார்ந்தவர்கள் என்பதனை குறிப்பிடுவதற்காக கவுண்டர் (Kavandar) என்ற சொல்லையும் சேர்த்துக் கொள்கின்றனர்.

அரப்பளீஸ்வரர் கோயில் கல்வெட்டுகளில்

"கொல்லி மலை குற்றகநாடு மலையாள நாட்டோம்"

என்றும்

"கொல்லி மலை நாட்டு மலையாளரோம்"

என்றும் குறிப்பிடுகின்றார்.

இக்கல்வெட்டு 11ம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும். இதனால் இம்மக்கள் காஞ்சிபுரத்திலிருந்து கொல்லி மலைக்குக் குடியேறிய காலம் 11ம் நூற்றாண்டிற்கு முன்பே எனலாம்.

இம்மக்கள் கொல்லி மலையாளிகள்தான் என்ற உண்மை கொல்லிமலையில் செம்மேட்டில் அமைந்துள்ள சிவன்கோயில் சுற்றுச்சுவரில் காணும் எழுத்துக்கள் உறுதி செய்வதோடு இம்மக்கள் இக்கோயிலுக்கு அளித்த

பங்களிப்பினையும் எடுத்து இயம்புகிறது. (மகாலிங்கம் 1978). இக்கல்வெட்டு எழுத்துக்கள் 11ம் நூற்றாண்டினை சேர்ந்ததாக நம்பப்படுவதால் இவர்களின் மூதாதையர்கள் இந்நூற்றாண்டிற்கு முன்பாகவே வந்திருக்க வேண்டும். மேலும் இம்மலையின் பல்வேறு பகுதிகளில் காணும் மகாவீர், அவர்களின் சீடர்களின் கற்சிலைகள் இம்மக்கள் 7ஆம் நூற்றாண்டில் இராஜ மகேந்திரனின் ஆட்சி காலத்தில் ஜெயினிசம் மறையத் தொடங்கியபோது இங்குக் குடியேறியிருக்க வேண்டும் என்பதை அறிவுறுத்துகிறது. (துரைசாமி, 1988).

ஒரு சிலர் இவர்களை இம்மலை முழுவதும் வியாபித்து உண்மையாகவே வேட்டையாடும் இனத்தைச் சார்ந்த வேட்டுவர்களின் (Vettuvar) மரபினர் வழித்தோன்றியிருக்கலாம் எனவும் கருதுகின்றனர். கிடைத்திருக்கும் கல்வெட்டுப் பொறிப்புகளின் ஆதாரங்கள் மூலம் இவர்கள் காஞ்சிபுரத்திலிருந்து ஏழாம் மற்றும் பதினொன்றாம் நூற்றாண்டு களில் இடம்பெயர்ந்து இங்கு வந்திருக்கக்கூடும் எனக் கருதுகின்றனர். இவர்கள் இப்போது காஞ்சிபுரத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்தது தங்கள் கடவுளான ஹரிஹரனை சுதந்திரமாக தங்கள் மதச் சடங்குகளின்படி வணங்குவதற்கும், நல்வாய்ப்பு வளந்தரும் நிலங்களைத் தேடியும் வந்திருக்கலாம் எனவும் கருதப்படுகிறது. இவர்கள் காஞ்சிபுரத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்ததாகக் கருதப்படும் இக்கருத்து கொங்கு வெள்ளாளர்க்கிருக்கும் பொதுவான கருத்தே ஆகும்.

மலையாளி இனத்தவர்கள் பரம்பரை பரம்பரையாக இயற்கையோடு முழுமையாக இயைந்த வாழ்வினையே வாழ்ந்து வந்து கொண்டிருக்கின்றனர். அவர்கள் தங்களது எளிய வாழ்விற்குத் தேவையானவற்றையே இயற்கை அன்னையிடமிருந்து எடுத்துக் கொள்கின்றனர். அவர்கள் வேண்டுமென்றோ, தேவைக்கு அதிகமாகவோ இயற்கை வளங்களை எடுத்துக் கொள்வதும் இல்லை அவற்றை அழித்து விடுவதும் இல்லை. இருப்பினும் இவர்களது இடமாற்று விவசாயமுறை (Shifting cultivation) பழங்கால முறை என்றாலும், மலைவாழ் மக்கள் குடியிருப்பனைச் சுற்றியுள்ள வனப்பகுதிகள் அழிந்து வருவதற்குக் காரணமாக உள்ளது.

காலங்கிநாதர் - கொல்லிமலை இரகசியம்

இம்மலையில் விளையும் அரிய மூலிகைகளைப் பற்றியும், அம்மூலிகை மருந்து செய்முறை பற்றியும் பதினென் சித்தர்களும் கூறியுள்ளனர். அவர்களில் காலங்கிநாதர் மிகவும் குறிப்பிடத்தக்கவர் ஆவார். இவர் "கொல்லிமலை இரகசியம்" அல்லது "மலைவளம் - 500" என்ற மருத்துவ நூலை இயற்றியுள்ளார். இந்நூலில் 64 அரிய மூலிகைகளைப் பற்றி 500 பாடல்களில் தொகுத்துக் கூறியுள்ளார். இந்நூலில் உரை நடையிலும் வெளியிடப்பட்டுள்ளது.

காலங்கிநாதர் கூறும் 64 மூலிகைகளில் 27 வகைச் செடிகளும், 19 வகை மரங்களும், 10 வகை செடிகளும், 4 வகைக் கள்ளிகளும், 3 வகைக் கிழங்குகளும், ஒரு புல்லும் விவரிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் பெரும்பாலானவை விசத்தன்மை இல்லாதவை. இவற்றை சமூலமாக எடுத்து நிழலில் உலர்த்திப் பொடி செய்து திரிகடி பிரமாணம் 40 நாட்களுக்கு இருவேளை வீதம் உண்டால் நரைதிரை நீங்கி சிங்கத்தைப் போன்ற வலிமையும், மன்மதனைப் போன்ற அழகும் பெறலாம் என்றும் கூறப்பட்டுள்ளது. மேலும், இம்மூலிகைச் சாறுகளைக் கொண்டு ரச, கந்தக பாசானங்களை அரைத்து பற்ப, செந்தூர வகைகள் செய்யும் முறையும், உபயோகிக்கும் முறைகளும் அவற்றால் தீரும் வியாதிகளும் விவரிக்கப்பட்டுள்ளன. கோரக்கர், தாம் குறிப்பிட்டுள்ள இவ்வறுபத்து நான்கு மூலிகைகளும் கிடைக்கக்கூடிய இடங்களையும் விரிவாக சுட்டியுள்ளார்.

கோரக்கர் குகை சமீபம்

கொல்லிமலை அருவிநீர் பாயும் ஓடை வழியாகச் சென்றால் ஒரு குன்றும் இதில் ஒரு குகையும் அதன் தென்புறம் ஒரு அகழியும் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார். இதனை "கோரக்கர் குண்டம்" அல்லது "கோரக்கர் குகை" என வழங்குவர். இப்பகுதியில் கருநீலி "கருநெல்லி மரம்", கல்பிரமி, கருவாழை, சர்க்கரை வேம்பு, கமுபூத விருட்சம், அழுகண்ணி, தொழுகண்ணி, பேய் தேத்தன், உரோம விருட்சம் முதலியன கிடைக்கும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சோரமடையான் கோயில் பகுதி

அரப்பள்ளீஸ்வரர் கோயிலுக்கு வடபால் 3 கல் தொலைவில் மலைவாசிகளின் குலதெய்வமான சோரமடையான் கோயில் உள்ளது. இப்பகுதியில கரு ஊமத்தை, சர்க்கரைக் கோவைக் கொடி, கருநொச்சி, ஜடைவிருட்சம் முதலியன கிடைப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொல்லிப் பாவைக்கு அருகாமை

கொல்லிப் பாவையை பகவதி, மலைக்கண்ணி, கொல்லித்தாய் எனவும் தமது மூலமந்திரத்தில் குறிப்பிட்டுள்ளார். இப்பாவை சோரமடையான் கோயிலிருந்து மேற்குப்புறமாக ஒரு மைல் தூரத்தில் அமைந்துள்ளது. இப்பகுதியில் மயூரசிகை, குண்டலம்பாளைக்கொடி முதலியன கிடைக்கின்றன.

பெரியண்ணசாமி கோயில் சோலை

கொல்லிமலைக்குக் கிழக்கே இரண்டு மைல் தூரத்தில் ஒரு குன்றின்மேல் இக்கோயில் காணப்படுகிறது. குதிரையில் அமர்ந்து திரிசூலம் ஏந்தியபடி வேட்டைக்குச் செல்லும் வீரனின் கதை மண் சிற்பமாகக் காட்சியளிக்கின்றது. இப்பகுதியில் சிவந்த தில்லை, செங்குமரி, செந்தாடு பாவை, கடும்பசலை, கற்பூர வில்வம், முப்பிரண்டை, கண்எருமை விருட்சம், கருடக்கோடி முதலியன கிடைக்கின்றன. இக்கோயிலுக்குச் செல்லும் வழியில் மேற்குப்புறம் அருவிக்குக் கீழே ஜோதி மரம் உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அருவிக்கு மேற்குப்புற பகுதி

அருவியின் அருகே கல்தாமரை, மூவிலை குருந்து முதலியன விளைகின்றன. மேலும் இலையுதிரா மரம், ஏறுசிங்கி முண்டக விருட்சம், கருவீழி முதலியனவும் காணப்படுகின்றன.

நீர் ஊற்று உள்ள இடங்களில் கருங்கையான் செடி விளைவதாகவும், பெரியாநங்கை, சிகப்பு நாயுருவி, செந்திராய், சிவந்த கீழாநெல்லி, செந்தும்பை, சிறியா நங்கை, வெண்துத்தி, வெள்ளை ஆவாரை, பொன் ஊமத்தை, கல்வேம்பு, நத்தைச்சூரி முதலியன பரவலாக எல்லா இடங்களிலும் விளைவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அதிசய மூலிகைகள்

செந்திராய்

இது ஒரு குத்துச் செடி வகையைச் சேர்ந்தது. கொடிய விசத்தன்மையைக் கொண்டது. இதன் நடுத்தண்டில் ரம்பம் போன்ற முள் உண்டு. இதன் பூ சிவந்த தாமரைப் பூ போன்றது. இதன் இலை மேலே பட்டால் அரிக்கும். இரும்பு, செம்பு, தங்கம் முதலியவற்றை இவ்விலைச் சாற்றில் ஊறப்போட 20 நாட்களில் உருகிவிடும் தன்மைக் கொண்டது. இச்செடி 23 காய சித்தி மூலிகைகளில் ஒன்றாகக் குறிப்பிடப்படுகிறது.

செங்கொடி

இதனை சிகப்பு 'சித்திரமூலம்', 'கொடி வேலி' எனவும் அழைக்கப்பட்டது. இக்கொடி வெப்பத் தன்மைக் கொண்டது. இவ்விலைச் சாற்றில் கொதிக்கும் தாமிரத் தகட்டைத் தோய்த்தால் வெள்ளையாக உதிரும். இதை எடுத்து அரைத்துப் புடமிட்டு தாமிர பஸ்பம் செய்யப்படுகிறது. பலவகை குட்ட நோய்களைத் தீர்க்கும் ஆற்றல் பெற்றது. துருசு சுண்ணம், ரச செந்தூரம் இம்மூலிகையின் காற்றைக் கொண்டே சுத்திசெய்து தயாரிக்கப்படுகிறது. இம்மூலிகையிலிருந்து தயாரிக்கப்பட்ட தமராதி பஸ்பம் தருமுக்கூடல் ஆதுவர் சாலையில் இருப்பு வைக்கப்பட்ட செய்தியை வீர ராசேந்திரன் கல்வெட்டு உரைக்கின்றது. மேலும், இதைப் பயிரிட 'செங்கொடிக் காணம்' என்ற வரி வசூலிக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

செந்தாடு பாவை

இச்செடி மனிதரைக் கண்டால் காற்றில் ஆடி அலையும். பருத்திச் செடிபோல் இலையும் இதன் காயும் இருக்கும். இதைக் கொண்டு நவலோக செந்தூரம் தயாரிக்கலாம். இச்செடி இனம் கண்டுபிடிக்கப்படாத மூலிகைகளில் இதுவும் ஒன்று.

சோதிவிருட்சம்

இரவில் நெருப்புப் பற்றி எரிவதுபோல் ஒளி இருக்கும். ஊமத்தைச் செடியின் இலைபோல் இதன் இலை இருக்கும். இதன் பூவானது நீலநிறத்தைக் கொண்டிருக்கும். இதன் பால்

(Latex) போதை உண்டாக்கக்கூடியது. இதன சமூலத்தைக் கசாயம் வைதது உண்டால் ஆறு நாட்கள்வரை போதையைக் கொடுக்கும தன்மைக் கொண்டது. இம்மரத்தில் துளை செய்து பாதரசததை ஊற்றித துளையை மூடிவிட்டு, அறுபது நாட்கள் கழித்துப் பார்த்தால் பாதரசம் மணியாக மாறும். எனவே, இதனை 'சித்தா குடியிருபபு' என்றும், 'நிலஞ்சோதி', 'இரவெறிமரம்' எனறும அழைககப்பட்டது

சோதிப்புல்

இப்புல் சுமார் நான்கு விரற்கடை உயரம கொண்டது. இதைப பாலில் போட்டால் பால இரத்தம் போலாகும். ரசமணி செயய இப்புலலின சாறு பயனபடும இரவில இதில் மின்மினிபபோல ஒளியுணடாகும் 'இராவெரி புல்', 'தீப்புல்' எனவும அழைக்கப்பட்டது.

ஆனை எருமை விருட்சம்

இது ஒருவகைச கள்ளிச்செடி இனத்தைச் சார்ந்தது இதன் இலை எருமையின் நாக்கு போன்றிருக்கும். இதன பால் (Latex) சுவை உடையது. போதை தரும (Intoxication) தன்மைக் கொண்டது. மனிதரைக் கண்டால் கனைக்கும். இக்கள்ளிச்செடி பசி தாகம நீங்கி, உடல காய சித்தியாகும்.

நாய்க்குட்டி மரம்

ஆஙகிலததில் Pup-Tree எனகின்றனா. இம்மரத்தின் அடியில் சென்றால நாய்ப்போல் குரைக்கும். இதன் விதை ரப்பர் நார் போனற வடிவம கொண்டது இது அருந்துக் கீழே விழுநதவுடன் காயாகும எனபடுகிறது.

சாக்கரை வேமபுக் கொட்டை பலாக் கொட்டைபோல் இருக்கும் சர்க்கரை போல் இனிக்கும். சாயாவிருட்சததின் நிழல் பூமியில் படியாது. சிவந்த தில்லை என்னும் கல்லியின் பால் சிகப்பாக இருக்கும.

தொழுகனனிஎன்னும் சல்லியகரனி மரம் துண்டிக்கப்பட்ட மனித உறுப்புகளை ஒட்டவைககும சக்தி கொண்டது என்பன பல அரிய செயதிகளைக் காலங்கிநாதரின் கொல்லிமலை இரகசியம் கூறுகிறது.

கொல்லிமலையின் மூலிகைச் செல்வங்கள்

கொல்லிமலையின் பெருமையை 'கொல்லிமலைக் கலிங்கம்', சதுரகிரிப் புராணம், கோரக்கர் மலை வாகடம், மற்றும் 'தம்மம்பட்டிச் சுவடிகள்' எடுத்து இயம்புகின்றன. சித்தர் ஏடுகளில் இம்மலை 'சதுரகிரி' என்று அழைக்கப்பெறும். இம்மலையில் அமைந்துள்ள கோளக்காடு சோலை வளமிக்கது. இச்சோலையைச் சுற்றி அரியூர் சோலை, மதிகெட்டான் சோலை, மதல் சோலை, பொங்கியச் சோலை, பெரியசாமிக் கோயில் (செம்மேடு) ஆகியனவுள்ளன. சுமார் 1450 மீட்டர் உயரத்தில் பெரிய சோலையும், குழிவலவும், சுமார் 1250 மீட்டர் உயரத்தில் சேலூரர், சேர்த்துப்பாறை, செம்மேடு ஆகியனவும் உள்ளன. சுமார் 100 மீட்டர் உயரத்தில் இருக்கும் கோயிலூரைச் சுற்றி குனதார் மற்றும் சூலவந்திச்சோலைகள் அமைந்துள்ளன. இங்குக் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துச் சோலைகளிலும், தோல் வியாதிகள், தொழுநோய், மஞ்சள் காமாலை, தாக்காய் வலிப்பு, நீரிழிவு, காசநோய், மூலநோய், எலும்பு முறிவு, வாதநோய், பால்வினை நோய்கள் போன்றவற்றிற்கு மருந்தாகப் பயன்படத்தக்க எண்ணற்ற மூலிகைகள் கிடைக்கின்றன. மேலும் வேம்பு, பலா, புளி முதலிய மரங்களும் மிகுந்து சோலையாக அடர்ந்து காணப்படுகின்றன. சந்தனம் இங்கு அதிக அளவில் விளைகின்றன.

இம்மலையில் அனைத்துக கிழங்கு வகைகளும் நன்கு வளர்ந்து விளையக்கூடிய மண்வளம் கொண்டது. எனவே, இங்கு வள்ளிக்கிழஙகு (Dioscorea spp.) வகைகளும் நன்கு வளர்கின்றன இதிலிருந்து பெறப்படும டையோஜெனின் (Diosgenin) என்னும் பொருள்கள் குடுமபக் கட்டுப்பாட்டுக்கு உதவுவதாகவும், இதனால் இப்பொருளுக்கு அயல்நாடுகளில் அதிக வரவேற்பு உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. சிறநத வேர் மருந்தான நன்னாரி (Hemidesmus indicus) இங்கு தான் அதிகமாக விளைகின்றது. மேலும் அழுகணணி, தொழு கண்ணி, கரு ஊமத்தை போன்ற புற்றுநோயினைக் குணப்படுத்தும் மூலிகைத தாவரங்கள் அதிகம் காணப்படுகின்றன.

கல்தாமரை, ஈரிலைத் தாமரை, மூவிலைத் தாமரை, கொடித் தாமரை மற்றும் ஓரினத் தாமரை போன்ற சிறந்த தாவர அறிவியற் பெயர் கண்டறியப்படாத மூலிகைகளும் இங்கு கிடைப்பதாகக் கேள்வி. இத்தகைய மூலிகைச் செல்வங்களையும் தன்னகத்தே கொண்டு விளங்கும் இம்மலை சாதுக்களின் புகலிடகமாகவும், கொல்லிமலையின் உறைவிடமாகவும், பிணி தீர்க்கும் மூலிகைக் கடலாகவும் இருந்ததாகச் சங்கத் தமிழ் இலக்கியமும், சித்தர் வைத்தியக் குறிப்புகளும் கூறுகின்றன.

இலட்சுமணன் மற்றும் கல்யாணி (1988) என்போர் பிணிகளும் அவற்றைத் தீர்க்கும் மூலிகைகளும் என்று கீழ்க்கண்டவாறு வரிசைப்படுத்தியுள்ளனர்.

1. அசீரணம்

இஞ்சி (Zingiber officinale Rosc.), எட்டி (Strychnos nux-vamica L.), ஓமம் (Pimpinella heyneana Wallich), கசகசா (Papaver somniferum L.), கருமிளகு (Piper nigrum L.), கடுகு (Brassica juncea (L.) Cosson), காட்டிஞ்சி (Zingiber zerumbet (L) Rose.) , குடசப்பாலை (Holarrhena pubescens (Buch. Ham.) Wall. ex DC.), சிறியா நங்கை (Andrographis paniculata (Brum.f.) Wall. ex Nees), சீந்தில் கொடி (Tinospora cordifolia (Willd.) Miers ex Hook. f. & Thoms.), சீரகம் (Cuminum cyminum L.), திருநாகப்பூ (Mammea surgia (Buch. Ham. ex. Roxb.) Koesterm.), தும்புரு (Zanthoxylum rhetsa (Roxb.) DC.), பொன்முதட்டை (Cissampelos pariera L.), வசம்பு (Acorus calamus L.), வில்வம் (Aegle marmelos (L.) Corr.), வெந்தயம் (Trigonella foenum - graecum L.) மற்றும் வெற்றிலை (Piper betle L.).

2. இதய நோய்கள்

கோடைப்புளி (Garcinia indica Choisy), தும்புரு (Zarthoxylum rhetsa (Roxb.) DC. மற்றும் நாகேசுரம் (Mesua nagassarium (Burm.f) Kosterm.

3. ஈரல் நோய் மற்றும் நரம்புக் கோளாறு

கழற்சி (Caesalpinia borduc (L.) Roxb.

4. எலும்பு முறிவு

சீந்தில் கொடி (Tinospora cordifolia (Willd.) Merr.), *மற்றும் விராலி* (Dodonaea viscosa (L.) Jacg.)

5. கண்ணோய்

கடுக்காய் (Terminalia pallida Brandis) *மற்றும் சிறு குறிஞ்சா* (Gymnema sylvestre (Retz.) Roem & Schult..).

6. காக்காய் வலிப்பு

எட்டி (Strychnos nux - vomica L.), *அருகம்புல்* (Cyanodon dactylon (L) Pers.) , *ஓரிதழ்த் தாமரை* (Hybanthus enneaspermus (L.) Muell.), *தண்ணீர்விட்டான் கிழங்கு* (Asparagus racemosus Willd.) *மற்றும் பிரண்டை* (Cissus quadrangularis L.).

7. காய்ச்சல்

எட்டி (Strychnos nux-vomica L.) , *குன்றிமணி* (Abrus precatorius L.), *சிறுபாகவள்ளி* (Cyclea peltata (Lam.) Hook.f. & Thoms.), *சீந்தில் கொடி* (Tinospora cardifolia (Willd.) Merr.), *நன்னாரி* (Hemidesmus indicus L.) *நுலும்பாணல்* (Uvaria narum (Dunal) Wall. ex W. & A.), *வாய்விளங்கம்* (Embelia ribes Burm. f.), *வில்வம்* (Aegle mermelos (L.) Corr.) *மற்றும் வெட்டி வேர்* (Vetveria zizanoides (L.) Nash.)

8. காலரா

ஈசுவரமூலி (Aristolochia indica L.) *திப்பிலி* (Piper longum L.) *மற்றும் தும்புரு* (Zanthoxylum rhetia (Roxb) DC.).

9. சளி

கருமிளகு (Piper nigrum L.) *மற்றும் கள்ளி கூந்தல்* (Clematis gouriana Roxb).

10. குதகக் கோளாறுகள்

சீந்தில் செடி (Tinospora cordifolia (Willd.) Merr.), *செவ்வள்ளிக்கொடி* (Rubia corifolia L.), *பிரண்டை* (Cissus

quadranguleris L.), பொன்முதட்டை (Cissampelos pariera L.), மக்கிப்பால் (Garcinia motella (Garetn.) Desr.), *மஞ்சள் கரிசாலை* (Wedelia chinensis (Osb.) Merr.) *மற்றும் மாசிக்காய்* (Quercus infectoria L).

11. சோகை

அதிமதுரம் (Glycyrrhiza glabra L.) , *கடுக்காய்* (Terminalia chebula Retz.), *சீந்தில்கொடி* (Tinospora cordifolia (Willd.) Merr.), *நன்னாரி (Hemidesmus indicus (L.) R.Br.), நெல்லி* (Emblica officinalis Gaertn.); *மூக்கிரட்டை* (Boerhavia diffusa L.) *மற்றும் மூங்கில்* (Bombosa arundinacea (Retz.) Roxb.

12. தொண்டைப்புண்

குன்றிமணி (Abrus precatorius L.), *சித்தரத்தை (Alpinia* galanga (L.) Willd.), *நாகஙேகசுரம்* (Mesua nagassarium (Burm. f.) *மற்றும் பலா* (Artocarpus heterophyllus Lam.). '

13. தொழுநோய்

அரளி (Nerium indicum L.), *இஞ்சி* (Zingiber officinale Rosc), *ஈசுரவமூலி* (Aristolochia indica L), *உத்திராட்சம்* (Elaeocarpus serratus L), *எருக்கு* (Calotropis gigantea (L.) R.Br.), *கார்போகி* (Psoralea corylifolia L.), *கீழாநெல்லி* (Phyllanthus amarus L.), *கருஊமத்தை* (Citrullus colocynthis Schrad.), *கொத்துமல்லி* (Leptadenia reticulata (Retz.) W. & A.), *சங்குங்குப்பி* (Clerodendrum inerme (L.) Gaert), *சங்கு புஷ்பம்* (Clitoria ternatea L.), *சண்பகம்* (Michelia champaca L), *சிவனார்* (Indigofera aspalothoides Vahl ex. DC.), *சிறுகுறிஞ்சா* (Gymnema sylvestre (Retz. & Schult.), *சிறுபாக வள்ளி (Cyclea peltata (Lam) Hook f & Thoms), சென்னா (Cassia* angustifolia L.), *தண்ணீர்விட்டான கிழங்கு* (Asparagua racemosus Willd.), *தான்றிக்காய்* (Terminalia bellerica (Gaertn) Roxb., *திருநாகபூ*, (Mammea surgia (Buch-Ham.) Koesterm), *தும்பை* (Leucas aspera Spreng), *துளசி* (Ocimum sanctum L), *நத்தைச்சூரி* (Spermacoce hispida L.), *நாகமல்லி* (Rhinacanthus naustus (L.) Kurz), *நெலலி* (Embelica officinalis Gaertn.), *பீநாரி* (Ailanthus excelsa Roxb.), *புங்கு* (Pongamia p.nnaata (L.) Pierre), *மிளகரணை*

(Toddalia asiatica) (L) Lamk, மூங்கில் (Bombusa arundinacea (Retz.) Roxb), வால்மிளகு (Piper cubeba L.f.), வாலுழுவை (Celastrus paniculatus Willd), விஷ்ணு கரந்தை (Evolvulus alsinoides L.), வேங்கை (Pterocarpus marsupium Roxb) மற்றும் வேம்பு (Azadirachta indica Juss.).

தோல் நோய்கள்

அசோகா (Saraca asoca (Roxb.) de Wilde), ஆடாதோடை (Adathoda vasica Nees), ஈசுவர மூலி (Aristolochia indica), எட்டி (Strychnos nux-vomica L.), ஒடுவன் (Cleistanthus Collinus (Roxb.) Benth), கலப்பை கிழங்கு (Gloriosa superba L), கஸ்தூரி மஞ்சள் (Curcuma aromatica Salisb), காட்டுக்கொடி (Cocculus hirsutus (L.) Diels),, காட்டுப்புடல் (Cocculus hirsutus (L) Diels), காட்டுப்புடல் (Trichosanthos cucumerina L.), குடசப்பாலை (Holarrhena pubescens (Buch - Ham) Wall ex DC.), குன்றிமணி (Abrus precatorius L), சந்தனம் (Santalum album L), செஞ்சந்தனம் (Pterocarpus santalinus L), செவ்வள்ளிக்கொடி (Rubia cordifolia L.), தேக்கு (Tectona grandis L.f), நன்னாரி (Hemidesmus indicus R.Br.), நாப்பூத்தாளி (Sterculia foetida L), நாகேசுரம் (Mesua nagassarium (Burm f) Kosterm), நாயுருவி (Achyranthua aspera L), நிலப்பனை (Curculigo orc... Gaertn), நுலும்பாணல் (Vuaria narum (Dunal) Wall ex ...), பலா (Atrocarpus heterophyllus Lam); பேன்கொட்டை (Anamirta coculus (L.) W.&A), பொன்குதண்டி (Salacia oblonga Wall), மஞ்சள் கரிசாலை (Wedelia chinensis (Orb) Merr.), வலம்புரி (Helectres isora L.), வள்ளி (Dioscorca alata L), வாய்விளங்கம் (Embelica ribes Burm f.), வில்வம் Aegle marmelos (L.) மற்றும் வேம்பு (Azadirachta indica L).

15. நீரிழிவு

அசோகா (Saraca asoca (Roxb.) de Wilde), சித்தரத்தை (Alpinia galanga (L)Willd.), சிறுகுறிஞ்சா (Gymnema sylvestre (Retz.) Roem & Schult), சீந்திலகொடி (Tinospora cordifolia (Willd.) Miers ex H & T), தான்றிக்காய (Terminalia bellerica (Gaertn) Roxb), நெல்லி (Embelica officinalis Gaertn) மற்றும் வலம்புரி (Helectres isora L)

16. சுவாச காசம் மற்றும் மார்ச்சளி

அதிமதுரம் (Glycyrrhiza glabra L.), ஆடாதோடை (Adathoda vasica Nees), இலவங்கம் (Cinnamomum macrocarpum Hook.f.), ஈசுவரமூலி (Aristolochia indica L.), எருக்கு (Calotropis gigantea (L) Br.), கடுக்காய் (Terminalia chebula Retz.,), கருமிளகு (Piper nigrum L.), கிராம்பு (Syzigium aromaticum Merr), குன்றிமணி (Abrus precatorius L), சிறியா நங்கை (Andrographis paniculata (Burm.f.) Wall.ex Nees), சிறுகுருஞ்சா (Gymnema sylvestre (Retz.) Roem. & Schult), சிறுபாகவள்ளி (Cyclea peltata (Lam.) Hook.f Thoms.), சித்திரததை (Alpinia galanga (L.) Willd), தான்றிக்காய் (Terminalia bellerica (Gaertn) Roxb), திருக்கள்ளி (Euphorbia tirucalli L.), திப்பிலி (Piper longum L), தும்புரு (Zanthoxylum rhetsa (Roxb) DC.), நாககேசுரம் (Mesua nagasiarium (Burm.f.) Kostarm)., நிலப்பனை (Curculigo orchioides Gaertn.), நெல்லி (Emblica officinalis Gaerth), பிரண்டை (Cissus quadrangularis L.), பீனாரி (Ailanthus excelsa Roxb), பெரியா நங்கை (Andrographis alata (Vahl) Nees), மஞ்சள் கரிசாலை (Wedelia chinensis (Orb.) Merr), மூக்கிரட்டை (Boerhaavia diffusa L), வசம்பு (Acorus calamus L.), வாய்விளங்கம் (Embelia ribes Burn f.), வாலுழுவை (Celastrus paniculatus Willd.), வில்வம் (Aegle marmelos (L). Corr.), விஷ்ணு கிரந்தை (Evolvulus alsinoides L) , வள்ளி (Dioscorea alata L) வேங்கை (Pterocarpus marsupium), வேலிப்பருத்தி (Pergularia daemia (Forssk.) Chiov.

17. பல்வலி

கடுக்காய் (Terminalia chebula Retz.), திருக்கள்ளி (Euphorbia tirucalli L)

18. பித்தம்

ஆகாச காய்ச்சி (Diplcclisia glaucescens (Bl.) Dies), இலவங்கம் (Cinnamomum macrocarpum Hook f) , சிறுகுறுஞ்சா (Gymnema sylvestre (Retz.) Roem & Schult.), தேக்கு (Tectona grandis L f), நெல்லி (Emblica officinalis Gaertn), வேங்கை (Pterocarpous marsupium Roxb).

19. புற்றுநோய்

அழுகண்ணி (Drosera burmanii Vahl.), ஊமத்தை (Datura metel L) , தொழுகண்ணி (Desmodium motorium (Houti) Merr

20. மஞ்சள் காமாலை

கரிசாலை (Edipta alba L.), *கீழாநெல்லி* (Phyllanthus fraternus Webst.), *சிறுபாகவள்ளி* (Cyclea peltata Lam.) Hook f. & Thoms.), *சீந்தில் கொடி* (Tinospora cordifolia (Willd.) Miere ex Hook. f. & Thoms.), *செவ்வள்ளிக் கொடி* (Rubia cordifolia L.) *நிலப்பனை* (Curculiga orchioides Gaertn.), *நெல்லி* (Emblica officinalis Gaertn.), *நுலும்பாணல்* (Uvaria narum (Dunal) Wall. ex W. & Arn.), *மூங்கில்* (Bombusa arundinacea (Retz.) Roxb.).

21. மூல நோய்

அசோகா (Saraca asoca (Roxb.) de Wilde), *கடுக்காய்* (Terminalia chebula Retz.), *கலப்பைக் கிழங்கு* (Gloriosa superba L.), *குடப்பசலை* (Holarrhena pubescens (Buch.-Ham.) Wall. ex DC.), *கோடைப்புளி* (Garcinia indica Choisy), *சீறுபாகவள்ளி* (Cyclea peltata (Lam.) Hook. f. & Thom.), *சீந்தில் கொடி* (Tinospora cordifolia (Willd.) Miers.), *செவ்வள்ளிக் கொடி* (Rubia cordifolia L.), *தும்புரு* (Zanthoxylum rheta (Roxb.) DC.), *தேக்கு* (Tectona grandis L.f.) , *நாகேசுரம்* (Mesua nagassarium (Burm.f.) Kosterm.), *நாயுருவி* (Achyranthes aspera L.), *நிலப்பனை* (Curculigo orchioides Gaertn.), *நெல்லி* (Emblica officinalis Gaertn.) *பிரண்டை* (Cissus quardrangularis L.) , *புங்கு* (Pongamia pinnata (L.) Pierre), *மூங்கில்* (Bombusa arundinacea (Retz.) Roxb.), *வேம்பு* (Azadirachta indica Juss.).

22. மேக, பால்வினை நோய்கள்

ஆகாசம் காய்ச்சி (Diploclisia glaucescens (Bl) Diels), *எருக்கு* (Calotropis gigantea (L.) R.Br.), *காட்டுக்கொடி* (Cocculus hirsutus (L.) Diels), *கிர்த்தி* (Maesa indica (Roxb) DC.) . *சிறியா நங்கை* (Andrographis paniculata (Burm.f.) Wall.ex Ness), *திருநாமப் பாலை* (Smilax zeylanica L), *நன்னாரி* (Hemedesmus indicus (L.) R.Br.), *நெருஞ்சில்* (Tribulus terrestris L.), *பொன் முதட்டை* (Cissampelos pariera L).

23. யானைக்கால் நோய்

கடுக்காய் (Terminalia chebula Retz.).

24. வயிற்றுப்புண்

எட்டி (Strychnos nux-vomica L.), கடுக்காய் (Terminalia chebula Retz.), கீழாநெல்லி (Phyllanthus fraternus Webst.), சாதிக்காய் (Myristica fragrans Hoult), நாகசேசுரம் (Mesua nagessarium (Burn.f) Kosterm.), பிரண்டை (Cissus quadrangularis L.), புங்கு (Pongamia pinnata (L.) Pierre.), பேன் கொட்டை (Anamirta cocculus (L.) W.&A.), வேம்பு (Azadirachta indica A.Juss.).

25. வயிற்றுப்போக்கு

இலவங்கம் (Cinnamomum macrocarpum Hook.f.), ஈசுவரமூலி (Aristolochia indica L.), கீழாநெல்லி (Phyllanthus fraternus Webst.), கோடைப்புளி (Garcinia indica Choisy), சிறியாநங்கை (Andrographis paniculata (Burm.f.) Wall.ex Nees), சிறுபாகவள்ளி (Cyclea peltata (Lam), Hook.f & Thoms.), தும்புரு (Zanthoxylum rhetra (Roxb.) DC), தேக்கு (Tectona grandis L.f.), பலா (Artocarpus heterophyllus Lam.), பிரண்டை (Cissus quadrangularis L.), பொன்முதட்டை (Cissampelos pariera L.), மாசிக்காய் (Quercus infectoria L.), வலம்புரி (Acorus calamus L.), வாய்விளங்கம் (Embelica ribes Burm.f.) , வில்வம் (Aegle marmolos (L.) Corr.), விஷ்ணு கிரந்தை (Evolvulus alsinoides L.), வேலிப்பருத்தி (Pergularia daemia (Forssk.) Chiov.).

26. மூட்டு வலி/வாதம்

ஈசுவர மூலி (Aristolochia indica L.), எருக்கு (Calotropis gigantea (L.) R Br.), காட்டுக்கொடி (Cocculus hirsutus (L.) Diels), குடகப்பாலை (Holarrhena pubescens (Buch.-Ham.) Wall. ex DC.), சித்தரத்தை (Alpinia galanga (L.) Willd.), சீந்தில் கொடி (Tinospora cordifolia (Willd.) Miers ex Hook f & Thoms), திருக்கள்ளி (Euphorbia tirucalli L). திருநாமப்பாலை (Smilax zeylanica L), தும்புரு (Zanthoxylum rhetsa (Roxb) DC.), நன்னாரி (Hemedesmus indicus (L) R Br). நாகசேசுரம் (Mesua nagassaium (Burm.f) Kosterm), நுலுமபாணல் (Uvaria narum (Dunal) Wall ex W & A.), பேன் கொட்டை (Anamirta cocculus (L) W. & A), பொன்கு தண்டி (Salacia oblonga Wall.), மதனகாமம் (Cycas circinalis L.),

மிளகரணை (Toddalia asiatica Lam.), வாலுழுவை (Celastrus paniculatus Willd.), விராலி (Dodonaea viscosa Jacq.), வேங்கை (Pterocarpus marsupium Roxb.), வேம்பு (Azadirachta indica Juss.), வேலிப்பருத்தி (Pergularia daemia (Forssk.) Choiv.

27. விஷமுறிப்பான்

பேன் கொட்டை (Anamirta cocculus (L.) W & A.)

28. வெட்டை

அருகம்புல் (Cyanodon dactylon (L.) Pers.), கடுக்காய் (Terminalia chebula Retz.), தண்ணீர்விட்டான் கிழங்கு (Asparagus racemosus Willd.), நன்னாரி (Hemedasmus indicus (L.) R.Br.), நிலப்பனை (Curculigo orchiodes Gaertn.), வேம்பு (Azadirachta indica Juss.).

29. வெறிநாய்க்கடி

நாயுருவி (Achyranthes aspera L.)

30. இதய பிணி தீர்க்கும் மூலிகைகள்

அமுக்கிறா (Withiania somnifera (L.) Dunal), ஆகாச கருடன் (Corallocarpus epigaeus Hook.f.), ஆதெண்டை (Capparis zeylanica L.), காட்டுக்கருணை (Amarphophallus sylvaticus Kunth), குருவேர் (Coleus vetiveroides Jacob), கூவைக்கிழங்கு (Costus speciosus (Koen.) Sm.), சித்திரமூலம் (Plumbaga zeylanica L.), பூமிச்சர்க்கரைக் கிழங்கு (Macrua arenaria Hook f. & Thoms.) இதுபோன்ற தாவரங்களாகும்.

சமீப காலங்களில், இம்மலையின் தாவர வளத்தைப் பற்றியும், அத்தாவரங்களின் உணவு மற்றும் மருத்துவப் பண்புகளைப் பறறியும் பல்வேறு வல்லுநாகளிடையே விழிப்புணர்வு ஏற்பட்டு ஆய்வுகள் பல மேற்கொண்டு வருகின்றனர் அவர்கள் தாம் மேற்கொண்ட கள ஆய்வுகளின் அடிப்படையில் சில ஆய்வுக் கட்டுரைகளும், ஆய்வுத் தொகுப்புகளும் வெளியிட்டுள்ளனர் (Dwarakan & Ansari, 19..; Vijaya & Saroja, 1993, Dwarakan et al., 1994, Lakshmi, 1995; D...

& Ansari, 1996; Geetha, 1996; Geetha *et al.*, 1996). இவற்றில் Geetha (1996) என்பார் தம் ஆய்வுத் தொகுப்பில் குறிப்பிட்டுள்ள கீழ்க்கண்ட தாவரங்களின் மருத்துவப் பயன்கள் மிகவும் குறிப்பிடத்தக்கவைகளாகும்.

விஷமுறிப்பான்

நாயுருவி (Achyranthes aspera) மற்றும் பண்ணை (Celosia argentea) - தேள் கடிக்கு மருந்தாகின்றன. ஆகாச கருடன் (Corallocarpus epigaeus) மற்றும் நாகமல்லி (Sansevieria roxburghiana) - பாம்பு கடிக்கு மருந்தாகின்றன. வெள்ளருகு (Enieostemma axillare) - பூச்சி கடிக்கும், வரப்புளா (Securingea leucopyrus) - அட்டைக்கடிக்கும், புண்ணாக்குப் பூண்டு (Justicia tranquebariensis) - எலிக்கடிக்கும் மருந்தாகும்.

தட்டம்மை

ஆணைத்தளை (Clansena dentata)

Atgkete's foot : சேத்துப்புண் தழை (Plectranthus barbatus and Plectranthus coleoidus)

கொப்புளங்கள்	(Cleome gynandra L., Callicarpa tomentosa (L.) Murray.
மூலநோய்	Arisaema leschenaultii Bl., Bischofia javanica Bl.,
நீரிழிவு	Cadaba fruticosa (L.) Druce.
வாயிற்றுப்புண்	Begonia malabarica Lam.
பல்வலி	Justica tranquebaricanca L., Toddalia asiatica (L.) Lam., Zanthoxylum tetraspermum Wight & Arn.
சளி மற்றும் இருமல்	Andragraphis alata (Vahl.) Nees, Caralluma umbellata Wight & Arn., Micrococca mercurialis L.

மாதவிடாய் நோய்கள்	Cipadessa baccifera (Roth) Miq., Enicostemma axillare L., Syzygium cumini (L.) Skeels., Toona ciliata Roem.
கருத்தடை செய்ய	Pergularia daemia (Forsk.) Chiov., Sansevieria roxburghiana L.,
கண் நோய்களுக்கு	Blepharis maderaspatensis (L.) Roth., Sarcostemma intermedium L., Thunbergia fragrans Roxb.
காதுவலி	Canna indica L., Justicia betonica L., Ecbolium viride (Forsk.) Alston.
மூட்டு வலி	Balanophora fungosa subsp. ındica (Arn.) Hansen, Symplocos cochinchinensis subsp. laurina (Retz.) Nooteb.
புத்துயிர் ஊட்டுபவை	(Rejuvenators) : Bombusa arundinacea L., Curculigo orchioides Gaertn , Drynarıa quercifolia (L.) Sm. Phyllanthus embelica L , Symploco cochinchinensis (Lour.) Moore., Terminalia bellarica (Gaertn.) Roxb., Terminalia chebula L.

கொல்லிமலையின் இயற்கை அமைப்பு

இம்மலை நாமக்கல் மாவட்டத்தில் பரவிக் காணப்படும் கிழக்குத் தொடர்ச்சி மலையின் (Eastern Ghats) ஒரு பகுதியாகும். இம்மலை சுமார் 418.5 சதுர கிலோ மீட்டர் வரை (11'' 11-11'' 30 N latitude and 75" 30" E longitude) பரவியுள்ளது. இது கடல் மட்டத்திலிருந்து சுமார் 1000 மீ - 1500 மீ வரை உயர்ந்து காணப்படுகிறது. இங்கு பெய்யும் சராசரி மழையின் அளவு கிட்டத்தட்ட 1200 மி.மீ ஆகும். இங்கு நிலவும் வெப்பம் 10^0 - 30^0 ஆகும். பூமியின் அமைப்பில் நிலற்றியல் படிவுகள் கிரனைட் நைஸ் (Granite gneiss) சார்கோகைட் (charockites) பாறைகளாக உள்ளன. மண்ணின் அடிப்படையில் கரிசல் மண் (Black Soil) மற்றும் செம்மண் (Red Soil) காணப்படுகின்றன. இங்கு காணும் தாவரங்கள் நான்கு பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன (படம் - 1).

தாவர வளங்கள்

இங்கு வளரும் தாவரங்களை நான்கு பெரும்பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இம்மலையில் 400 மீ உயரம் வரை முட்புதர்களும் (Scrub jungles)' 300 - 900 மீ உயரமுள்ள சரிவுகளில் இலையுதிர்க் காடுகளும் (Deciduouse forest), 800 - 1300 மீ உயரம் வரை பசுமரக்காடுகளும் (Sub-tropical hill forests). 1200 முதல் 1600 மீ உயரம் வரை அடர்ந்த சோலைகளும் உள்ளதாக கே.எம்.மாத்யூ அவர்களால் 1976ல் மதிப்பிடப்பட்டுள்ளன. இங்கு காணப்படும் தாவரங்கள், தாவர அளவீட்டின்படி கிட்டதட்ட 916 தாவரங்கள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுளளன. இவற்றில் 854 வரை பூக்கும் தாவர இனங்களும் (Flowering plants), 57 டெரிடோபைட்டுகளும் (Pteridophytes), ஜிம்னோஸ்யர்களும் (Gymnosperms), ஆகும் இம்மலைத் தொடர்ச்சியில் பருவ மழைக்காடுகள் மிஞ்சியப் பகுதிகளாகக் கொண்டு இன்றும் காணப்படுகிறது இங்கு காணும் வரண்ட இலையுதிர்ககாடுகள் மனிதர்களின் அளவுக்கதிகமான செயல்களால் முட்புதர்க்காடு களாக மாறி வருகின்றன.

இங்கு காணும் முட்புதர்க் காடுகளில் Alangium salvifolium, Albizzia amara, Erthroxylum monogynum, Capparis grandis, Commiphora caudata, Hugonia mystax, Dicrostachys cinerea, Atalantia monophylla, Securinega leucopyrus, Catunaregam spinosa, Gyrocarpus asiaticus, Givotia rottleriformis, Commiphora berryi போன்றவைகளும், திறந்த வெளிப் பகுதிகளில் Euphorbia antiquorum, Ziziphus oenoplia, Pisonia aculcata மற்றும் Opuntia dillenii போன்ற தாவரங்களும் காணப்படுகின்றன.

இலையுதிர்க் காடுகளில் சுமார் 600 மீ உயரத்திற்கு மேல் Anogeissus latifolia, Bauhinia racemosa, Cassia fistula, Terminalis paniculata, Pterolobium hexapetalum, Aglaia elagnoidea, Lannea coromandelica, Ventilaga madraspatana, Flaucourtia indica, Sapindus emarginatus, Hiptage benghalensis மற்றும் Maytenus emarginata போன்ற தாவரங்களும் காணப்படுகின்றன.

இம்மலையின் 800 மீ உள்ள இலையுதிர் காடுகளில் Memecylon lushingtonii, M.edule, Olea glandulifera, Syzygium cumini, Mallotus phillippensis, Meliosma simplicifolia, M pinnata, Grewia tiliaefolia, Citus tetrandra, Clausena dentata, Litsea glutinosa, Veronia arborea மற்றும் Ligustrum perrottetii போன்ற தாவரங்களும் காணப்படுகின்றன.

இம்மலையின் பள்ளத்தாக்குப் பகுதிகளில் சோலைகள் மிகுந்து காணப்படுவது இம்மலையின் சிறப்பு அம்சமாகும். இச்சோலைகளில் Bischofia javanica, Myristica dactyloides, Toona ciliata, Prunus ceylanica, Epiprinus mallotiformis, Phoebe wightii, Litsea oleoides, Cinnamomum malabatrum, Artocarpus heterophyllus, Neolitsea scrobiculata, Ficus talbotii மற்றும் Ficus microcarpa போன்ற தாவரங்கள் காணப்படுகின்றன

காடுகள் திருத்தி அமைக்கப்பட்ட பகுதிகளில் மரங்களும், குறுஞ்செடிகளும் காணப்படவில்லை. இப்பகுதிகளில் Atylosia albicans, Spermacoce hispida, Themeda triandra, Leucas aspera, Croton bonplandianum போன்ற தாவரங்கள் காணப்படுகின்றன. சாலையோரங்களில் Lantana

camera மற்றும் Parthenium hysterophorus போன்ற தாவரங்கள் அடர்ந்து காணப்படுகின்றன.

இம்மலையில் Crytocarya neilghorensis, Ciclawsonii, Bulbophyllun neilgherrense, Drymaria kollimalayana, Fimbristylis uliginosa, Oberonia ensiformis, O santapaui, Ochna obtusata, Tropidia angulosa, Epipogium roseum, Vaccinium neilgherrense போன்ற தாவரங்கள் மிகக் குறைந்தளவிலேயே காணப்படுகின்றன (லக்ஷ்மி, 1995).

சீதா (1996) என்போர் கொல்லிமலையில் வாழும் சில தாவரங்களை அவற்றின் பயன்பாட்டு அடிப்படையில் கீழ்க்கண்டவாறு பரிந்துரை செய்துள்ளார்.

கால்நடைகளுக்கேற்ற தீவனப்பயிர்களாக Acacia pennata, Albizia odoratissima, Acacia tora, Vitex altissima, Phyllanthus polyphyllus, Celtis tetrandra, Ventilago madraspatna, Elaeagnus indica மற்றும் Stephania japonica போன்ற தாவரங்களை சமூக காடு வளர்ப்பு (Social Forestry) மற்றும் காடுகள் வளர்ப்பு (Reforestation) போன்ற திட்டங்களுக்கு உகந்ததாகவும் அறிவுறித்தியுள்ளார்.

மேலும் Aglaia tamilnadensis, Atalantia monophylla, Clausena dentata, Gardenia resinifera, G perrottetii, M.edule, Phoebe paniculata, Plecospermum spinosum மற்றும் Wrightia tinctoria போன்ற மரங்கள் சக்தி மரக்காடுகளில் வளர்க்க உகந்தவைகள் என்றும் எடுதது‌ரைத்துள்ளார். இத்துடன், Cinnamomum malabatrum, Premna tomentosa போன்றவற்றின் இலைகளும், Myristica dactyloidesவின் விதைகள் நறுமணத் தாவர வரிசையில் சேர்க்கலாம் என்றும் குறிப்பிட்டுள்ளார்

இங்கு வாழும் மக்கள், சில மரங்களை வழிபட்டு வருவதோடு, அவற்றின் தெய்வீகத் தன்மையையும நன்கு அறிந்துள்ளனர் Ficus religiosa, Toona ciliata, Syzygium cumini, Dalbergia latifolia, Claussena dentata, Artocarpus heterophyllus, Mimosope elingi மற்றும் Azadirachta indica போன்ற மரங்கள் தெய்வீக மரங்களாகவும் (Sacred Trees) குறிப்பிட்டுள்ளார்.

லட்சுமி (1995) என்பார் இங்கு வளரும் தாவரங்களை அவற்றின் பயன்பாட்டிற்கேற்றவாறு வகைப்படுத்தியுள்ளார்.

தழைச்சத்தாகும் தாவரங்கள்

Croton laccifer, Ammora canarana, Cıpadessa baccifera, Maesa indica, Claussena dentata, Toona ciliata போன்ற தாவரங்கள்.

கால்நடை தீவன தாவரங்கள்

Cassia montana, Claussena dentata, Mimusops elengi, Maesa indica, Vitex altissıma, Euonymous indicus, Ventılago madraspatana, Anogeissus latifolia, Scutia myrtına, Albızıa odoratissima, Trema orientalis, Celtis tetrandra, Grewia tiliifolia போன்றவை.

சிறு விளைப்பொருட்கள் தரும் காட்டுத் தாவரங்கள்

காடுகளிலிருந்து கிடைக்கும் காய், கனி, விதை, தேன், மெழுகு போன்ற பொருட்கள் கீழ்க்கண்ட தாவரங்களிலிருந்து பெறப்படுகின்றன. Termınalıa chebula, T.bellırıca, Myrıstıca dactyloıdes, Cinnamomum malabatrum, Phyllanthus embelıca, Acacia sinuata, Sapindus emarginatus, Buchananıa lanzen, Strychnos nux-vomica, Pongamia pınnata, Ventilago maderespatana, Artocarpus heterophyllus, Drypetes sepiaria, Semecarpus anacardıum, Mallotus philippensis போன்ற தாவரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

சிறு மரத்தேவைகளுக்கான தாவரங்கள்

வண்டிச் சக்கரம், அச்சு, நுகத்தடி மற்றும் கலப்பை போன்றவை செய்வதற்கு Acacia ferrugınea, A leucophloea, Memecylon lushıngtonii, Aibizia amara, Anogeısus latıfolia, Chloroxylon swietenıa, Acacia chundra, Pherocarpus marsupium, Dalbergia lanceolata, Terminalıa paniculata போன்ற தாவரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

எரிபொருளாகும் தாவரங்கள்

Alseodaphne semecarpifolia, Limonia acıdissıma, Canthium dicoccum, Phoebe paniculata, Atlantıa monophylla, Albizia amara,

Chloroxylon swietenia, Anogeissus latifolia, Wrightia tinctoria, Gmelina arborea, Mamecylon lushingtonii, *Toona ciliata, Terminalia* paniculata, Aglaia elaegnoidea, Acacia leucophloea போன்ற தாவரங்கள் எரிபொருளாகப் பயன்படுத்தப்படுகின்றன.

நார்தரும் தாவரங்கள்

Argyria elliptica, Borassus flabellifer, Cocculus hirsutus, Cocos nucifera, Crotalaris juncea, Furcraca foetida, Gnetum ula, Hibiscus cannabinus, Musa paradisiaca, Oryza sativa, Pandanus fascicularis மற்றும் Sansevieria roxburghiana போன்ற தாவரங்கள் நார்தரும் தாவரங்களாகும்.

இங்கு வாழும் மலையின மக்கள் உணவாகப் பயனபடுத்தும் தாவரங்களைப் பற்றி அன்சாரி (1997) என்பார் 36 வகைத் தாவரங்களைக் கண்டறிந்து வெளியிட்டுள்ளார். இத்தாவரங்களின் பயன்பாடுகள் இடத்திற்கு இடம் மாறுபட்டுக் காணப்படுவதாகவும், இத்தாவரங்களின் பல்வேறு பாகங்கள் பல்வேறு தேவைகளுக்காக, பலவிதங்களில் பயனபடுத்தப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார். மேலும், இத்தாவரங்கள் மாற்று உணவாகப் பயன்படுத்த பெரிதும் உதவும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்தாவரங்களில் Acacia tora, *Brachystelma glabrum*, Capparis divaricata, Elaeagnus indica, Habenaria grandifloriformis, H plantaginea, Indigofera cassioides, Mussaenda hirsutissima, Nothopegia beddomei, Pergularia daemia மற்றும் Securinega leucopyrus போன்றவை குறிப்பிடத்தக்கவைகளாகும்.

உணவாகும் தாவரங்கள் அவற்றின் குடும்பவாரியாக அகர வரிசையில் கீழ்க்கண்டவாறு வரிசைப்படுத்தப்படுகின்றன.

AGAVACEAE

1. Furcria foetida (L.) Haw - சீமைக் கற்றாழை.

இச்செடி பூப்பதற்கு முன்பாக அதன் மட்டநிலத் தண்டினை (Rhizome) வெளிக்கொணர்ந்து, சிறுசிறு துண்டுகளாக நறுக்கி, நீரிலிட்டு, புளியமரத்தின் இலைகளையும்

சேர்த்து நன்றாக கொதிக்க வைக்கப்படுகிறது. இதனால் உண்டாகும் பசையை சிறுசிறு உருண்டைகளாக உருட்டி வைக்கப்படுகிறது. இவ்வுருண்டைகள் சத்துள்ளதாகவும், நற்சுவையுடையதாகவும் இருப்பதால் எவ்வித உணவுமின்றி, இவ்வுருண்டையை ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்குத் தொடர்ந்து உண்ணலாம்.

AIZOACEAE

Giseckia pharnaceoides L. - *மணல் கீரை*

இதன் இலைகள் நன்றாக வேகவைத்து கீரையாக உண்ணப்படுகிறது.

ANACARDIACEAE

Nothopegia beddomei Gamble - *பேய் தேத்தான்*

இதன் நன்கு முதிர்ந்த சாறுள்ள, பழங்கள் உண்ணப்படுகிறது.

ARECAEAE

Caryota urens L. - *கூந்தல் பனை*

இதன் மஞ்சரித் தண்டினை வெட்டுவதா [illegible] யும் பாலினை கள்ளாக உண்ணப்படுகிறது.

ASCLEPIADACEAE

Carallumma umbellata Haw. - *சிறுங்கள்ளி*

இதன் இளந்தண்டுகள் பச்சையாகவோ அல் [illegible] பின்போ உண்ணப்படுகிறது.

ASTERACEAE

Tridax procumbens L. - *வெட்டுக்காயப் பூண்டு*

இதன் இலைகள் கீரையாக உண்ணப்படுகின்றன.

BURSERACEAE

Boswellia serrata Roxb. ex Colebr. - *குங்கிலி.*

இதன் விதைகளை நன்றாக வறுதது உண்ணப்படுகின்றன.

CAESALPINIACEAE

Delonix alata (L.) Gamble - வாதநாராயணன்

இதன் இலைகள் வேகவைத்து கறிசமைத்து உண்ணப்படுகிறது.

CAPPARACEAE

1. Cadaba farinosa Forsk. -

இதன் இளந்தண்டுகளும் இலைகளும் வேகவைத்து உண்ணப்படுகின்றன.

2. Capparis divaricata Lam. - தொரட்டி பழம்.

இதன் நன்கு பழுத்தப் பழங்கள் உண்ணப்படுகின்றன.

ELAEGNACEAE

Elaeagnus indicus Serv. - குரங்கு திராட்சை

இதன் பழங்கள் உணவாக உண்ணப்படுகின்றன. இதன் காய்கள் ஊறுகாயாகவும் பயன்படுத்தப்படுகின்றன.

EUPHORBIACEAE

Bridelia retusa (L.) Spreng. - முள்ளு மருது, முள்ளு வேங்கை

இதன் பழங்கள் உணவாகின்றன.

Securinega leucopyrus (Willd.) Muell. - Arg. - புளாஞ்சி

இதன் பழங்கள் உணவாகின்றன.

FABACEAE

Indigofera cassioides Rottl. ex. DC - நரினா

இதன் இளந்தளிர்கள், பூவின் மொட்டுக்கள் வேகவைத்து காய்கறியாகப் பயன்படுத்தப்படுகின்றன.

Pongamia pinnata (L.) Pierre - புங்கன்

இதன் இளந்தளிர்கள் மற்றும் இளம் பூக்கள் காய்கறியாகப் பயன்படுத்தப்படுகின்றன.

LAMIACEAE

Ocimum gratissimum L. - நல்ல துளசி

இதன் இலைகள் அசைவ உணவு தயாரிக்கும்போது, நற்சுவையும், மணமும் தருவதற்காக சேர்த்துக் கொள்ளப்படுகின்றன.

LILIACEAE

Chlorophytum tuberosum (Roxb.) Baker -

இதன் கிழங்குகள் மற்றும் இலைகள் வேகவைத்து உணவாகப் பயன்படுத்தப்படுகிறது.

MELIACEAE

Aglaia roxburghiana Mig. -

இதன் முதிர்ந்த பழங்கள் உண்ணப்படுகின்றன.

MIMOSACEAE

Acacia nilotica (L.) Del. subsp. indica (Benth) Bren - கருவேலம்

இதன் மரப்பட்டையுடன் வாழைப்பழம் மற்றும் வெல்லமும் சேர்த்து நாட்டுச் சாராயம் காய்ச்ச பயன்படுத்தப்படுகிறது.

Acacia tora (Roxb.) Craib - "இஞ்சி", "செங்கைக் கொடி"

மழைக்காலத்திற்கு பிறகு, இதன் இலைகள் பருப்பு வகைகளுடன் சேர்த்து காய்கறியாகப் பயன்படுத்தப்படுகிறது.

MORACEAE

Ficus racemosa L. - அத்தி, வெள்ளை அத்தி.

இதன் முதிர்வடையா பூ மற்றும் மொட்டுகளை வேகவைத்து கறியாக சமைத்துண்ணப்படுகின்றன.

MYRSINACEAE

Ardisia solanaceae Roxb. - மணி புஷ்பம்

இதன் இளம் பூ மொட்டுக்களை வேகவைத்து காய்கறியாக உண்ணப்படுகின்றன.

ORCHIDACEAE

Habenaria plantaginea Lindl - கிழங்கு

இதன் வெளிரிய கிழங்குகள் நன்றாக கழுவிய பின் பச்சையாக உண்ணப்படுகின்றன.

H. grandifloriformis Blatter & McCann. - கிழங்கு

வறண்ட காலங்களில் இதன் கிழங்குகளைத் தேடி, இதன் சாறு உறிஞ்சப்படுகின்றன.

PASSIFLORACEAE

Passiflora edulis Sims - தபசுக்காய்

இதன் பழங்கள் உண்ணப்படுவதோடு இதிலிருந்து சாறும் தயாரிக்கப்படுகின்றன. இதன் பழங்கள் வெளியிலும் விற்கப்படுகின்றன.

PERIPLOCACEAE

Decalepis hamiltonii Wight & Arn. - மாகாளிக் கிழங்கு

இதன் கிழங்குகள் நன்றாக சுத்தம்செய்து ஊறுகாயாகப் பயன்படுத்தப்படுகின்றன.

RUTACEAE

Clausena dentata (Willd.) Roem. - காட்டுக்காரை, பொட்டி.

இதன் பழங்கள் உண்ணப்படுகின்றன.

Toddalia asiatica Lam.

இதன் பழங்கள் உண்ணப்படுகின்றன.

RUBIACEAE

Mussaenda hirsutissima (Hook.f.) Hatch. ex. Gamble.

இதன் இலைகளும் . பூக்களும் காய்கறியாக பயன்படுத்தப்படுகின்றன.

SAPINDACEAE

Cardiospermum halicacabum L. முடக்கத்தான்

இதன் இலைகளை நன்றாக அரைத்து சட்னியாக பயன்படுத்தப்படுகிறது.

SOLANACEAE

Solanum anguivi Lam. - முள்ளிச்சண்டை

இதன் பழங்கள் கத்திரிக்காயைப் போன்று பயன்படுகின்றன.

S.torvum Sw. - காட்டுச்சுண்டை

இதன் இளந்தளிர்கள் காய்கறியாகப் பயன்படுத்தப்படுகின்றன.

VERBENACEAE

Lantana camara L. - உன்னி

இதன் பழங்கள் உண்ணப்படுகின்றன.

மருத்துவத் தாவரங்கள்

வளர்ந்து வரும் நாடுகளில் ஏறத்தாழ 80% மக்கள் பாரம்பரிய மருத்துவ முறைகளையே முதன்மையாக நம்பியுள்ளதாக உலக சுகாதார நிறுவனம் (World Health Organisation) கணக்கிட்டுள்ளது. இவர்கள் பெரும்பாலும் தாவரத்தையே பெரிதும் மருந்தாகப் பயன்படுத்துகின்றனர். மேலும் உலகில்வாழும் பலதரப்பட்ட பண்பாடுகளையும், பழக்கவழக்கங்களையும் மொழிகளையும் கொண்ட மக்கள் ஏறக்குறைய 20,000 - 30,000 தாவர இனங்களையே பயன்படுத்தி வருவதாகக் கருதப்படுகிறது.

இயற்கை வளத்தைப் பொறுத்தவரையில் இந்தியா, உலகிலேயே வளமான நாடுகளில் ஒன்றாகும். இயற்கை நமக்கு அளித்திருக்கும் வளங்களில் அரிதான ஒன்று மூலிகை வளமாகும். இந்தியாவில் மட்டும் ஏறத்தாழ 45,000 தாவர இனங்கள் உள்ளதாக தாவர கணக்கெடுப்புத் துறையால் கணக்கிடப்பட்டுள்ளது. இவற்றில் 15,000 - 18,000 பூக்கும் தாவரங்களும் (Flowering plants), 23,000 பூஞ்சைகளும் (Fungi), 2500 ஆல்காக்களும் (Algae), 1600 லைக்கன்களும் (Lichens), 1800 பிரையோபைட்டுகளும் (Bryophytes), 30 மில்லியன் நுண்ணுயிரிகளும் (Microbes) அடங்கும். இத்தாவரங்களில் பழங்கால நூல்களில் சுமார் 1500 தாவரங்களின் மருத்துவப் பயன்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றில் 800 தாவரங்கள் பாரம்பரிய மருத்துவத்தில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

மருத்துவத் தாவரங்கள் என்பது மருத்துவப் பண்புகளை தன்னகத்தே கொண்டுள்ள எல்லா உயர்வகைத தாவரங்கள் ஆகும். இவை உடல் நலத்தைப் பேணிப் பாதுகாக்கக் கூடியதாகவோ, நோய் தீர்க்கும் மருந்து மூலப்பொருட்களைக் கொண்டிருப்பதாகவோ, மேற்கூறிய மருத்துவத்தில் நோய் தீர்க்கும் மருந்தாக நிருபணம் செய்யப்பட்டவையாகவோ விளங்கக்கூடிய தன்மை யுடையனவே மருத்துவத தாவரங்கள் எனப்படுகின்றன. இம்மருத்துவத் தாவரங்களின் மருத்துவப் பண்புகள் சித்தா

(Siddha), யுனானி (Unani), ஹோமியோபதி (Homeopathy), ஆயுர்வேதம் (Ayurvedha) மற்றும் ஆங்கில (Allopathy) மருத்துவத்திலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

நாகரிக வளர்ச்சியால் இவ்வரிய மருத்துவமுறைகள் பரவலாகப் புறக்கணிக்கப்பட்ட போதிலும், இத்தாவரங்களின் மேல் மக்களுக்கு நாளுக்கு நாள் ஈடுபாடு அதிகரித்துக்கொண்டே வருகிறது. வளர்ந்த (Developed) மற்றும் வளரும் (Developing) நாடுகளிலும் மருத்துவச் செடிகளுக்குரிய முக்கியத்துவம் கணிசமாக அதிகரித்து வருகிறது.

தாஸ் (Dash, 1998) என்பார், தாவர மருந்துகள் எவ்வாறு வேதியியல் மருந்துகளைவிட மேம்பட்டு சிறந்து விளங்குகின்றன என்பதைக் கீழ்க்கண்டவாறு தொகுத்தளித்துள்ளார்.

- உடலின் நோய் எதிர்ப்புத் திறனை அதிகப்படுத்துதல் .
- உடலின் பிற பகுதிகளுக்கு எவ்வித தீங்குமின்றி, குறிப்பிட்ட நோயினைத் தீர்க்கும் குறிப்பிட்ட செயல் வேகம் (Selective action).
- உடலில் குறைவான பக்கவிளைவுகளை (Side effects) மட்டுமே கொண்டது .
- உடலால் ஏற்றுக் கொள்ளமுடியாத பொருட்களை (non compatible substances) பயனற்றதாக்கி அவற்றை மட்டுப்படுத்துதல்.
- உடலிலிருந்து நோயின் அறிகுறிகளை மறைய செய்வதோடு அந்நோயினை முற்றிலும் குணப்படுத்தும் ஆற்றல் போன்றவைகளாகும்.

நமது முன்னோர்கள் மலைக்காடுகளில் இயற்கையாக வளர்நதுவரும் பல அரிய மருத்துவத் தாவரங்களின் இலை (Leaf), வேர் (Root), வேர்ப்பட்டை (Root bark) மரப்பட்டை (Stem bark), பூ (Flower), பழம்(Fruit) , மற்றும் விதைகள் (Seeds) போன்றவற்றைப் பயன்படுத்தி தங்கள் உடல்நலத்தைப் பேணிப் பாதுகாத்து வந்தனர். இன்றைய நாகரீக மற்றும் நகர்ப்புற

வளர்ச்சியால் காடுகள் பெரிதும் அழிக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் எண்ணற்ற மருத்துவச் செடிகளும் அழிந்து வருகின்றன.

மனிதனின் பலதரப்பட்ட செயல்களால் இன்றும் பல மருத்துவத் தாவரங்கள் விரைவில் அழியும் நிலைக்குத் தள்ளப்பட்டு வருகின்றன. எனவே, மருத்துவத் தாவரங்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டிய அவசியமும் இப்பொழுது ஏற்பட்டுள்ளது. இத்துடன் இத்தாவரங்கள் வாழும் பல்வேறு சூழ்நிலைகள், அவைகள் கிடைக்கக்கூடிய இடங்கள், மரபுவழி மருத்துவத்தின் பயன்பாடுகள் மற்றும் அவற்றின் முக்கியத்துவம் பற்றியும் மக்களுக்குத் தெரிவிப்பதன்மூலம் அவற்றிற்கான விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவதன் வாயிலாக இத்தாவரங்கள் அழியும் அபாயத்தைத் தவிர்க்கலாம். நமக்குத் தேவையான மருத்துவத் தாவரங்களை தாமே உற்பத்தி செய்வதோடு மட்டுமின்றி நம் நாட்டுக்குப் பெருமளவு அன்னியச் செலாவணியையும் ஈட்டித் தரலாம்.

இவ்வாய்வில் கண்டறியப்பட்ட மருத்துவத் தாவரங்களை அவற்றின் மருத்துவப் பயன்பாட்டின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு தொகுக்கப்பட்டுள்ளன

1.	Abortificient - கருக்கலைப்புக்கு	4
2.	Antidot - விஷமுறிவு	8
3.	Aphrodisiac - காமம் பெருக்கியாக	3
4.	Asthma - காச நோய் தீர்வதற்கு	4
5.	Blister - கொப்புளங்கள்	2
6.	Blood purifier - இரத்தத்தைச் சுத்திகரிக்க	1
7.	Body pain - உடல் வலிக்கு	3
8.	Bond fracture - எலும்பு முறிவிற்கு	4
9.	Burns - தீப்புண்களுக்கு	2
10.	Cancer - புற்றுநோய்க்கு	2
11.	Cardiac complaints - இதயக் கோளாறுகளுக்கு	3
12.	Child Birth - குழந்தை எளிதாகப் பிறப்பதற்கு	2

13.	Constipation - மலச்சிக்கலுக்கு	2
14	Cough & Cold - சளி மற்றும் இருமலுக்கு	3
15.	Diabetes - சர்க்கரை நோய்	8
16	Diarrhoea & Dysentry - சீதபேதி மற்றும் வயிற்றுப்போக்கு	9
17.	Ear complaints - காது கோளாறு	2
18.	Emmengogue - பூப்பெய்த	1
19.	Epilepsy - வலிப்புநோய்	3
20.	Eye diseases - கண் நோய்கள்	4
21	Fertility - கருவளம்	2
22	Foot sore - கால் புண்	1
23.	Fever & Pneumonia - காய்ச்சல் & நிமோனியா	7
24.	Gastric disorders - வாய்வுக் கோளாறுகள்	2
25.	General Tonic - ஆற்றல் பெருக்கி	6
26	Head ache - தலைவலி	2
27.	Increase Potency - ஆண்மைப் பெருக்கி	3
28	Inflamation - வீக்கம்	3
29	Jaundice - மஞ்சள் காமாலை	3
30	Lactation problems - தாய்ப்பால் சுரக்க	2
31	Leucoderma - வெண்குஷ்டம்	3
32	Mouth sore - வாய்ப்புண்	2
33	Nervous disability -நரம்பு கோளாறு	3
34	Piles - மூலநோய்	1
35	Rabis - வெறிநாய்க்கடி	2
36.	Rheumatism - இரத்தக்கட்டு	5
37.	Skin disease - தோல் வியாதி	3
38	Spermatorrhoea -விந்து வெளியேறுதலைக் கட்டுப்படுத்த	4
39	Tooth ache - பல்வலி	7
40	Vermicide - புழுக்கொல்லி	1
41	Ulcer - குடற்புண்	3
42.	Black magic - பில்லி சூன்யம்	5
	கூடுதல்	157

மரபுவழி மருந்தும் மருந்தளித்தலும் (Preparation and Dispensing)

மரபுவழி மருந்தில் பயனாகும் தாவர மூலப்பொருட்கள் அத்தாவர இனத்தின் உருவ அமைப்பினை சார்ந்துள்ளது. பொதுவாக, மரங்களாகவோ, குறுமரங்களாகவோ இருப்பின் அவற்றின் மரப்பட்டைகள், மேல்பட்டைகள், வேர்களும், குறுஞ்செடிகளாகவோ, செடியாகவோ இருப்பின், முழுமையாகவோ அல்லது அவற்றின் இலைகள் அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றன. பொதுவாக, மருந்திற்குப் பயன்படுத்தப்படும் தாவரங்களை 'மூலிகைகள்' எனலாம்.

மரபுவழி மருந்தறிவியலில் (Traditional Pharmacognosy) *வழக்கமாக ஒரு மூலிகையின் வடிசாற்றினை மட்டுமோ, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தாவரங்களின் வடிசாற்றினை கலந்துக் கொடுக்கப்படுகிறது. இதன்படி, மலைவாழ் மக்களின் மரபுவழி மருத்துவத்தில் மருந்தாக்கும் முறைகள் ஒரே மாதிரியாக இருப்பதோடு, வழக்கமாக கீழ்க்கண்ட செயல்முறைகளில் ஏதேனும் ஒன்றின் மூலமாகவோ, இரண்டின் மூலமாகவோ மருந்தாக்கப்படுகின்றன.*

கொதிக்க வைத்தல் (Boiling)

தாவரங்களின் மரப்பட்டைகள், வேர்கள் போன்றவற்றை கொதிக்க வைத்தல் என்பது ஒரு பொதுவான முறையாகும். இதிலிருந்து கிடைக்கும் வடிநீர் நோயின் தன்மைக்கேற்றவாறு வாய் வழியாகவோ, குளிப்பதற்காகவோ பயன்படுத்தப்படும்.

ஊறவைத்தல் (Soaking)

குளிர்ந்த நீரில், கசக்கப்பட்ட இலைகள், சிறு செடிகள் போன்றவை ஊற வைக்கப்பட்டு, அதிலிருந்து கிடைக்கும் வடிசாற்றினை மேற்கூறிய முறையில் கொடுக்கப்படும்.

எரித்தல் (Burning)

மருந்திற்காக சேகரிக்கப்பட்ட சிறு செடிகள், இலைகள் போன்றவை நன்றாக உலர்த்தி காய வைக்கப்பட்டு, எரிக்கப்பட்டு அச்சாம்பலை நாக்கால் நக்கியோ, நோயின்மீது நேரிடையாக தேய்த்தோ நீரில் நன்றாக கலந்து உட்கொள்ளுதல் அல்லது வாயிலிட்டுக் கொப்பளிக்கப்படுகின்றன

சுவைத்தல் (Chewing)

இம்முறை, மருந்தினை உருவாக்குவதில் முதலுதவி முறையாகும். குறிப்பாக, பாம்புக்கடி, வயிற்றுவலி, வாய் அல்லது தொண்டை வலி போன்றவைகளுக்கும் மேற்கொள்ளப்படுகின்றன.

சூடேற்றுதல் அல்லது வறுத்தல் (Heating or Roasting)

இம்முறை, பொதுவாக சதைப்பற்றுள்ள தாவரங்களின் (Succulents) இலைகள் அல்லது பதவாடை, பற்று, கட்டி-புண் முதலியவற்றிற்கு மெல்லிய துணியின் மேல் வைத்துக்கட்டும் சூடான மாக்களி (Poultice) ஆக உருவாக்கப் பயன்படும் தாவரங்களின் பாகங்கள் போன்றவற்றில் மேற்கொள்ளப்படும்.

பிழிதல் அல்லது இடித்தல் (Crushing or Pounding)

மேற்கூறிய முறைகளின் செயல்முறைகளின் முக்கியதத்துவத்தை மேம்படுத்தும் முறையே இம்முறையாகும். பொதுவாக, இடித்துத் தூளாக்கப்பட்ட மருத்துவத் தாவரங்களை சிலவகை எண்ணெயுடன் கலந்து, நோய்களின் மேல நேரிடையாக மாறி, மாறி தடவி வரப்படுகின்றன.

தாவரங்களின் முறையான தொகுப்பு

தாவரங்கள் பென்த்தம் மற்றும் குக்கர் (Bentham and Cooker's classification) ஆகியோரின் பகுப்பு முறையின் அடிப்படையில் வகைப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

குடும்பப் பெயர்கள் (Family names) தொகுப்பின் தொடக்கத்திலேயே தெளிவாக பெரிய எழுத்துக்களில் தரப்படுகின்றன பேரினத்தின் பெயர்கள் அகர வரிசையில் அமைக்கப்பட்டுள்ளது.

பேரினத்தின் முதல் எழுத்தை பெரிய எழுத்திலும், அதனைத் தொடர்ந்து சிற்றினத்தின் முதல் எழுத்தை சிறிய எழுத்துக்களிலும் தரப்பட்டுள்ளன. மேலும், தொடர்ந்து அதன் ஆசிரியர்களின் பெயர்கள் அவற்றின் குறுகிய வடிவத்தில் அமைக்கப்பட்டுள்ளது

தாவரங்களின் வழக்கில் உள்ள பெயர்கள் தமிழில் கொடுக்கப்பட்டுள்ளன. இப்பெயர்களின் உதவிக்கொண்டே தாவரங்களின் இனங்களையும், அவற்றின் மருத்துவப் பயன்களையும், அவற்றைப் பயன்படுத்தும் முறைகளையும் கண்டறியப்பட்டது. இத்துடன் தாவரம் வளரும் இடம், களக்குறிப்புகள் போன்ற விவரங்கள் தரப்பட்டுள்ளன.

ANNONACEAE

1. Annona reticulata L. - அன்னாசி

மரம். சமவெளிகளில் பயிரிடப்படுகின்றன.

இதன் இலைகளை நன்றாக இடித்து சாறு பிழிந்து, அச்சாற்றினை உட்கொள்ள வயிற்றுக்கோளாறுகள் நீங்கும்.

MENISPERMACEAE

2. Tinspora cordifolia (Willd) Miers. - சீந்தில்

ஏறுகொடி; சமவெளிகள், முட்புதர்க்காடுகளில் பரவலாக வளர்கின்றன.

இதன் தண்டினை கசாயமாக செய்து சாப்பிட சர்க்கரை நோய் குணமாகும்.

PAPAVERACEAE

3. Argemone mexicana L. - பிரமதண்டு

பருத்தசெடி; சமவெளிகளில் அடர்வாகக் காணப்படும். இதன் நன்கு முதிர்ந்த வேர்ப்பட்டையின் சாற்றினை காலையில் குடிக்க விந்து வெளியேறுதல் கட்டுப்படுத்தப்படுகின்றன

POLYGALACEAE

4. Polygala arvensis Wills. - பூமிப்பூண்டு

நேரான பரந்த ஏறிவளரும் குறுஞ்செடி, சமவெளிகளில் மிகவும் பரவலாகக் காணப்படும்

நரம்புத் தளர்ச்சிக்கு இதன் முழுச்செடியையும் நன்றாக அரைத்து பசும்பாலுடன் கலந்து உட்கொள்ள வேண்டும்.

MALVACEAE

5 Sida cordata L - வெட்டுவாய செடி

துணைக்குறுஞ்செடி, பரவலாக சாலையோரங்கள், பாழ்நிலங்கள் போன்ற பகுதிகளில் காணப்படும்.

இதன் இலையின் சாற்றினைக் கொதிக்கச் செய்து பின் பருகிட வயிற்றுப்போக்கு குணமாகும்.

STERCULIACEAE

Helicteres isora L. - வலம்புரி

குறுஞ்செடி, இலையுதிர் காடுகளில் பரவலாக காணப்படும்.

இதன் பழங்களை கசாயம் செய்து குழந்தைகளுக்குக் கொடுக்க வயிற்றுப்போக்கு சீதபேதி குணமாகும்.

ELEOCARPACEAE

Elaeocarpus tuberculatus Roxb. - ருத்தாட்சம்

சோலை மரம். சோலைகளில் வளர்பவை.

கரு கலைப்பு செய்வதற்கு, இம்மரத்தின் பட்டையினை நன்றாக இடித்து, நீரிலிட்டு அருந்தப்படுகிறது.

OXALIDACEAE

Oxalis corniculata L - சிறு புளிச்சான், புளியாரை

தரையொட்டிப் பரவும் சிறுசெடி, நிழல் நிறைந்த காட்டுத்தளங்கள், பயிர் நிலக் களையாக எங்கும் வளர்நது காணப்படும்.

உடல்வலி நீங்குவதற்கு, இதன் முழுச்செடியையும் அரைத்து உடலில் தேய்த்து குளிக்க வேண்டும்.

RUTACEAE

Aegle marmelos (L.) Corr. Serr - வில்வம்

முட்கள் நிறைந்த இலையுதிர் மரம். இயற்கையாக வளரும். பெரும்பாலும் கோயில்களில் வளர்க்கப்படுகின்றன.

இதன் இலைச்சாறினை சிறிது பேரரத்தை, கற்பூரவல்லி இலையும் சேர்த்து அரைத்து தீக்காயங்களுக்குத் தடவ வேண்டும

Chloroxylon swietenia DC - பொரச.

முட்களற்ற, இலையுதிர் மரம். தாழ்ந்த இலையுதிர் காடுகளில் மிகப்பரவலாகக் காணப்படும்.

இதன் இலைச் சாற்றினைப் பிழிந்து கண்களில்விட கண் நோய்கள் குணமாகும்.

MELIACEAE

Cipadessa baccifera (Roth) Miq. - பீளாதலை

குறுஞ்செடி. வழித்தடங்களில் மிகுந்து காணப்படும் (700 m மேல்).

இதன் தண்டினை நன்றாக அரைத்து நீருடன் கலந்து உட்கொள்ள வயிற்றுக்கோளாறுகள் சரியாகும்.

VITACEAE

Cissus quadrangularis L. - பிரண்டை

ஒழுங்கற்றுப் பரவி படர்ந்த குறுஞ்செடி; முட்புதர்க் காடுகள், பாழ்நிலங்கள் புதர்களின் மேல் காணப்படும்.

இதன் இளந்தண்டுகளை நல்லெண்ணெயில் இட்டு வதக்கி சட்னி, துவையல் செய்து சாப்பிட வயிற்றுக் கோளாறுகள் குணமாகும்.

SAPINDACEAE

Cardiospermum halicacaum L. - முடக்கற்றான்

சிறுசெடி. சமவெளிகளில் தாழ்ந்த சரிவுகளில் காணப்படும்.

இதன் இலைகளையும் தண்டுகளையும் சேர்த்து ரசம் வைத்துச் சாப்பிட முட்டுவலி, பக்கவாதம் குணமாகும்.

Dodonaea angustifolia L.f. - விராலி,

குறுஞ்செடி; திருத்தியமைக்கப்பட்ட காட்டு நிலப்பகுதிகளில் காணப்படும்.

இதன் இலைகளை அரைத்து எலும்பு முறிவு ஏற்பட்ட இடத்தில் தொடர்ந்து கட்டிவர எலும்பு முறிவு சரியாகும்.

Filicium decipiens Thw. - சானி மரம், பேய் மிரட்டி.

மரம். ஈரமான மலையிடுக்குகளிலும் சோலைகளிலும், நிழல்படும இடங்களிலும் காணப்படுகின்றன. சிறு கன்றுகள் மரத்தடியில் ஏராளமாக காணப்படும்.

இதன் கிளைகளை வெட்டி வீட்டில் கட்டிவைக்க பில்லிசூன்யம் அணுகாது.

ANACARDIACEAE

Lannea coromandelica (Houtt.) Merr. - உதிய மரம்.

மரம். இலையுதிர்க் காடுகளில் பரவலாகக் காணப்படுகின்றன.

இதன் மரப்பட்டையின் கசாயம் ஒரு நாளைக்கு இருவேளை ஒரு தேக்கரண்டி குடித்துவர நெஞ்சுவலி, வாயுத் தொல்லை போகும்.

Mangifera indica L. - மாமரம்.

மரம். மலைகளில் இயற்கையாக, குறிப்பாக ஆற்றங்கரை ஓரங்களில் மிகுந்து காணப்படுகின்றன.

இதன் பிஞ்சுகளை நன்றாக கொதிக்கவைத்த நீரை அருந்தினால் காய்ச்சல் குணமாகும்.

MORINGACEAE

Moringa oleifera L. - முருங்கை மரம்.

மரம். பயிரிடப்படுகின்றன. சூரிய ஒளி நிறைந்த இடங்களில் அங்குமிங்குமாக காணப்படும்.

இம்மரத்தின் பிசினை பசும்பாலில் கலந்து சாப்பிட்டுவர வெட்கை நோய் குணமாகும்.

FABACEAE

Abrus precatorius L. - குண்டுமணி

வளைந்து படரும் குறுஞ்செடி. முட்புதர்களில் காணப்படும்.

இதன் வேரினை நன்றாக அரைத்துப் பூசிவர இரத்தக்கட்டு குணமாகும்.

Butea monosperma (Lam.) Taubert - *பொரசு.*

மரம். மலைகளில் குறிப்பிட்ட சில இடங்களில் மட்டுப் வளர்கின்றன.

இதன் வேரினை நன்றாக இடித்து, சாறினை பாலில் கலந்து குடித்துவர காமத்தன்மை கூடும்.

Cajanus cajan (L.) Millsp. - *துவரை*

குறுஞ்செடிகள் பயிரிடப்படுகின்றன.

தாய்ப்பால் சுரக்க, மார்பகங்களில் இதன் இலையை அரைத்து தடவவேண்டும்.

Dalbergia lanceolaria L.f. - *வெளாங்கு*

இலையுதிர் மரம். மலைகளில் இலையுதிர்க்காட்டுச் சரிவுகளில் வளர்கின்றன.

இதன் மரப்பட்டையும் ஆலமரத்தின் வேரினையும் சம அளவில் எடுத்து நீருடன் சேர்த்து குடித்துவர மஞ்சள் காமாலை குணமாகும்.

Derris scandens (Roxb.) Bennet - *தெகில்*

வளைந்து படரும் குறுஞ்செடி. ஆற்றங்கரை ஓரங்களில் காணப்படுகின்றன.

சர்க்கரை நோயிக்கு இதன் இலைகளையும், பூக்களையும் நன்றாக இடித்த அச்சாறினை உட்கொள்ள வேண்டும்.

Cassia fistula L. - *சரக்கொன்னை*

இலையுதிர் மரம். மலைகளில் இயற்கையாக வளர்பவை.

இதன் இலைச்சாற்றுடன நெல்லிக்காயின் சாற்றினையும் சேர்த்து சாப்பிட, ஆற்றல் பெருக்கியாக செயல்படும்.

MIMOSACEAE

Entada pursaetha DC. - *பப்பராங்கொட்டை*

பெருங்கொடி சோலைகளில் அங்குமிங்குமாகக் காணப்படும்.

இதன் வித்திலைகளை நன்கு அரைத்துப் பூச, வீக்கங்கள குணமாகும்.

Mimosa pudica L: - தொட்டால் வாடி

பரந்து விரிந்த சிறுசெடி; சிறிய தொகுப்பாக ஈரமான, சாகுபடி நிலங்களில் வளர்கின்றன.

இதன் இலைகளை நன்றாகப் பொடி செய்து பசும்பாலில் வெறும் வயிற்றில் பருகிவர வயிற்றுவலி குணமாகும்.

CRASSULACEAE

Kalanchoe lanceolata (Forsk) Pers. - பசலைக் கொடி

சிறுசெடி, பொதுவாக சிறிதளவு மண்படிந்த பாறைகளிலும், ச ிவுகளிலும் காணப்படுகின்றன.

இதன் இலைகளை நன்றாக அரைத்து கால் வெடிப்புகளில் தடவ பித்த வெடிப்பு குணமாகும்.

COMBRETACEAE

Terminalia arjuna (DC.) Wight & Arn. - மதுரமரம்.

மரம். ஆற்றுப் படுகைகளில் மிகவும் பரவலாகக் காணப்படும்.

இதன் பட்டையை நன்றாக அரைத்து உணவுடன் கலந்து உண்ண, ஆண்மைப் பெருக்கியாக செயல்படும்.

Mucuna pruriens (L.) DC. - பூனைக்காலி.

சிறுகொடி ஆற்றங்கரையையொட்டி சிற்சில இடங்களில் காணப்படும

வெட்டை நோயிற்கு இதன் விதையைப் பொடி செய்து பாலில் கலந்து குடித்துவர வேண்டும்.

Pterocarprus marsupium Roxb. - வேங்கை

மரம். மலைச்சரிவுகளில் உலாந்த மற்றும் வெயில் நிறைநத வளரிடங்களில் மிகப் பரவலாகக் காணப்படும்

இதன் பட்டையைப் பொடித்து, அச்சாற்றினை உட்கொள்ள வயிற்றுப்போக்கு குணமாகும்.

Tephrosia purpurea (L.) Pers. - காட்டுக் கொழிஞ்சி

துணைக் குறுஞ்செடி; பாழநிலங்கள், தரிசு நிலங்கள் போன்ற இடங்களில் களையாக வளர்கின்றன

இதன் வேரினை தண்ணீரில் இட்டு நன்றாக கொதிக்க செய்து அந்நீரைப் பருகிட வயிற்று வலி குணமாகும்.

Trigonella foenum - graccum L. - வெந்தயம்

சிறு செடி; பயிரிடபபடுகினறன.

இதன் விதைகளை கசாயமாக செய்து சாப்பிட சர்ககரை நோய் குணமாகும்

CAESALPINIACEAE

Bauhinia racemosa Lam - ஆத்தி

இலையுதிர் மரம், மலையடிவாரங்களில் மிகவும் பரவலாக காணப்படுபவை

இதன் பட்டையின் சாற்றினை ஆட்டுப்பாலில் கலந்து பருகிவர வலிப்பு நோய் குணமாகும்.

Terminalia bellirica (Gaertn.) Roxb. - தானிமரம்

மரம். இலையுதிர்க்காடுகளில் பரவலாகக் காணப்படும்

இதன காய்களை கசாயம செயது சாப்பிட ஆறறல் பெருக்கியாகச் செயலபடும

MYRTACEAE

Psidium guajava L - கொய்யா

மரம் , பயிரிடபபடுகினறன

இதன இலையின சாறினை வாயிலிட்டு கொபபளிக்க பலவலி நீஙகும்

Syzgium cuminii (L.) Skeels - நாவல் மரம.

பசுமைமாறா மரம சோலைகள், ஆற்றங்கரைகளில் காணபபடும்.

இதன் இலை, விதை, மரப்பட்டை மூன்றையும் சேர்த்து கசாயம் செய்து சாப்பிட சர்க்கரை நோய் குணமாகும்.

PASSIFLORACEAE

Passiflora foetida L. - பூனைக்குட்டி பழம்

சிறுகொடி. புதர்களில் ஆற்றங்கரைகளில் மிகுதியாகக் காணப்படும்.

இதன் பழங்களைப் பறித்து உட்கொள்ள, வயிற்றுவலி குறையும்.

CUCURBITACEAE

Citrullus colocynthis (L.) Schrader - வரிக்கரு ஊமத்தை

சிறுகொடி. கிடைமட்டத்தில் வளரும். பாழ்நிலங்களில் பரவலாகக் காணப்படும்.

இதன் பழங்கள் வலிப்பு மற்றும் வயிற்றுப் போக்கு நோய்க்கு மருந்தாகப் பயன்படுத்தப்படுகின்றன.

Coccinia grandis (L.) Voigt - கோவைக்கொடி

சிறு கொடி. கிடைமட்டத்தில் வளரும். மிகவும் பரவலாகப் புதர்களிலும், பாழ்நிலங்களிலும் காணப்படும்.

இதன் விதைகளை நன்றாக பொடி செய்து நீரிலிட்டு தினமும பருகிவர சர்க்கரை நோய் குணமாகும்.

Corallocarpus epigaeus (Rottl.) Clarke. - ஆகாசக் கருடன்

சிறுகொடி; தாழ்வான மலைச்சரிவுகளிலும் புதர்களிலும் பரவலாகக் காணப்படும்.

இதன் மட்டநிலத்தண்டினை நன்றாக பசைபோல் அரைத்து பாம்புக்கடித்த கடிவாயில் தடவ விஷமுறிவு ஏற்படும்.

Trichosanthes cucumerina L. - தெருபுடல

சிறுகொடி. தாழ்ந்த மலைச்சரிவுகளில் காணப்படும்.

இதன் இலைகளை நன்றாக பொடி செய்து பாலில் கலந்து பருகிவர காசநோய் குணமாகும்.

BEGONIACEAE

Begonia integrifolia L. - செந்தண்டு

சதைப்பற்றான துணைக்குறுஞ்செடி; மலையிடுக்குகளிலும், ஆழமான நிழலிலும் பாறைகளின் பிளவுகளிலும் காணப்படும்.

இதன் இலைகளை நன்றாக அரைத்து உடம்பின் வெளிப்புறத்தில் தேய்த்துவர காய்ச்சல் குணமாகும்.

APIACEAE

Centella asiatica (L.) Urban - வல்லாரை

நிலம்படிந்த சிறுசெடி; வளமான செடிகள் ஈரமான நிழல் பகுதிகளில் காணப்படும்.

இதன் இலைகளைப் பொடிசெய்து பாலில் கலந்து குடிக்க குடல்நோய் குணமாகும்.

Hydrocotyle javanica Thunb. - காமாலக்கொடி

நிலம்படிந்த சிறுசெடி. நிழலிலும், ஈரமுள்ள சோலையிலும், சிற்றாற்றங்கரை ஓரங்களிலும் காணப்படும்.

இதன் முழுச்செடியையும் சிறிது மஞ்சளுடன் சேர்த்து அரைத்து பசும்பாலுடன் கலந்து உட்கொள்ள மஞ்சட்காமாலை நோய் குணமாகும்.

RUBIACEAE

Benkara malabarica (Lam.) Tiru ; - பாப்பர முள்ளி

நிமிர்ந்த முட்கள் உள்ள குறுஞ்செடிகள்; முட்புதர்க் காடுகளிலும், மலைச்சரிவுகளிலும் பரவலாகக் காணப்படும்.

பிள்ளையில்லாதவர் இதன் பழங்களைத் தொடர்ந்து உட்கொண்டுவர பிள்ளைப்பேறு உண்டாகும்.

Canthium dicoccum (Gaert.) Teijrm & Binnend - அலும்பமரம்

முட்கலற்ற மரம். மலைச் சரிவுகளிலும் (600 மீ. மேல்), முட்புதர்காடுகளிலும் வளர்கின்றன.

இதன் இலைச்சாறினை பனைவெல்லத்துடன் சேர்த்து உண்ண குழந்தை எளிதாகப் பிறக்கும்.

Spermacoce hispida L. - நத்தைச்சூரி

படர்ந்து வளரும் சிறுசெடி. மலைகளில் பரவலாகவும், தரிசு நிலங்களில் ஏராளமாகவும் காணப்படும்.

இதன் இலையின் சாறினை பசும்பாலுடன் சேர்த்து உண்ண ஆண்மைப் பெருக்கியாக செயல்படுகிறது.

ASTERACEAE

Bidens pilosa L. - நேந்திரம் பூண்டு

பழுத்த சிறு செடி. விரைவில் ஆக்கிரமிக்கும்.

இதன் முழுச்செடியையும் அரைத்துப் பசும்பாலிலிட்டு உட்கொள்ள குடல்நோய் குணமாகும்.

Eclipta prostrata (L) L - கரிசலாங்கண்ணி

சிறுசெடி ஈரமான நிழல்பகுதிகளில் அதிகமாகக் காணப்படும்

இசசெடியுடன சிறிய வெங்காயத்தை 2 : 1 என்ற அளவில் சேர்த்து இடித்து இதன் சாறினை தினம் இருவேளை குடித்துவர விந்து வெளியேறுதல் தடுக்கப்படும்.

Tridax procumbens L - கிணத்துப பூண்டு

சிறுசெடி தீவிரமாகப பரவும் களை.

இதன இலைகளை மென்று பலவலி உள்ள பகுதிகளில் வைத்து அடக்கி வைக்க பல்வலி தீரும்.

SAPOTACEAE

Manilkara sapota (L) Royen - சப்போட்டா

மரம். மலைகளின் தாழ்ந்த சரிவுகளில் பயிரிடப்படுகிறது.

இதன பழத்தின் சாறினை உட்கொள்ள சீதபேதி குணமாகும

Madhuca indica Gmelin - காட்டிலுப்பை

இலையுதிர் மரம். முட்புதர்க்காடுகளில் காணபபடும்

இதன மரப்பட்டையை கசாயம செய்து சாப்பிட சளி மற்றும காய்ச்சல் குணமாகும.

APOCYNACEAE

Alstonia scholaris (L) R.Br

மரம்.பரவலாகக் காணப்படும்

இதன் மரப்படடையை கசாயம் செய்து சாப்பிட சர்க்கரை நோய் குணமாகும்.

ASCLEPIADACEAE

Calotropis gigantea (L.)R.Br - எருக்கு

குறுஞ்செடி. பாழ்நிலங்களில் வளர்வது

இதன் வேரையும் Acorus calamus வேரையும் சேர்த்து அரைத்து மாாபிலும் முதுகிலும் தடவிவர நிம்யோனியா காய்ச்சல் குணமாகும்.

Caralluma umbellata Haw. - இலைக்கள்ளி

தண்டு கிளைத்தவை. திறந்தவெளிப் பாறைகளில் அடர்ந்து காணப்படும்

இதன் தண்டினை வேகவைத்து சாப்பிட அஜீரணக் கோளாறுகள் நீங்கும்.

Gymnema cylvestre (Retz) R Br. - சர்க்கரைக் கொல்லி

வளைந்து படரும் குறுஞ்செடி முட்புதர்க்காடுகளில், சோலைப்பகுதிகளில இலையுதிர்க் காடுகளில காணப்படும்

இதன் இலைச்சாறறினை தொடர்ந்து குடிததுவர சர்க்கரை நோய் குணமாகும்

Pergularia daemia (Forssk) Chiov - வேலிபபருத்தி

வளைந்து படரும் குறுஞ்செடி. பாழ்வெளிகளில் முட்புதர்களில் காணபபடும்

இதன இலைகளை கசக்கிப பிழிநது இதன் சாறறினை இரத்தக்கடடு உளள இடததில் தடவ இரததக்கட்டு நீங்குமு.

GENTIANACEAE

Enicostema axillare (Lam) Raynal - வெள்ளருகு

நிமிர்நத சிறுசெடி பாழ்நிலங்களிலும், தரிசு நிலங்களிலும களையாக காணப்படும்.

இதன் இலைகளை நன்றாக இடித்து சாறு எடுத்து சிறிது மிளகுடன் சேர்த்து சாப்பிட காய்ச்சல் குணமாகும்.

CONVOLVULACEAE

Argyreia cuneata (Willd.) Ker - Gawl. - வெட்டைச் செடி

புதர்போன்று அடர்ந்த நிமிர்ந்த சிறு செடிகள். சிற்சில இடங்களில் காணப்படும்.

இதன் வேறினை நன்றாக கூழ்செய்து குடித்துவர குழந்தை பிறப்பு எளிதாக இருக்கும்.

Evolvulus alsinoides (L.) L - விஷ்ணுக்கிரந்தி

நிலம்படிந்த சிறுசெடிகள். சாலையோரங்கள், வளமற்ற பகுதிகள், திறந்த வெளிப்பாறை போன்ற இடங்களில் காணப்படும்.

இதன் முழு செடியையும் நன்றாக அரைத்து பசும்பாலுடன் கலந்து உட்கொள்ள நரம்புத் தளர்ச்சி நீங்கும்.

Ipomoea obscura (L.) Ker - Gawl. - சிறுதாளி

மென்தண்டுச் சுற்றுக்கொடி. வேலிகளிலும், சாகுபடி நிலங்களிலும் வளர்கின்றன.

இதன் இலைகளை சிறிய வெங்காயத்துடன் சேர்த்து அரைத்து தடவிவர, உடலில் தோன்றும் கொப்புளங்கள் குணமாகும்.

SOLANACEAE

Datura metel L. - கருஊமத்தை

துணைக்குறுஞ்செடி. பாழ்நிலங்களில் களையாக மிகுந்து காணப்படும்.

இதன் இலையை நன்றாக அரைத்து பாலில் கலந்து உட்கொள்ள வெறிநாய்க்கடி குணமாகும்.

Solanum anguivi Lamk - சுண்டை

முட்கள் உடைய துணைக்குறுஞ்செடி. காடுகள் அழிக்கப்பட்ட பகுதிகளில் பரவலாகக் காணப்படும்.

இதன் பழங்களைத் தொடர்ந்து சாப்பிட்டுவர வயிற்றுப்புழுக்கள் வெளியேறும்.

Solanum erianthum D.Don. - ஆனைச்சுண்டை

தட்டையானதொரு இலைத்தொகுப்புடைய குறுஞ்செடி. மலைச்சரிவுகளில் பரவலாக காணப்படும்.

இதன் இலை பல்வலிக்கு மருந்தாகப் பயன்படுத்தப் படுகிறது.

Solanum nigrum L. - குன்னி

முட்களற்ற குறுஞ்செடி. மலைகளில் 1500 மீ வரை வளரக்கூடியது.

இதன் இலைகளை நீரிலிட்டு நன்றாக கொதிக்கச் செய்து அந்நீரை தொடர்ந்து உட்கொள்ள வாய்ப்புண் குணமாகும்.

Solanum surattense Burm. f. - கண்டங்கத்திரி

முட்கள் உடைய தரையொட்டிப் பரவும் குறுஞ்செடி. பாழ்நிலங்களில் அதிகமாகக் காணப்படுவது.

இதன் காய்ந்த விதைகளை பழுக்கக்காய்ச்சிய இரும்புத் துண்டில் போட விதைகள் பொறியும். அப்போது உண்டாகும் ஆவியை வாயில் உள்ளிழுக்க பல்வலி குணமாகும்.

Solanum trilobatum L. - தூதுவளை

முட்கள் உடைய ஏறுவகை துணைக்குறுஞ்செடி.

இதன் இலைகளை நல்லெண்ணையுடன் சேர்த்து வதக்கி துவையல் செய்து சாப்பிட சளி மற்றும் காய்ச்சல் குணமாகும்.

ACANTHACEAE

Andrographis alata Nees - பெரியா நங்கை

துணைக்குறுஞ்செடி. பாழ்நிலங்களில் குறிப்பாக காடுகள் அகற்றப்பட்ட இடங்களில் காணப்படும்.

இதன் இலைகளை பொடி செய்து பாலில் கலந்துண்ண விஷம் முறியும்.

Andrographia paniculata L - சிறியா நங்கை

துணைக்குறுஞ்செடி. முட்புதர்களில் காணப்படும்.

இதன் இலைகளை வெற்றிலையுடன் சேர்த்து உண்ண விஷமுறியும்.

Justicia adhatoda L. - ஆடாதொடை

குறுஞ்செடி. மலைகளில் (750 மீ மேல்) பரவலாகக் காணபபடும்.

இதன் இலையுடன் சிறிதளவு பூண்டு, மிளகு சோத்து நீரிலிட்டு நன்றாகக் கொதிக்க வைத்து கசாயமாக பருகிவர காசநோய் குணமாகும். அதனுடன் நொச்சி, நுணா இலையையும் சேர்த்து நீரில் கொதிக்கவைத்து வரும் ஆவியை உள்ளிழுக்க சளி காய்ச்சல் குணமாகும்.

Justicia betonica L - குறுங்குசெடி

குறுங்செடி. புதர்களின் நீரோடைகளில் வளர்கின்றன.

இதன இலையினை மஞ்சளுடன் சேர்த்து அரைத்து நகச்சுததிக்கு மருந்தாக பூசப்படுகிறது.

Thunbergia fragrans Roxb. - தொட்டாங்கொடி

மெலிந்த தண்டுடைய சுழற்கொடி. புதர்களில், வேலிகளில, காடுகளின் எல்லைகளில், திறந்தவெளிச் சரிவுகளில் பரவிச் காணப்படும்.

இதன் இலையை அரைத்து புண்ணுக்கு மருந்தாக போடப்படுகிறது

VERBENACEAE

Callicarpa tomentosa (L) Murray - சீமபக்கொத்து

மரம் மலையில் 1000 மீக்கு மேல மலைச் சரிவுகளில் காணபபடும்

இதன் இளந்தண்டுகளை நன்றாக அரைதது வெட்டுக் காயஙகளுக்கு மருந்தாகப் பயன்படுத்தபபடுகிறது

Lantana camara L - உன்னிச்செடி

முடகளுடைய வளைந்து படரும குறுஞ்செடி. முட்புதாககாடுகள, நடைபாதை ஓரஙகளில குறிபபாக காடுகள வெட்டி அழிக்கபபட்ட பகுதிகளில் செறிந்து வளர்பவை

இதன் இலையின் சாறினைக் குடிக்க வயிற்றுப்போக்கு குணமாகும்.

LAMIACEAE

Anisochilus carnosus (L.f) Wallich - *சேற்றுப்புண் தழை*

துணைக்குறுஞ்செடி. மலைகளில் (800 மீக்கு மேல்) வெயில் அதிகமாகப்படும் திறந்த மலைச்சரிவுகளில் நிறைந்து காணப்படும்.

இதன் இலையை நன்றாக அரைத்து கால் பித்தவெடிப்பிற்கும், சேற்றுப்புண்ணுக்கும் மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது.

Anisomeles indica (L.) Kuntze - *பேய் மிரட்டி*

புதர் போன்று அடர்ந்த துணைக்குறுஞ்செடி. பாழ்நிலங்களில் செறிந்து காணப்படும்.

இதன் இலைகளை வீட்டில் கட்டி வைக்க பில்லி சூன்யம் (Black Magic) *அண்டாது.*

Leucas aspera (Willd.) Link. - *தும்பை*

நேரான தரையொட்டிப் பரவும் சிறுசெடி. மலைப் பகுதிகளில் களையாகக் காணப்படும்.

இதன் இலையின் சாற்றினை உட்கொள்ள வயிற்றுப்போக்குக் குணமாகும்.

Orthosiphon thymiflorus (Roth) Sleesen - *குத்து துளசி*

மணமுடைய துணைக் குறுஞ்செடி. மலைச்சரிவுகளில் பாறைகளின் இடுகெகுகளில் பரவலாகக் காணப்படும்.

இதன் இலைகளை நெற்பயிருடன் சேர்த்து அரைத்து அச்சாற்றினை பெண்கள் மாதவிளக்கான பின் உட்கொள்ள கருவளம் உண்டாகும்.

NYCTAGINACEAE

Boerhavia diffusa L. - *சாரணை*

தரையொட்டிப் பரவும், கீழ்க்கணுக்களில் வேர்கள் கொண்ட சிறுசெடி. பாழ்நிலங்களில் மிகுந்து காணப்படும்.

இதன் வேரையும் பாவெட்டையின் (Pavetta indica) வேர் பட்டையையும் சேர்த்து இடித்து இதன் சாறினை உட்கொள்ள வலிப்பு நோய் குணமாகும்.

AMARANTHACEAE

Achyranthus aspera L. - நாயுருவி

துணைக்குறுஞ்செடி. பாழ்வெளிக் களைகள்

இதன் இலையின் சாற்றோடு தேனை சம அளவு கலந்து குடித்துவர காசநோய் குணமாகும்.

Aerva lanata (L.) Juss - பூளைப்பூ

நேரான நீலம் படிந்த சிறுசெடி. பாழ்வெளிக்களைகள்.

இதன் இலைகளைப் பறித்து பச்சையாக மென்று முழுங்க விஷமுறிவு ஏற்படும்.

Alternanthera sessilis (L.) R.Br. - பொன்னாங்கண்ணி

நிலம் படிந்த இலைகள் கொண்ட சிறுசெடி. ஈரமான பகுதிகளில் களையாகக் காணப்படும்.

இதன் இலையுடன் சிறு வெள்ளைப் பூண்டை சேர்த்து இடித்து அதன் சாற்றினை தினம் 2 வேளை கொடுத்துவர நிமோனியா காய்ச்சல் குணமாகும்.

BASELLACEAE

Basella alba var. rubra L. - பசலை

மட்ட நிலத்தண்டுடைய சதைப்பற்றுள்ள மென்மையான சுழற்கொடி. ஈரமான பகுதிகளில் இயற்கையாக வளர்ந்து காணப்படும்.

இதன் இலைகள் தண்டுகளை நன்றாக அரைத்து தொடர்ந்து உண்ண மலச்சிக்கல் தீரும்.

CHENOPODIACEAE

Chenopodium ambrosioides L. - ஊர்த்தலை

மணமிக்க, நேரான துணைக்குறுஞ்செடி. பயிர் நிலங்கள், குடியிருப்புப் பகுதிகளில் களையாக வளர்கின்றன.

இதன் இலைகளை நன்றாக அரைத்து குழந்தைகளின் உடலில் தேய்த்துக் குளித்துவர சகல நோய்களும் நீங்கும்.

ARISTOLOCHIACEAE

Aristolochia indica L. - பெருமருந்துக் கொடி

ஏராளமான கிளைகள் உடைய ஏறுகொடி. புதர்களில் படர்ந்து காணப்படும்.

இதன் இலைகளை அரைத்து பாம்பு கடித்த கடிவாயில் வைத்துக் கட்ட விஷம் முறியும்.

Aristolochia tagala Cham. - கோழிக்கூடு செடி

சிறுகொடி. புதர்களில் காணப்படும்.

இதன் இலைகளை அரைத்து பாம்பு கடித்த கடிவாயில் வைத்துக் கட்ட விஷம் முறியும்.

PIPERACEAE

Paperomia tetraphylla (Forst.f.)Hook. & Arn . - அலிங்கு செடி

மரம் ஒட்டி வளரும் சிறுசெடி. மலைகளில் நிழலான இடங்களில் வளர்பவை.

இதன் இலையை நெருப்பிலிட்டு கருக்கி அச்சாம்பலை உட்கொள்ள வாய்ப்புண் குணமாகும்.

MYRISTICACEAE

Myristica dactyloides Gaertn. - காட்டு ஜாதிக்காய்

பெரிய மரம். சோலைகளில் அதிகமாகக் காணப்படும்.

இதன் காய்களை நன்றாக அரைத்து நெற்றியில் தடவ தலைவலி நீங்கும்.

LAURACEAE

Cassytha filiformis L. - அந்தரச் செடி

ஒட்டுண்ணிச் சுற்றுக்கொடி. முட்புதர்க் காடுகளில் பரவலாகக் காணப்படும்.

இதன் முழுச்செடியையும் அரைத்து தலையில் தேய்த்துவர சளி, தாய்ச்சல் குணமாகும்.

BALANOPHORACEAE

Balanophora fungosa Forster & Forster f. - *நீலக்குங்கிலியம்*

சதைப்பற்றுள்ள, பசுமையற்ற, வேர்களற்ற ஒட்டுண்ணிச் சிறுசெடி. சோலைகளின் தரைப்பகுதிகளில் பொதுவாகக் காணப்படும்.

இதன் தண்டினை சிறிய வெங்காயத்துடன் வதக்கிகட்ட இரத்தக்கட்டு குணமாகும்.

EUPHORBIACEAE

Acalypha indica L - *குப்பை மேனி*

துணைக்குறுஞ்செடிகள். பாழ்நிலங்களில் நிழலிலும், ஈரமான இடங்களிலும் காணப்படும்.

இதன் இலையின் சாற்றினை வாயிலிட்டு கொப்பளிக்க பல்வலி நீங்கும்.

Jatropha curcas L - *வெள்ளை கக்கானா*

குறுஞ்செடி; மலையடிவாரங்களிலும், வேலியோரங் களிலும், பாழ்நிலப்பகுதிகளிலும் காணப்படும்.

இச்செடியின் பாலை (Latex) *கொப்புளங்களில் தடவிவர குணமாகும்.*

Mallotus philippensis (Lam.) Muel - Arg. - *குன்னசூலை*

மரம். மலைப்பகுதிகளில் (600 மீ) சரிவுகளில் சோலை எல்லைப்புறங்களில் மிகவும் பரவலாக காணப்படும்.

இதன் தண்டினை நன்றாக இடித்து கொதிக்கவைத்து தொடர்ந்து குடித்துவர உட்காயங்கள் குணமாகும்.

Phyllanthus amarus Schum. & Thoms - *கீழாநெல்லி*

சிறுசெடி. தரிசுநிலங்களில் காடுவெட்டி திருத்தப்பட்ட நிலங்களில் ஆற்றுப்படுகைகளில் வளர்கின்றன.

இச்செடியினை நன்றாக அரைத்து தலையில் தேய்த்துக் குடிக்க உடல் சூடு குறையும்.

MORACEAE

Artocarpus heterophyllus Lam. - பலா

மரம். மலைகளில் 700 மீ மேல் இயறகையாகவும் பயிர் நிலையிலும் வளர்கின்றன. சோலைகளில் உள்ளன. இம்மலைக்கே உரிய கனியாக விளங்குகிறது.

இதன் பட்டையுடன் பனை வெல்லத்தையும் சேர்த்து கொதிக்க வைத்து கால்நடைகளுக்கு உண்டாகும் எழும்பு முறிவிற்கு வைத்துக் கட்டப்படுகின்றன.

Ficus exasperata Vahl. - கேப்புரக்கா மரம்

குறுமரம். சோலைகளில் எல்லைப்பகுதிகளில் மிகுதியாகக் காணப்படும்.

இதன் இலைகள், கால்நடைகள் கன்று ஈனுதலை எளிதாக்குகிறது.

Ficus hispida L.f. - பேய்பெருக்கு

மரம். சோலைகளில் பொதுவாகக் காணப்படும்.

இதன் பழங்களை நன்றாக அரைத்து தொண்டைப் பகுதிகளில் தடவ தொண்டைப்புண் குணமாகும்.

F.recemosa L. - அத்திமரம்

மரம். சமவெளிப்பகுதிகளில் பொதுவாகக் காணப்படும்.

இதன் மரப்பட்டையினை நன்றாக இடித்து சாறினை பெண்கள் மாதவிலக்கான 2 அல்லது 3 நாட்கள் தொடர்ந்து அருந்திவர கருவளம் உண்டாகும்.

ZINGIBERACEAE

Alpinia calcarata Rosc - அரதை

சிறுசெடிகள்; மணமிககவை. கிடைமட்ட தொடர்ந்து கிளைத்த நிலக்கிழங்கு கொண்டவை. மலைகளில் பயிரிடப்படுபவை.

Curcuma aromatica Salisb - கஸ்தூரி மஞ்சள்

வேர்த்தண்டு கிளைத்தது. மலைகளில் பயிரிடப்படுபவை.

இதன் வேர்த்தண்டினை நன்றாக அரைத்து முகத்தில் தோன்றும் பருக்களில் பூசிவர பருக்கள் நீங்கும்.

BROMELIACEAE

Ananas cosmosus (L.) Merr. - அன்னாசி

குட்டையான தண்டுடைய நிலத்தாவரங்கள். பயிரிடப்படுபவை.

இதன் பழுக்காத கனிகள் கருக்கலைப்பிற்குப் பயன்படுத்தப்படுகிறது.

AGAVACEAE

Sansevieria roxburghiana Schult. & Schult f. - மருள்

வேர்த்தண்டு தடித்து உறுதியான வேர்கள் கொண்டவை. மலையடிவாரங்களிலும், உலர்ந்த சரிவுகளிலும் பாறை இடுக்குகளிலும் காணலாம்.

இதன் தண்டினை இளஞ்சூடாக்கி பிழிந்துவரும் சாற்றினை 2 அல்லது 3 துளிகள் காதில் விட காதுவலி குணமாகும்.

LILIACEAE

Aloe vera (L.) Burm . f. - வாலுமுக்கித்தளை

நேராக வளரும் சிறுசெடி. முட்புதர்க்காடுகளில் மலையடிவாரங்களிலும், பாறைகள் உள்ள பகுதிகளிலும் சிறிய தொகுப்பாக வளர்பவை.

இதன் சதைப்பற்றுள்ள இலைகளை இளஞ்சூடாக்கி கொப்புளங்கள், வீக்கத்திற்கு வைத்துக் கட்டப்படுகிறது.

Gloriosa superba L - கலப்பைக் கிழங்கு

ஏறுகொடி. மலைகளில் (500 மீ.)புதர்களில் வளர்பவை.

இதன் இலைச் சாற்றினை கண்களில்விட கண்நோய்கள் குணமாகும்.

COMMELINACEAE

Commelina erecta L. - மயூரசிங்கி

சிறுசெடி. எப்போதும் ஈரமாக உள்ள இடங்களில் காணப்படும்.

இதன் இலைச்சாற்றினை குழந்தைகளுக்கு கொடுத்துவர மலச்சிக்கல் தீரும்.

ARACEAE

Acorus calamus L. - வசம்பு

அடர்ந்து வளரும் சிறுசெடி. மலையடிவாரங்களில் நிழலிடங்களில் பயிராகின்றன.

இதன் காய்ந்த மட்ட நிலத்தண்டினை சிறுசிறு துண்டுகளாக நறுக்கி பொடியாக்கி தேனில் கலந்து குடிக்க விஷம் முறியும்.

Arisaema leschenaultii Blume - காட்டுக்கருணை

கிழங்குடைய சிறுசெடிகள். வளரிடங்களில் அடர்ந்து காணப்படும். குறிப்பாக சோலைகளில் நிலங்களில் காணப்படும்.

இதன் இலைச்சாறு பாம்பு கடித்த கடிவாயில் வைத்துக் கட்ட விஷம் முறியும்.

Arisaema tortuosum (Wallich) Schott - கருணைக்கிழங்கு

கிழங்குடைய சிறுசெடிகள். அடர்ந்து வளர்பவை. மலைகளில் நிழலிடங்களில் காணலாம்.

இதன் இலைகளை அரைத்து பாம்பு கடித்த கடிவாயில் வைத்துக் கட்ட விஷம் முறியும்.

Rhaphidophora laciniata (Burm f.) Meer. - பன்னி பிரண்டை

ஏறுகொடி. பசுமைமாறா வகையைச் சார்ந்த தடித்த வேர்கள் கொண்டது. நிழலிலும், சோலை மரங்களின் மேலும் செங்குத்தான பாறைகளிலும், மலையிடுக்குகளிலும் காணப்படும்.

இதன் இலையை எரித்து அதிலிருந்து உண்டாகும் புகையை உள்ளிழுக்க காசநோய் குணமாகும்.

PTERIEOPHYTES
HEMIONITIDACEAE

Hemionitis arifolia (Burm f.) Moore - கம்பி தாமரை

சிறுசெடிகள். பொதுவாக 500 மீக்கு மேல் காணப்படும்

பெண்கள் மாதவிலக்கை சரிசெய்யப் பயன்படுத்தப் படுகிறது.

DRYNARIACEAE

Drynaria quercifolia (L.) J.Sm. - ஆட்டுக்கால் கிழங்கு

மரங்களின் இலைகளிலும் பாறைகளின் இடுக்குகளிலும் ஒட்டிக்கொண்டு வளர்பவை. பொதுவாக 600 மீ மேல் காணப்படும்.

இதன் மட்ட நிலத்தண்டினை நன்றாக அரைத்து இரத்தக்கட்டுப் பகுதியில் தடவிவர இரத்தக்கட்டு குணமாகும்.

தாவரங்கள் அவை தீர்க்கும் நோய்களின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

1. மானிட மருத்துவத் தாவரங்கள்

ABORTIFACIENT (கருகலைப்பு)

Ananas comosus (L.) Merr. BROMELIACEAE

இதன் காயினை இடித்து சாறு பிழிந்து உட்கொள்ள வேண்டும்.

Elaeocarpus tuberculatus Roxb. ELAEOCARPACEAE

இம்மரத்தின் பட்டையினை நன்றாக இடித்து, நீரிலிட்டு அருந்த வேண்டும்.

Tephrosia purpurea (L.) Pers. FABACEAE

இதன் வேரினை நன்றாகப் பொடிசெய்து பாலிலிட்டு அருந்த வேண்டும்.

Trichosanthes cucumerina L. CUCURBITACEAE

இதன் கொடியினை நன்றாக அரைத்து, நீரில் கலந்து அருந்த வேண்டும்.

ANTIDOTE (விஷமுறிவு)

Abrus precatorius L - FABACEAE

இதன் விதைகளை அரைத்து பாலில் கலந்து குடிக்க வேண்டும்.

Acorus calamus L - ZINGIBERACEAE

இதன் காய்ந்த மட்ட நிலத்தண்டினை சிறு துண்டுகளாக நறுக்கி, தூள் செய்து தேனில் கலந்து குடிக்க வேண்டும்.

Aerva lanata (L) Juss - AMARANTHACEAE

இதன் இலைகளைப் பறித்து பச்சையாக மென்று முழுங்க வேண்டும்

Andrographis paniculata L. - ACANTHACEAE

இதன் இலைகளை வெற்றிலையுடன் சேர்த்து உண்ண வேண்டும்.

Andragraphis lineata L. - ACANTHACEAE

இதன் இலைகளை பொடிசெய்து பாலில் கலந்து உண்ண வேண்டும்.

Arisaema tortuosum L - ARACEAE

இதன் இலைகளை அரைத்து பாம்பு கடித்த இடத்தில் கட்ட வேண்டும்.

Aristolochia bracteolata Lamk - ARISTOLOCHIACEAE

இதன் இலைகளை அரைத்து பாம்பு கடித்த இடத்தில் கட்ட வேண்டும்.

Aristolochia tagala Cham - ARISTOLOCHIACEAE

இதன் இலைகளை அரைத்து பாம்பு கடித்த இடத்தில் கட்ட வேண்டும்.

ASTHAMA (காசநோய்)

Achyranthus aspera L. - AMARANTHACEAE

இதன் இலையின் சாற்றோடு தேனையும் 1:1 என்ற விகிதத்தில் கலந்து குடித்து வரவேண்டும்.

Justicia adhatoda L. - ACANTHACEAE

இதன் இலையுடன் சிறிதளவு பூண்டு, மிளகு சேர்த்து நீரிலிட்டு நன்றாகக் கொதிக்க வைத்து, இதனைப் பருக வேண்டும்.

Trichosanthes cucumerina L. - CUCURBITACEAE

இதன் இலைகளை நன்றாக பொடி செய்து பாலில் கலந்து பருக வேண்டும்.

Rhaphidophora laciniata (Burm.f) Merr - ARACEAE

இதன் இலையை எரித்து, அதிலிருந்து உண்டாகும் புகையை உள்ளிழுக்க வேண்டும்.

APHRODISIAC (காமப்பெருக்கி)

Butea monosperma (Lamk.) Taub. - FABACEAE

இதன் வேரினை நன்றாக இடித்து, இச்சாற்றினை பாலில் கலந்து குடித்துவரவேண்டும்.

Nilgirianthus foliosus (Wight) Bremek - ACANTHACEAE

இதன் வேரினை நன்றாக அரைத்து பாலில் கலந்து குடித்து வரவேண்டும்.

Sonerila clarkei Cogn. - MELASTOMATACEAE

இதன் இலையின் நன்றாக இடித்து இச்சாற்றினை பாலில் கலந்து குடித்துவர வேண்டும்.

BLISTER (கொப்புளம்)

Ipomoea obscura (L.) Ker-Gawl. - CONVOLVULACEAE

இதன் இலைகளை சிறியவெங்காயத்துடன் சேர்த்து அரைத்து தடவி வரவேண்டும்.

Jatropha curcas L. - EUPHORBIACEAE

இதன் பாலினை (Latex) தடவி வரவேண்டும்.

BLOOD PURIFIER (இரத்த சுத்திகரிப்பு)

Begonia integrifolia L. - BEGONIACEAE

இதன் தண்டுகளை அரைத்து பசும்பாலில் பருகி வரவேண்டும்.

BODY PAIN (உடல் வலி)

Bambusa arundinacea L. - POACEAE

இதன் இலைகளை அரைத்து உடலில் தேய்த்து வெந்நீரில் குளிக்க வேண்டும்.

Oxalis corniculata L. - OXALIDACEAE

இதன் முழுச் செடியையும் அரைத்து உடலில் தேய்த்து குளிக்க வேண்டும்.

BONE FRACTURE (எலும்பு முறிவு)

Dodonaea angustifolia L.f. - SAPINDACEAE

இதன் இலைகளை அரைத்து முறிவு ஏற்பட்ட இடத்தில் தொடர்ந்து கட்டிவர வேண்டும்.

Cochlospermum religiosum (L.) Alston - COCHLOSPERMACEAE

இதன் பிசினை முறிவு ஏற்பட்ட இடத்தில் தொடர்ந்து கட்டிவர வேண்டும்.

Mucuna pruciens (L.) DC. FABACEAE

இதன் விதைகளை நல்லெண்ணெய்யுடன் சேர்த்து அரைத்து முறிவு ஏற்பட்ட இடத்தில் கட்ட வேண்டும்.

Rhaphidophora laciniata (Burm.f.) Merr. - ARACEAE

இதன் இலைகளை அரைத்து முறிவு ஏற்பட்ட இடத்தில் கட்ட வேண்டும்.

BURNS (தீக்காயங்கள்)

Asystasia gangetica (L.) T. Anders. - ACANTHACEAE

இதன் இலைகளை நன்றாக கசக்கிப் பிழிந்து இதன் சாறினை தடவி வரவேண்டும்.

Musa acuminata Colla MUSACEAE

இதன இலைகளை இளஞ்சூடாக்கி பிழிந்து இதன் சாறினை எடுத்து தடவி வரவேண்டும்.

Aegle marmelos (L.) Corr. Serra - RUTACEAE

இதன இலையின் சாறினை சிறிது பேரரத்தை, கற்பூரவல்லி இலையும் சேர்த்து அரைத்து பசும்பாலுடன் சாப்பிட வேண்டும்.

CHILD BIRTH (குழந்தை பிறப்பு)

Canthium dicoccum (Gaertn.) Teijsm. & Ben. - RUBIACEAE

இதன் இலையிலிருந்து பெறப்படும் சாறினை பனைவெல்லத்துடன் சேர்த்துண்ண குழந்தை எளிதாகப் பிறக்கும்.

Argyreia cuneata (Willd.) Ker-Gawl - CONVOLVULACEAE

இதன் வேரினை நன்றாக கூழ்செய்து குடித்து வரவேண்டும்.

CANCER (புற்றுநோய்)

Aglaia elaegniodea (Juss.) Benth - MELIACEAE

இதன் இலையின் சாறு புற்றுநோயைக் குணப்படுத்துவதாகக் கூறப்படுகிறது.

Drosera peltata Sm. DROSERACEAE

இதன் முழுத்தாவரத்தின் சாறு புற்றுநோயைக் கட்டுப்படுத்துவதாகக் கூறப்படுகிறது.

CONSTIPATION (மலச்சிக்கல்)

Basella alba var. rubra (L.) Stew - BASELLACEAE

இதன் இலைகள், இளந்தண்டுகளை நன்றாக அ[illegible]ந்து, இதனைத் தொடர்ந்து உண்ண வேண்டும்.

Commelina erecta L - COMMELINACEAE

இதன் இலைகளை [illegible]டித்து, இச்சாறினை குழந்தைகளுக்குக் கொடுக்க [illegible]

COUGH & COLD ([illegible]ருமல் & சளி)

Cassytha filiformis L. - CASSYTHACEAE

இதன் முழுச் செடியையும் அரைத்துத் தலையில் தேய்த்து வரவேண்டும்.

Justicia adhatoda L - ACANTHACEAE

இதன் இலைகளுடன் நொச்சி, நுணாவின் இலைகளையும் சேர்த்து நீரில் கொதிக்க வைத்து அதன் ஆவியை உள்ளிழுக்க வேண்டும்.

Solanum trilobatum L - SOLANACEAE

இதன் இலைகளை நல்லெண்ணெயுடன் சேர்த்து வதக்கி துவையல் செய்து சாப்பிட வேண்டும்

DIABETES (சர்க்கரை நோய்)

Alstonia scholaris (L) R. Br. - APOCYNACEAE

இதன் மரப்பட்டையை கசாயம் செய்து சாப்பிட வேண்டும்.

Coccinia grandis (L.) Voigt - CUCURBITACEAE

இதன் விதைகளை நன்றாகப் பொடி செய்து தினமும் நீரிலிட்டு பருகிவர வேண்டும்.

Derris scandens (Rodb.) Bennet - FABACEAE

இதன் இலைகளையும் பூக்களையும் நன்றாக இடித்து, இச்சாறினை உட்கொள்ள வேண்டும்.

Gymnema sylvestris (Retz.) R.Br. - ASCLEIADACEAE

இதன் இலையின் சாற்றினை தொடர்ந்து குடித்து வரவேண்டும்.

Madhuca longifolia (Koen.) Mac Br. - SAPOTACEAE

இதன் பட்டையை கசாயம் செய்து சாப்பிட்டு வரவேண்டும்.

Syzygium cuminii (L.) Skeels - MYRTACEAE

இதன் இலைகள், விதைகள், மரப்பட்டை மூன்றையும் சேர்த்து கசாயமாக சாப்பிட வேண்டும்.

Tinospora cordifolia (Willd.) Merr. - MENISPERMACEAE

இதன் தண்டினை கசாயமாகச் செய்து சாப்பிட வேண்டும்.

Trigonella foenum-graecum L - FABACEAE

இதன் விதைகளை கசாயமாக செய்து சாப்பிட வேண்டும்.

DIARRHOEA & DYSENTRY (வயிற்றோட்டம் & சீதபேதி)

Butea monosperma (Lamk.) Taub - FABACEAE

இதன் பிசினை அரிசியின் கழுநீரிலிட்டு சிறிதளவு உப்பைச் சேர்த்து குடித்துவர வயிற்றுப்போக்கு குணமாகும்.

Curcuma angustifolia Roxb. - ZINGIBERACEAE

இதன் கிழங்கின் சாற்றினைக் குடிக்க வயிற்றுப்போக்குக் குணமாகும்.

Lantana camara L. - VERBENACEAE

இதன் இலையின் சாறினைக் குடிக்க வயிற்றுப் போக்கு குணமாகும்.

Leucas aspera (Willd.) Link - LAMIACEAE

இதன் இலையின் சாறினை உட்கொள்ள வயிற்றுப்போக்கு குணமாகும்.

Manilkara zapota (L.) Royan - SAPOTACEAE

இதன் பழச்சாற்றினை உட்கொள்ள சீதபேதி குணமாகும்.

Punica granatum L. - PUNICACEAE

இதன் பழத்தின் விதைகளை இடித்து தயிருடன் சேர்த்துண்ண சீதபேதி குணமாகும்.

Pterocarpus marsupium L. - FABACEAE

இதன் பட்டையைப் [illegible]ந்து அதன் சாறினை உட்கொள்ள வயிற்றுப்போக்கு [illegible]ம்.

Terminalia chebula Retz. - COMBRETACEAE

இதன் முற்றிய காய்களை கசாயம் செய்து சாப்பிட வயிற்றுப்போக்கு குணமாகும்.

Sida cordata (Burm f.) Bross. - MALVACEAE

இதன் இலையின் சாறினைக் கொதிக்கச்செய்து பின் பருகிட வயிற்றுப்போக்கு குணமாகும்.

EAR COMPLAINTS (காது வலி)

Arisaema tortuosum (Wall.) Schott. - ARACEAE

இதன் மட்டநிலத்தண்டின் (Rhizome) சாறினை 2 அல்லது 3 துளிகள் காதில் விடவேண்டும்.

Sanseviera roxburghiana Schult. & Schult. - AGAVACEAE

இதன் தண்டினை இளஞ்சூடாக்கி பிழிந்து வரும் சாற்றினை 2 அல்லது 3 துளிகள் காதில் விடவேண்டும்.

EYE DISEASES (கண் நோய்கள்)

Coccinia grandis (L.) Voigt. - CUCURBITACEAE

இதன் இலையினை நன்றாகக் கசக்கி 2 அல்லது 3 துளிகள் கண்களிலிட கண் சம்பந்தப்பட்ட சகல நோய்களும் குணமாகும்.

Chloroxylon swietenia DC. - FLINDERSIACEAE

இதன் தண்டின் சாற்றினை கண்களில் விடவேண்டும்.

Gloriosa superba L. - LILIACEAE

இதன் இலையின் சாறினைப் பிழிந்து கண்களில் விடவேண்டும்.

Scoparia dulcis L. - SCROPHULARIACEAE

இதன் இலைகளை நன்றாகக் கசக்கி சாறினை 2 அல்லது 3 துளிகள் கண்களில் இடவேண்டும்.

FERTILITY (கருவளம்)

Ficus racemosa L. - MORACEAE

இதன் பட்டைகளை நன்றாக இடித்து சாறினை பெண்கள் மாதவிலக்கான 2 அல்லது 3 நாட்கள் தொடர்ந்து அருந்திவர வேண்டும்.

Orthosiphon thymiflorus (Roth) Sleensen - LAMIACEAE

இதன் இலைகளை நெற்பயிருடன் சேர்த்து அரைத்து அச்சாறினை பெண்கள் மாதவிலக்கான பின் உட்கொள்ள வேண்டும்.

EPILEPSY (வலிப்பு நோய்)

Bauhinia racemosa Lam. - CAESALPINIACEAE

இதன் பட்டையின் சாறினை ஆட்டுப்பாலில் கலந்து பருகிவர வேண்டும்.

Boerhavia diffusa L. - NYCTAGINACEAE

இதன் வேரையும் பாவெட்டையின் (Pavetta indica) வேர்ப்பட்டையையும் சேர்த்து இடித்து இச்சாறினை உட்கொள்ள வேண்டும்.

Dodonaea angustifolia L.f. - SAPINDACEAE

இதன் இலையின்னை நன்றாக கசக்கி 2 துளிகள் வீதம் 3 தடவை மூக்கின் வழியே செலுத்த வேண்டும்.

FOOT SORE (கால் புண்)

Kalanchoe lanceolata (Forsk.) Pers -. CRASSULACEAE

இதன் இலைகளை நன்றாக அரைத்து கால் வெடிப்புகளில் தடவ வேண்டும்.

EMMENAGOGUE (பூப்பெய்தல்)

Aponogeton mono-stachyon L. - APONOGETANACEAE

இதன் கிழங்கை நன்றாக அரைத்து பசும் பாலில் கலந்து குடித்துவர வேண்டும்.

FEVER & PNEUMONIA (காய்ச்சல் & நிமோனியா)

Alternanthera sessilis (L.) R.Br. ex DC. - AMARANTHACEAE

இதன் இலைகளுடன் சிறு வெள்ளைப்பூண்டையும் சேர்த்து இடித்து அச்சாறினை தினம் 2 தடவை வீதம் கொடுத்துவர நிமோனியா காய்ச்சல் குணமாகும்.

Asparagus racemosus Willd. - ASPARAGACEAE

இதன் கிழங்கினை இடித்து அச்சாறினைத் தொடர்ந்து உட்கொள்ள காய்ச்சல் குணமாகும்.

Begonia malabarica Lam. - BEGONIACEAE

இதன் இலைகளை நன்றாக அரைத்து உடம்பின் வெளிப்புறத்தில் தேய்த்துவர காய்ச்சல் குணமாகும்.

Calotropis gigantea (L.) R. Br. - ASCLEPIADACEAE

இதன் வேரையும் Acorus calamus வேரையம் சேர்த்து அரைத்து நெஞ்சிலும் முதுகிலும் தடவிவர நிமோனியா காய்ச்சல் குணமாகும்.

Enicostemma axillare (Lam.) Raynal - GENTIANACEAE

இதன் இலைகளை நன்றாக இடித்து சாறு எடுத்து சிறிது மிளகுடன் சேர்த்து சாப்பிட காய்ச்சல் குணமாகும்.

Mangifera indica L.f. - ANACARDIACEAE

இதன் பிஞ்சுகளை நன்றாக கொதிக்க வைத்து அந்நீரை அருந்திவர காய்ச்சல் குணமாகும்.

Solanum nigrum L. - SOLANACEAE

இதன் இலைகளை கொதிக்கும் நீரிலிட்டு அந்நீரை அருந்தி வர காய்ச்சல் குணமாகும்.

Cissus quadrangularis L. - VITACEAE

இதன் இளந்தண்டுகளை நல்லெண்ணெயிலிட்டு வதக்கி சட்னி, துவையல் செய்து சாப்பிட வேண்டும்.

Cardiospermum helicacabum L. - SAPINDACEAE

இதன் இலைகளையும் தண்டுகளையும் சேர்த்து ரசம் வைத்துச் சாப்பிட வேண்டும்.

GENERAL TONIC (ஆற்றல் பெருக்கி)

Asparagus racemosus Willd. - ASPARAGACEAE

இதன் வேறினையும் மஞ்சளையும் சமஅளவில் எடுத்து அரைத்து 3 கரண்டிகள் வீதம் தினமும் குடித்துவர வேண்டும்.

Cassia fistula L. - CAESAL PINIACRAE

இதன் இலைச்சாறுடன் நெல்லிக்காயின் சாறினையும் சேர்த்து சாப்பிட வேண்டும்.

Cynodon dactylon (L.) Pers. - POACEAE

இதன் இலையின் சாறும் புதினாவும் சேர்த்து பசும்பாலில் கலந்து பருகிவர வேண்டும்.

Ficus religiosa L. - MORACEAE

இதன் இலைகளை நன்றாக நீர்விட்டு அரைத்து வடிகட்டி இச்சாறினை உட்கொள்ள வேண்டும்.

Glycyrrhiza glabra L. - FABACEAE

இதன் வேறினை அரைத்து அச்சாறினை தொடர்ந்து உட்கொள்ள வேண்டும்.

Terminalia bellirica (Gaertn.) Roxb. - COMBRETACEAE

இதன் காய்களை கசாயம் செய்து சாப்பிட வேண்டும்.

HEADACHE (தலைவலி)

Pedalium murex L. - PEDALIACEAE

இதன் இலைகளை நன்றாக அரைத்து நெற்றியில் தடவ வேண்டும்.

Myristica dactyloides Gaertn. - MYRISTICACEAE

இதன் காய்களை நன்றாக அரைத்து நெற்றியில் தடவ வேண்டும்.

INCREASE POTENCY (ஆண்மைப் பெருக்கி)

Mucuna pruriens (L.) DC. - FABACEAE

இதன் விதையை பொடித்து பசும்பாலில் குடித்துவர வேண்டும்.

Terminalia arjuna (Roxb. ex DC.) Wt. & Arn. - COMBRETACEAE

இதன் பட்டையை நன்றாக அரைத்து உணவுடன் கலந்து உண்ண வேண்டும்.

Spermacoce hispida L. - RUBIACEAE

இதன் இலையின் சாறினை பசும்பாலில் சேர்த்து உட்கொள்ள வேண்டும்.

INFLAMMATION (வீக்கம்)

Aloe barbadensis Mill. - LILIACEAE

இதன் இலையின் சோற்றினை எடுத்து தடவ வேண்டும்.

Entada pursaetha DC. - MIMOSACEAE

இதன் வித்திலைகளை நன்கு அரைத்துப் பூச வேண்டும்.

Ficus hispida L.f — MORACEAE

இதன் பழங்களை நன்றாக அரைத்து தொண்டைப் பகுதிகளில் தடவ தொண்டைப்புண் குணமாகும்.

JAUNDICE (மஞ்சள் காமாலை)

Boerhavia diffusa L. - NYCTAGINACEAE

இதன் வேர்ச் சாறினை தேனுடன் கலந்து உண்ண வேண்டும்.

Dalbergia lanceolaria L.f - FABACEAE

இதன் மரப்பட்டையுடன் ஆலமரத்தின் வேரினை சமஅளவில் எடுத்து நீருடன் சேர்த்து குடித்து வரவேண்டும்.

Hydrocotyle javanica Thunb. - APIACEAE

இதன் முழுச் செடியையும் சிறிது மஞ்சளும் சேர்த்து அரைத்து பசும்பாலுடன் உட்கொள்ள வேண்டும்.

LACTATION PROBLEMS (தாய்ப்பால் சுரக்க)

Cajanus cajan (L.) Millsp. - FABACEAE

இதன் இலைகளை அரைத்து தாய்ப்பால் சுரக்க மார்பகங்களில் தடவ வேண்டும்.

Leucas aspera L. - LAMIACEAE

இதன் இலையை அரைத்து பசும்பாலுடன் கலந்து குடித்து வரவேண்டும்.

LEUCORRHOEA (வெட்டை நோய்)

Moringa oleifera Lam. - MORINGACEAE

இம்மரத்தின் பிசினை பசும்பாலில் கலந்து சாப்பிட வேண்டும்.

Mucuna pruriens (L.) DC. - FABACEAE

இதன் விதையைப் பொடி செய்து பாலில் கலந்து குடித்துவர வேண்டும்.

Pedalium murex L. - PEDALIACEAE

இதன் இலையை சர்க்கரையுடன் சேர்த்து அரைத்து உட்கொள்ள வேண்டும்.

MOUTH SORE (வாய்ப்புண்)

Peperomia tetraphylla (Forst.f.) Hoof. & Arn. PEPEROMIACEAE

இதன் இலையின் சாறினை உட்கொள்ள வேண்டும்.

Solanum nigrum L. - SOLANACEAE

இதன் இலைகளை நீரிலிட்டு நன்றாக கொதிக்கச் செய்து அந்நீரைத் தொடர்ந்து உட்கொள்ள வேண்டும்.

NEROUS DISABILITY (நரம்புத் தளர்ச்சி)

Bacopa monnieri (L.) Penn. - SCROPHYLARIACEAE

இதன் முழுச் செடியையும் நன்றாக அரைத்து பசும்பாலுடன் கலந்து உட்கொள்ள வேண்டும்.

Evolvulus alsinoides (L.) L. - CONVOLVULACEAE

இதன் முழுச் செடியையும் நன்றாக அரைத்து பசும்பாலுடன் கலந்து உட்கொள்ள வேண்டும்.

Polygala arvensis Buch. - Ham. POLYGALACEAE

இதன் முழுச் செடியையும் நன்றாக அரைத்து பாலுடன் கலந்து உட்கொள்ள வேண்டும்.

PILES (மூல நோய்)

Amorphophallus sylvaticus (Roxb.) Kunth - ARACEAE

இதன் கிழங்குடன் சிறிது பூண்டு, மிளகு, பன்றியின் நெய்யையும் சேர்த்து சாப்பிட வேண்டும்.

RABIS (வெறி நாய்க்கடி)

Calotropis gigantea (L.) R. Br. - ASCLEPIADACEAE

இதன் பாலினை (Latex) கடிபட்ட இடத்தில் இட வேண்டும்.

Datura metel L. SOLANACEAE

இதன் இலையை நன்றாக அரைத்து பாலுடன் கலந்து உட்கொள்ள வேண்டும்.

RHEMATISM (இரத்தக்கட்டு)

Abrus precatorius L. - FABACEAE

இதன் வேரினை நன்றாக அரைத்துப் பூசிவர வேண்டும்.

Balanophora fungosa Foster f. - BALANOPHORACEAE

இதன் தண்டினை சிறிய வெங்காயத்துடன் வதக்கிக் கட்ட வேண்டும்.

Drynaria quercifolia (L.) Sm. - DRYNARIACEAE

இதன் ரைசோமை (Rhizome) நன்றாக அரைத்துத் தடவி வரவேண்டும்.

Pergularia daemia (Forssk.) Chiov. - ASCLEPIADACEAE

இலையினைக் கசக்கிப் பிழிந்து இதன் சாறினைத் தடவி வரவேண்டும்.

Pyrrosia mollis (Kuntz) Ching - POLYPODIACEAE

இதன் முழுச் செடியையும் சிறிது பாக்கும் வெங்காயமும் சேர்த்து அரைத்து தடவி வரவேண்டும்.

SKIN DISEASES (தோல் நோய்கள்)

Azadirachta indica A. Juss. - MELIACEAE

இதன் இலையுடன் சிறிது மஞ்சளும் உப்பும் சேர்த்து நன்றாக தேய்த்து வரவேண்டும்.

Canarium strictum Roxb. BURSERACEAE

இதன் பட்டையை தண்ணீர்விட்டு கொதிக்கச்செய்து இந்நீரில் குளித்து வர சரும நோய்களும் குணமாகும்.

Jatropha curcas L. - EUPHORBIACEAE

இதன் பாலினை (Latex) எலுமிச்சைச் சாற்றுடன் கலந்து தடவிவர வேண்டும்.

SPERMATORRHOEA (விந்து வெளியேற்றம்)

Argemone mexicana L. . PAPAVERACEAE

இதன் நன்கு முதிர்ந்த வேர்ப்பட்டையின் சாறினை காலையில் குடிக்க வேண்டும்.

Bacopa monnieri (L.) Penn. - SCROPHULARIACEAE

இதன் முழுச் செடியையும் நீரிட்டு அரைத்து பசுவின் நெய்யோடு கலந்து உட்கொள்ள வேண்டும்

Eclipta prostrata (L.) L. - ASTERACEAE

இச்செடியுடன் சிறிது வெங்காயத்தையும் 2:1 என்ற அளவில் சேர்த்து இடித்து இதன் சாறினை தினம் 2 வேளை குடிக்க வேண்டும்.

Moringa oleifera L. - MORINGACEAE

இதன் பிசினை பாலில் கலந்து குடிக்க வேண்டும்.

STOMACH DISORDER (வயிற்றுக் கோளாறுகள்)

Annona reticulata L. - ANNONACEAE

இதன் இலைகளை நன்றாக கசக்கிப் பிழிந்து அச்சாற்றினை உட்கொள்ள வேண்டும்.

Azadirachta indica L. - MELIACEAE

இதன் இலைகளை நன்றாக இடித்து சாறு பிழிந்து அச்சாறினை உட்கொள்ள வேண்டும்.

Bauhinia racemosa Lam. - CAESALPINIACEAE

இதன் மரப்பட்டைகளை நன்றாக அரைத்து சூடுபடுத்தி வயிற்றின் வெளிப்புறமாகத் தடவ வேண்டும்.

Cipadessa baccifera (Roth) Mig. - MELIACEAE

இதன் தண்டினை நன்றாக அரைத்து நீருடன் கலந்து உட்கொள்ள வேண்டும்.

Mangifera indica L. - ANACARDIACEAE

இதன் பட்டையையும் விதைப் பருப்பையும் பொடி செய்து பாலுடன் கலந்து உண்ண வேண்டும்.

Mimosa pudica L. - MIMOSACEAE

இதன் இலைகளை நன்றாகப் பொடி செய்து பசும்பாலில் வெறும் வயிற்றில் பருகிவர வயிற்றுவலி குணமாகும்.

Passiflora foetida L. - CUCURBITACEAE

இதன் பழங்களைப் பறித்து உட்கொள்ள வயிற்றுவலி குறையும்.

Tephrosia purpurea L. - FABACEAE

இதன் வேரினை தண்ணீரில் விட்டு நன்றாக கொதிக்கச் செய்து அந்நீரைப் பருகிட வயிற்றுவலி குணமாகும்.

TOOTH ACHE (பல்வலி)

Acalypha indica L. - EUPHORBIACEAE

இதன் இலைச் சாறினை வாயிலிட்டுக் கொப்பளிக்க வேண்டும்.

Calotropis gigantea (L.) R. Br. - ASCLEPIADACEAE

இதன் பாலினை (Latex) பல்வலி உள்ள பகுதியில் இட வேண்டும்.

Psidium guajava L. - MYRTACEAE

இதன் இலைச் சாறினை வாயிலிட்டு கொப்பளிக்க வேண்டும்.

Ricinus communis L. - EUPHORBIACEAE

இதன் பாலினை (Latex) பல்வலி உள்ள இடத்தில் இட வேண்டும்.

Solanum erianthum Don - SOLANACEAE

இதன் காய்ந்த விதைகளை நீரில் இட்டு கொதிக்கச் செய்து, பழுக்கக் காய்ச்சிய இரும்புத் துண்டினை இந்நீரில் மூழ்கச் செய்யும்போது உண்டாகும் ஆவியை வாயால் உள்ளிழுக்க வேண்டும்.

Solanum surattense Burm. f. - SOLANACEAE

இதன் காய்ந்த விதைகளை பழுக்கக் காய்ச்சிய இரும்புத் துண்டில் போட, விதைகள் பொறியும். அப்போது உண்டாகும் ஆவியை வாயால் உள்ளிழுக்க வேண்டும்.

Tridax procumbens L. - ASTERACEAE

இதன் இலைகளை மென்று பல்வலி உள்ள பகுதியில் வைத்து அடக்கி வைக்க வேண்டும்.

VERMICIDE (புழுக்கொல்லி)

Solanum anguivi Lamk. - SOLENACEAE

இதன் பழங்களைத் தொடர்ந்து சாப்பிட வயிற்றிலுள்ள புழுக்கள் வெளியேறும்.

ULCER (குடல்நோய்)

Argemone mexicana L. - PAPAVERACEAE

இதன் தண்டிலிருந்து வெளிப்படும் பாலினை (Latex) பசும்பாலில் கலந்து உண்ண வேண்டும்.

Bidens pilosa L. - ASTERACEAE

இதன் முழுச்செடியையும் அரைத்துப் பசும்பாலிலிட்டு உட்கொள்ள வேண்டும்.

Centella asiatica (L.) Urban - APIACEAE

இதன் இலையினைப் பொடிசெய்து பாலில் குடிக்க வேண்டும்.

BLACK MAGIC (பில்லி சூனியம்)

Anisomeles indica (L.) Kuntze - LAMIACEAE

இதன் இலையை வீட்டில் கட்டிவைக்க வேண்டும்.

Anoectochilus elatus Lindl. - ORCHIDACEAE

இதன் முழுச் செடியையும் காய வைத்து கையில் கட்டிக் கொள்ள நினைத்தது நிறைவேறும்.

Boswellia serrata Colebr. - BURSERACEAE

இதன் இலையை பேய் ஓட்டியாகப் பயன்படுத்தப் படுகிறது.

Filicium deciptiens Thw. - SAPINDACEAE

இதன் இலையை வீட்டில் கட்டி வைக்க வேண்டும்.

Schefflera wallichiana Harms. - ARALIACEAE

இதன் இலையை வீட்டில் வைத்திருக்க வேண்டும்.

கால்நடை மருத்துவத் தாவரங்கள்

மனிதனுக்கும் விலங்கினத்திற்கும் உள்ள உறவு மிகவும் பழமையானதே. மனிதர்கள் பல்வேறு விலங்கினங்களை தங்கள் உணவிற்கு மட்டுமின்றி பொழுது போக்கிற்கும் பயன்படுத்துவதோடு, அவற்றின் தோல், கம்பளி உரோமங்கள் ஆகியவற்றையும் பயன்படுத்தி வந்தனர். மேலும், சவாரி செய்ய, பாரம் சுமக்க, போரிடுவதற்காகவும், பால் உற்பத்திக்காகவும் பயன்படுத்தி வந்தனர். இயற்கைச் சூழ்நிலைக்கேற்ப குறிப்பிட்ட சில விலங்கினங்கள், மனிதர்களை சுமந்து செல்லவும், பாரம் சுமக்கவும், வண்டி இழுக்கவும் பொருத்தமாகக் காணப்பட்டன. ஒட்டகங்கள் பாலைவனப் பகுதிகளிலும், கோவேறு கழுதை, திபேத்திய நாட்டு மாடுகள் மலைப்பகுதிகளிலும், யானைகள் அடர்ந்த காட்டுப் பகுதிகளிலும் பொருத்தமாகத் திகழ்கின்றன. இன்றைய நவீன தொழில்நுட்பங்களில் தோற்றுவிக்கப்பட்ட போக்குவரத்து சாதனங்கள், உணவு உற்பத்தி முறைகள், செயற்கை அல்லது வேதியியல் முறையில் தயாரிக்கப்பட்ட தோல், பிற விலங்கின உற்பத்திப் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டிருந்த போதிலும், விலங்குகள் இன்றளவும் தொடர்ந்து மனித வாழ்வில் முக்கிய பங்கினை வகிக்கின்றன. இப்பயனுள்ள விலங்கினங்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். கடந்த பத்து மில்லியன் ஆண்டுகளில் மனிதர்கள் தங்கள் உடலைப் பேணி பாதுகாக்கப் பயன்படுத்தும் தாவரங்களைக் கண்டறிந்திருந்ததுடன் விலங்கினங்களையும் இயற்கையாக பாதுகாக்கும் மருத்துவ முறைகளையும் கண்டறிந்திருந்தனர்.

இந்தியாவில் கால்நடை அறிவியல் (Veterinary Science) எனப்படுவது, வேத காலத்திற்கு முன்பே தோன்றியது எனலாம். பால் பண்ணை, கால்நடைகள் பாதுகாப்பு போன்றவை அதர்வன வேதத்தில் (Atharvana Veda 3500 - 500 BC) குறிப்பிடப்பட்டுள்ளன. பண்டைக்கால இந்தியாவில் (3000 BC) மனித வாழ்வில் கால்நடைகளின் முக்கியத்துவம்

மொகஞ்சதாரோவிலும், ஹரப்பாவிலும் கண்டறியப்பட்ட தொல்லியல் சான்றுகள் மூலம் தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் வேத காலங்களில் (2000 BC) கால்நடைகளின் நோய் தீர்க்கும் முறைகள் எவ்வாறு சிறந்து விளங்கியது என்ற உண்மை அதர்வன (Atharvana Veda) வேதத்திலும், ரிக் வேதத்திலும் (Rig Veda) சான்றுகள் உள்ளன. வேத காலத்தில் வாழ்ந்த நகுலன் (Nakulan) சகாதேவனும் (Sahadevan) கால்நடைகளின் நோய்களைத் தீர்ப்பதில் மிகச் சிறந்து விளங்கினர் (Nakula Samhita கால்நடைகளை குணமாக்கும் மருத்துவ ஆய்வுக் கட்டுரைகள், குதிரைகள் (கால்நடை அறிவியலின் தந்தை எனப்படும் காலிக்கோத்ரா)வின் நோய் தீர்க்கும் மருத்துவ ஆய்வுக் கட்டுரைகள்) குறிப்பிடத்தக்கவையாகும்.

வேதங்கள் மட்டுமின்றி, இந்தியாவின் தொன்மை வாய்ந்த பிற திருமறை நூல்களான ஸ்கந்த - புராணம் (Skand-Puranam) தேவிப்புராணம் (Devi Puranam), பால கோப்பியா, சாலிக்கோத்ராவின் மட்ஷய புராணம் (Mastsya Puranam), பிரம்ம புராணம் (Brahma Puranam), லிங்க புராணம் (Linga Puranam), அக்னி புராணம் (Agni Puranam), கருட புராணம் (Garuta Puranam)போன்றவைகளும், சாராக் மற்றும சுஸ்ருத் போன்றவர்களால் எழுதப்பட்ட எண்ணற்ற கால்நடை மருத்துவ முறைகள் பற்றிய ஆய்வுக் கட்டுரைகளும், தொன்றுதொட்டு இன்றளவும் நிலவிவரும் மரபுவழி மருத்துவ அறிவுகள் குறிப்பிடத்தக்கவை ஆகும்.

தாவரங்களைப் பயன்படுத்தி விலங்குகளை பாதுகாக்கும் மருத்துவம் பற்றி எழுதி வைக்கப்பட்ட அல்லது எழுதப்படாத மரபுவழி அறிவு, நம்பக்கூடியவை மட்டுமின்றி, அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். கால்நடை மருத்துவ முறைகள் அங்கு கிடைக்கும் தாவரங்கள், அச்சூழலில் ஏற்படும் நோய்களுக்கேற்ப வேறுபட்டு காணப்படுகின்றன.

கால்நடை மருத்துவம் பற்றிய அன்ஜாரியாவின் (1989), கூற்றுப்படியும், உலக உணவு மற்றும் வேளாண் அமைப்பின் (FAO) 1989 a, b) கூற்றுப்படியும், இந்தியாவில் சில மனித

இனத்தவர்கள், தாவரங்களைப் பயன்படுத்தி விலங்குகளின் நோய்களைக் குணப்படுத்துவதில் பரம்பரை வல்லவர்களாகத் திகழ்கின்றனர். அவர்களில் தமிழ் நாட்டின் நீலகிரி மலைப்பகுதியில் வாழும் தோடர் இனத்தவர்களும், அஸ்ஸாம் மாநிலத்தின காம்ரூப் மலைப்பகுதியில் வாழும் கவிராஜ்களும், கபோராக்களும், (Kaviraj and Gaobharas),குஜராத் மாநிலத்தில் வாழும் ரிபாரி (Rebari), பாகர் (Bhagar), மல்தா (Maldhari), ராஜ்பீபால் (Rajpipal) மற்றும் காரான் (Charan), இராஜஸ்தான் மாநிலத்தில் வாழும் ரைக்கா (Raika) இனத்தவரும், மத்திய பிரதேசத்தின், பாஸ்டர் பகுதியில் வாழும் மரியா (Maria) மற்றும் முரியா (Muria) இனத்தவரும், உத்திர பிரதேசத்தில் வாழும் தாரு (Tharu) இனத்தவரும், பீஹார் மாநிலத்தில், சோட்டா நாக்பூரில் வாழும் சந்தால் (Santhal) இனத்தவரும் பிற பகுதிகளில் வாழும் அஹீர்களும் (Ahirs), க்வாளாஸ் (Gwalas), யாதவர்களும் (Yadavas), பாசி (Pasi), கட்டி (Guddi), திலாங்கர் (Dilangar), ஹோசி (Ghoshi), குர்வான்கள் (Kurwans) போன்றவர்கள் குறிப்பிடததக்கவர்கள் ஆவர்.

மனிதவின கால்நடை மருத்துவ முறைகள் பற்றிய மரபு வழி அறிவின் முக்கியத்துவம் பற்றி Ranynekar (1998) என்பார், நாடு முழுவதும் விளங்கும் இப்பாரம்பரிய மருத்துவத்தில் தேர்ச்சி பெற்ற பரம்பரை வைத்தியர்கள் சிறந்த அறிவுமிக்கவர் களாகவும், கைத்தேர்ந்தவர்களாகவும் இருக்கின்றனர். எனினும், அவர்கள் மரபுவழி அறிவினை முறையாக ஆவணப்படுத்தப்படவில்லை என்பதால், மற்றவர்களுக்கு எளிதில் தொடர்ந்து போய் சேராமல், விரைவாக மறைந்து வருவதாகவும், இதனால் முற்றிலும் மறைந்துவிடும் அபாயத்தில் இம்மருத்துவம் இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். இந்த வகையில் இம்மரபுவழி கால்நடை மருத்துவம் முறையாக ஆவணப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகிறது.

கொல்லிமலையில் நிலவும் கால்நடை மருத்துவ முறைகளும் அம்முறைகளில் பயன்படுத்தப்பட்டுவரும் தாவரங்களைப் பற்றி வெளிவந்த ஆய்வுக்கட்டுரையில் (Geetha *et.al.*, 1996) கீழ்க்கண்ட தாவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன :

Aloe barbadensis Mill. - **கற்றாழை** - LILIACEAE

இதன் இலைகள் கால்நடைகளின் கழுத்து வீக்கம், புண் (Yoko gall) போன்றவைகளுக்கு மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது.

Aridisia solanaceae Roxb. - **காக்காட்டா** MYRSINACEAE

இதன் இலைகள் எலும்புமுறிவிற்கு மருந்தாகப் பயன்படுத்தப்படுகின்றன.

Arisaema leschenaultii Blume - **காட்டுக்கருணை** - ARACEAE

இதன் குமிழ்கள், கால்நடைகளின் இரத்தப்போக்கு (Haemorrhagic), குருதி நச்சூட்டும் காய்ச்சல் (Septicaemia) போன்ற நோய்களுக்கும் மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது.

Artocarpus hirsutus Lam. - **கறிப்பலா** -MORACEAE

இதன் பட்டைகள் எலும்பு முறிவிற்கு மருந்தாகப் பயன்படுத்தப்படுகின்றது.

Azadirachta indica A. Juss. - **வேம்பு** - MELIACEAE

இதன் இலைகள் கால்நடைகளின் சீழ்ப்புண்ணிற்கு மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது.

Bambusa arundinacea Retz. - **[illegible]** - POACEAE

இதன் இளங்குருத்துகள் [illegible] முறிவிற்கு மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது.

Bauhinia racemosa Lam. - **ஆத்தி** -CAESALPINIACEAE

இதன் கனிகள் சீதபேதி (Dysentry) மருந்தாகிறது.

Begonia malabarica Lam. - **செந்தண்டு** - BEGONIACEAE

இதன் இலைகள் எலும்பு முறிவிற்கு மருந்தாகப் பயன்படுத்தப்படுகின்றன.

Canthium dicoccum (Gearth.) Teijem. & Binn. - **[illegible]** RUBIACEAE

இதன் இலைகள் சாதாரண பிறப்பு, ஈனல் போன்ற நோய்களுக்கு மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது.

Caralluma umbellata Haw. - **எருமைக்கள்ளி** - ASCLEPIADACEAE
இதன் இளந்தண்டுப் பகுதிகள் சீதபேதி(Dysentry)க்கு மருந்தாகிறது.

Cardiospormum halicacabum L.- **முடக்கத்தான்** - SAPINDACEAE
இதன் இலைகள் சிறந்த பசி தூண்டியாக (Appetizer) பயன்படுத்தப் படுகிறது.

Carmina retusa (Vahl) Mas - **குரங்கு வெத்திலை** - BORAGINACEAE
இதன் இலைகள் இரத்தப் போக்கு (Haemorrhagic) குருதி நச்சூட்டுக் காயச்சல் (Septicaemia) போன்ற நோய்களுக்கு மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது.

Centella asiatica (L.) Urban - **வல்லாரை** - APIACEAE
இதன் இலைகள் காந்டைகளுக்கு ஏற்படும் Downer's cow syndrome என்னும் நோய் தீர்க்கும் மருந்தாகிறது.

Chloroxylon swietenia DC. - **பொரசு, வம்மாரை** - FLINDERSIACEAE
இதன் இலைகள், கால்நடைகளுக்கு உண்டாகும் உன்னியைப் போக்குவதற்கு (Lice repellent) மருந்தாகப் பயன்படுத்தப்படுகின்றன.

Cissus quadrangularis L. - **பிரண்டை** - VITACEAE
இதன் இளந்தண்டுகள் சிறந்த பசித்தூண்டியாக (Appetizer) பயன்படுத்தப்படுகின்றன.

Citrullus colocynthis (L.) Schrender - **வரி குருத்தை** CUCURBITACEAE
இதன் காய்கள் கால்நடைகளின் வயிற்று உப்பிசத்தைப் (Gastritis) போக்க மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது.

Dodonaca viscosa (L.) Jacq. - **விராலி** - SAPINDACEAE
இதன் இலைகள் இணைப்புகளில் இடமாறிய எலும்புகளை சரி செய்வதற்கு மருந்தாகப் பயன்படுத்தப் படுகிறது.

Elaeocarpus serratus L. - **செல்லமரம்** - ELAEOCARPACEAE

இதன் மரப்பட்டைகள் பொதுமருந்தாக (General Medicine) பயன்படுத்தப்படுகிறது.

Enicostema axillare (Lam.) Rayal - **வல்லருகு** - GENTIANACEAE

இதன் இலைகள் பூச்சிக் கொல்லி மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது.

Ficus exasperata Vahl - **கெப்பூர மரம்** - MORACEAE

நஞ்சுக்கொடி (Placenta) எளிதில் விழுவதற்கு மருந்தாகப் பயன்படுகிறது.

Helicanthus elastica (Desr.) Danser - **புல்லூரி** - LORANTHACEAE

இதன் இலைகள் கால் மற்றும் வாய்ப்புண் நோய்களுக்கு இருந்தாகிறது.

Mallotus philippensis (Lam.) Muell. - Arg. - **குன்னச்சோலை** - EUPHORBIACEAE

கால்நடைகளின் வலிப்பு நோயிற்கு, (Fits) மருந்தாக இதன் மரப்பட்டைகள் பயன்படுத்தப்படுகின்றன.

Moringa pterygosperma Gaertn. - **முருங்கை** - MORINGACEAE

இதன் மரப்பட்டை வலிப்பு நோயிற்கு (Fits) மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது.

Pedaliu murex L. - **யானை [illegible]** - PEDALIACEAE

இதன் இலைகள் கருத்தரிக்கவும், நஞ்சுக்கொடியை (Placenta) விரைவாக விழச்செய்யவும் மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது.

Remusatia vivipara (Lodd.) Schott. - ARACEAE

இதன் கிழங்குகள், இரத்தக்கட்டு போக்க மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது.

Phyllanthus reticulatus Poir. - **புளா** - EUPHORBIACEAE

இதன் இலைகள் சீதபேதிக்கு (Dysentry) மருந்தாகிறது.

Rhaphidophora laciniata (Burm. f.) Merr. - பன்னி பிரண்டை - ARACACEAE

இதன் இலைகள் பன்றிகளுக்கு ஏற்படும் Anorexia என்ற நோய்க்கு மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது.

உணவுத் தாவரங்கள் (Edible Plants)

இந்தியாவில் உயர்ந்த மலைப்பகுதிகளிலும், பள்ளத்தாக்குப் பகுதிகளிலும் அதனைச் சுற்றியுள்ள சமவெளிப் பகுதிகளிலும் வாழும் மலையின மக்கள் தங்கள் வாழ்விற்கு அப்பகுதிகளில் உள்ள தாவரங்களையே பெரிதும் நம்பி இருக்கின்றனர். காடுகளில் மனிதனின் உதவியின்றி தானாக வளரும் தாவரங்களில் உணவாகப் பயன்படும் தாவர இனங்களை இம்மக்கள் நன்கு அறிந்துள்ளனர். இத்துடன் இவர்கள் அத்தாவரங்களை இடமாற்றி பயிரிடும் முறையில் (Shifting cultivation) பயிர் செய்தும் வருகின்றனர். ஆகாரிகஸ் (Agaricus spp.,) மற்றும் பாலிபோரஸ் (Polyporus spp.) இனக்காளான்கள், கிழங்குகள் (Dioscorea spp.), பிசின்கள் (Acacia spp.) போன்றவற்றை தங்கள் பயன்பாட்டிற்கு மட்டுமல்லாது விற்பனைக்காகவும் சேகரிக்கின்றனர்.

இவர்கள் காடுகளில் கிடைக்கும் பச்சைக் காய்கறிகள், பசுங்கீரைகள், பூக்கள், பழங்கள், விதைகள், கிழங்குகள் மற்றும் வேர்களை உணவாக உண்டு வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் உணவாகும் இத்தாவரங்கள் முற்றிலும் அழியாவண்ணம் பயனுறு வழிகளில் பயன்படுத்தியும் பாதுகாத்தும் வருகின்றனர். இவற்றை இனங்கண்டறிய இவர்களில் எத்தனை பேர் தங்கள் இன்னுயிரை இழந்துள்ளார்களோ?

ஆயிரக்கணக்கான தாவரங்களை நன்றாக அறிந்திருப்பதோடு அவற்றின் சுவையையும் இவர்கள் நன்கு அறிந்துள்ளனர். இத்தாவரங்களிலிருந்து கிடைக்கும் உணவுப் பொருள்கள் தங்களுக்கு நீண்ட ஆயுளையும், வீரியமிக்க, ஆரோக்கியமான வாழ்வையும் அளிப்பதாக பெரிதும் நம்புகின்றனர். இவற்றில் சாமை, தினை, வரகு, கேழ்வரகு போன்ற உணவுத் தானியங்களை உண்பதால் அதிக ஆற்றலைக் கொடுப்பதாகவும் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட உணவு தானியங்களைவிட அதிக சத்துள்ளதாகவும் உணர்கின்றனர். மேலும் இவை பரம்பரை பரம்பரையாக பயிரிடப்பட்டு

வருவதால் அதிக வறட்சியைத் தாங்கக் கூடியதாகவும் நோய் எதிர்ப்புத் திறன் கொண்டதோடு வறண்ட சூழ்நிலைக்கேற்ற தகவமைவும் கொண்டவைகளாகவும் புதியவகை பயிர்ப் பெருக்கத்திற்கான மிகச்சிறந்த நற்பண்புகளையும் கொண்ட மரபணுக்களையும் தன்னகத்தே கொண்டிருக்கின்றன.

இத்தகைய தாவரங்கள் அதிக செலவின்றி எளிதில் கிடைப்பதோடு மட்டுமின்றி புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட தாவரங்களின் உற்பத்தி செலவினைவிட மிகக் குறைந்த செலவில் பயிரிடவும் முடிகிறது. இத்தாவரங்களுக்குப் போதிய நீர் முறையாகக் கிடைக்குமேயானால் அவை அதிக விளைச்சலைக் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை. மேலும் ஏற்கனவே உணவாகும் தாவரங்களின் பெருக்கத்திற்கு வேண்டிய நோய் எதிர்ப்புத் திறன், வறட்சியைத் தாங்கும் பண்புகள் அதிக ஆற்றலைக் கொடுக்கும் பண்பையும் பெற்றிருப்பதால் உலகில் பெருகிவரும் மக்கட் தொகைக்கேற்ப உணவு உற்பத்தியில் இவற்றின் பங்கு மிகவும் முக்கியமானதாகும்.

இங்கு வாழும் மலையின மக்கள் உணவாகப் பயன்படுத்தும் தாவரங்களைப் பற்றி அன்சாரி (1997) என்பர் 36 வகைத் தாவரங்களைக் கண்டறிந்து வெளியிட்டுள்ளார். இத்தாவரங்களின் பயன்பாடுகள் இடத்திற்கு இடம் மாறுபட்டுக் காணப்படுவதாகவும், இத்தாவரங்களின் பல்வேறு பாகங்கள் வெவ்வேறு தேவைகளுக்காக பலவிதங்களில் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார். மேலும், இத்தாவரங்கள் மாற்று உணவாகப் பயன்படுத்த பெரிதும் உதவும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்தாவரங்களில் Acacia tora, Brachystelma glabrum, Capparis divaricata, Elaeagnus indica, Habenaria grandilfloriformis, H.plantaginea, Indigofera cassioides, Mussacads hirsutissina, Nothopegia beddomei, Pergularia daema மற்றும் Securinga lecopyrus போன்றவை குறிப்பிடத்தக்கவைகளாகும்.

AGAVACEAE

Furcria foetide (L.) Haw. - **சீமைக் கற்றாழை**

இதன் மட்டநிலத்தண்டினை (Rhizome) அச்செடி பூப்பதற்கு முன்பாக வெளிக் கொணர்ந்து, சிறுசிறு துண்டுகளாக நறுக்கி, நீரிலிட்டு, புளியமரத்தின் இலையையும் சேர்த்து நன்றாக கொதிக்க வைத்து கிடைக்கும் பசையை சிறுசிறு உருண்டைகளாக உருட்டி வைக்கப்படுகிறது. இவ்வுருண்டைகள் சத்துள்ளதாகவும், நற்சுவையுடையதாகவும் இருப்பதால் எவ்வித உணவுமின்றி, இவ்வுருண்டையை ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்குத் தொடர்ந்து உண்டு வரலாம்.

AIZOCEAE

Giseckia pharnaceoides L. - **மணல் கீரை**

இதன் இலைகள் நன்றாக வேகவைத்து கறியாக உண்ணலாம்.

ANACARDIACEAE

Nothopegia beddomei Gamble - **பேய் தேத்தான்**

இதன் நன்கு முதிர்ந்த சாறுள்ள பழங்கள் உண்ணப்படுகிறது.

ARECAEAE

Caryota urens L. - **கூந்தல் பனை**

இதன மஞ்சரித் தண்டினை வெட்டுவதால் வடியும் பாலினை கள்ளாக உண்ணப்படுகிறது.

ASCLEPIADACEAE

Carallumma umbellata Haw. - **சிறுங்கள்ளி**

இதன் இளந்தண்டுகள் பச்சையாகவோ, வறுத்தோ உண்ணப்படுகிறது.

ELAEGNACEAE

Elaeagnus indicus Serv. - **குரங்கு திராட்சை**

இதன் பழங்கள் உணவாக உண்ணப்படுகின்றன. இதன் காய்கள் ஊறுகாயாகவும் பயன்படுத்தப்படுகின்றன.

EUPHORBIACEAE

Bridelia retusa (L.) Spreng. - **முள்ளு மருது, முள்ளு வேங்கை**

இதன் பழங்கள் உணவாகின்றன.

Securinega leucopyrus (Willd.) Muell. - Arg. - **புளாஞ்சி**

இதன் பழங்கள் உணவாகின்றன.

FABACEAE

Indigofera cassioides Rottl. ex. DC. - **நரினா**

இதன் இளந்தளிர்கள், பூவின் மொட்டுக்கள் வேகவைத்து கறியாகப் பயன்படுத்தப்படுகின்றன.

Pongammia pinnata (L.) Piere - **புங்கன்**

இதன் இளந்தளிர்கள் மற்றும் இளம் பூக்கள் கறியாகப் பயன்படுத்தப்படுகின்றன.

LAMIACEAE

Ocimum gratissimum L. - **நல்ல துளசி**

இதன் இலைகள் அசைவ உணவு செய்யும் போது, நற்சுவையும், மணமும் தருவதற்காக சேர்த்துக் கொள்ளப்படுகின்றன.

LILIACEAE

Chlorophytum tuberosum (Roxb.) Baker -

இதன் கிழங்குகள் மற்றும் இலைகள் வேகவைத்து உணவாகப் பயன்படுத்தப்படுகிறது.

MELIACEAE

Aglaia roxburghiana Mig.

இதன் முதிர்ந்த பழங்கள் உண்ணப்படுகின்றன.

MIMOSACEAE

Acacia nilotica (L.) Del. subsp. indica (Benth) Bren. - **கருவேலம்**

இதன் மரப்பட்டையுடன் வாழைப்பழம் வெல்லமும் சேர்த்து நாட்டுச் சாராயம் காய்ச்ச பயன்படுத்தப்படுகிறது.

Acacia tora (Roxb.) Craib - **இஞ்சி, செங்கைக் கொடி**

மழைக்காலத்திற்குப் பின், இதன் இலைகள் பருப்பு வகைகளுடன் சேர்த்து கறியாகப் பயன்படுத்தப்படுகிறது.

MYRSINACEAE

Ardisia solanaceae Roxb. - **மணி புஷ்பம்**

இதன் இளம் பூ மொட்டுக்கள் வேகவைத்து கறியாக உண்ணப்படுகின்றன.

ORCHIDACEAE

Habenaria plantaginea Lindl. - **கிழங்கு**

இதன் வெளிரிய கிழங்குகளை நன்றாக கழுவி பச்சையாக உண்ணப்படுகின்றன.

H.grandiflorifomis Blatter & McCann. - **கிழங்கு**

வறண்ட காலங்களில் இதன் கிழங்குகள் தோண்டியெடுத்து சுத்தம் செய்து சாறு உறிஞ்சப்படுகின்றது.

PASSIFLORACEAE

Passiflora edulis Sims - **தபசுக்காய்**

இதன் பழங்களை உண்ணப்படுகிறது. இதிலிருந்து சாறும் எடுக்கப்படுகிறது. இதன் பழங்கள் சந்தையிலும் விற்கப்படுகின்றன.

PERIPLOCACEAE

Decalepis hamiltonii Wight & Arn. - **மாகாளிக் கிழங்கு**

நன்றாக சுத்தம் செய்யப்பட்ட கிழங்குகளை ஊறுகாயாகப் பயன்படுத்தப்படுகின்றன.

RUTACEAE

Clausena dentata (Willd.) Roem. - **காட்டுக்காரை, பொட்டி**

இதன் பழங்கள் உண்ணப்படுகின்றன.

Toddalia asiatica Lam -

இதன் பழங்கள் உண்ணப்படுகின்றன.

RUBIACEAE

Caıdiospermum halicacabum L. - **முடக்கத்தான்**

இதன் பழங்கள் கத்திரிக்காயைப் போன்று பயன்படுத்தப்படுகின்றது.

S.torvum Sw - **காட்டுச் சுண்டை**

இதன் இளந்தளிர்கள் காய்கறியாகப் பயன்படுத்தப் படுகின்றன.

VERBENACEAE

Lantana camara L. - **உன்னி**

இதன் பழங்கள் உண்ணப்படுகின்றன.

இந்த ஆய்வில் இங்கு வாழும் மலையினமக்கள் 59 வகையான தாவர இனங்களின் இளந்தண்டுகள், பழங்கள், விதைகள் மற்றும் கிழங்குகள் இவைகளை உணவாக உண்கின்றனர். இவற்றில் காய்கறிகளாக 17- தாவர இனங்களும், 21 - தாவரங்களின் பழங்களும், 13 - தாவர இனங்களின் விதைகள், 8 - தாவர இனங்களின் கிழங்குகள், குமிழங்கள், மட்டநிலத் தண்டுகள் ஆகியனவும் அடங்கும்.

VEGETABLES (காய்கறிகள்)

1. Abelmoschus esculentus (L.) Monch - MALVACEAE

   இதன் பிஞ்சுகள் உணவாக உண்ணப்படுகின்றன.

2. Allophyllus serratus (Roxb.) Kurz. - SAPINDACEAE

   இதன் பசும் தண்டுகள் உணவாக உண்ணப்படுகின்றன.

3. Cardiosperum helicacabum L. - SAPINDACEAE

   இதன் இலைகள் உணவில் சேர்த்துக் கொள்ளப்படுகிறது.

4. Celosia argentea L. - AMARANTHACEAE

   இதன் இலைகள் கீரையாக பயன்படுத்தப்படுகிறது.

5. Centella asiatica (L.) Urban - APIACEAE

   இதன் பசும் கீரைகள் உணவில் பயன்படுத்தப்படுகிறது.

6. Cissus quadrangularis L. - VITACEAE

இதன் இளந்தண்டுகள் உணவாகப் பயன்படுத்தப் படுகிறது.

7. Cleome gynendra L. - CLEOMACEAE

இதன் இலைகள் உணவாக உண்ணப்படுகிறது.

8. Colocasia esculenta L. - ARACEAE

இதன் இலைகள் கீரையாகப் பயன்படுத்தப்படுகிறது.

9. Digera muricata (L.) Mart - AMARANTHACEAE

இதன் இலைகள் கீரையாக உண்ணப்படுகிறது.

10. Luffa acutangula (L.) Roxb. - CUCURBITACEAE

இதன் காய்கள் உணவாக உண்ணப்படுகிறது.

11. L. aegyptiaca Mill. - CUCURBITACEAE

இதன் காய்கள் உணவாக உண்ணப்படுகின்றன.

12. Phyllanthus embelica L. - EUPHORBIACEAE

இதன் காய்கள் ஊறுகாய் போன்றவை தயாரிக்கப் பயன்படுகின்றன.

13. P. indofischeri Bennet - EUPHORBIACEAE

இதன் காய்கள் ஊறுகாய் தயாரிக்கப் பயன்படுகின்றன.

14. Physalis minima L. - SOLANACEAE

இதன் இலைகள் கீரையாகப் பயன்படுத்தப்படுகின்றன.

15. Portulaca oleracea L. - PORTULACACEAE

இதன் இலைகள் கீரையாக உண்ணப்படுகின்றன.

16. Solanum nigrum L. - SOLANACEAE

இதன் இலைகள் கீரையாக உண்ணப்படுகின்றன.

17. Solanum torvum Sw. - SOLANACEAE

இதன் காய்கள் உணவாக உண்ணப் பயன்படுகின்றன.

FRUITS (பழங்கள்)

18. Aegle marmelos (L.) Serr. Correa - RUTACEAE
இதன் பழங்கள் உணவாக உண்ணப்படுகின்றன.

19. Ananas comosus (L.) Merr. - BROMELIACEAE
பழமாக உண்ணப்படுகிறது.

20. Annona squamosa L. - ANNONACEAE
இதன் பழங்கள் உண்ணப்படுகிறது.

21. Artocarpus heterophyllus Lam. - MORACEAE
இதன் பழங்களும் விதைகளும் உணவாக உண்ணப்படுகிறது.

22. Canthium parviflorum Lam. - RUBIACEAE
இதன் பழங்கள் உண்ணப்படுகின்றன.

23. Capparis grandis Will. ex Hook f. & Thom. - CAPPARACEAE
இதன் பழங்கள் உண்ணப்படுகின்றது.

24. Capsicum frutescens L. - SOLANACEAE
இதன் காய்களும் பழங்களும் உணவில் சுவையூட்டுவதாகப் பயன்படுத்தப்படுகின்றது.

25. Carica papaya L. - CARICACEAE
இதன் காய்களும் பழங்களும் உண்ணப்படுகின்றன.

26. Citrus sinensis (L.) Osbeck - RUTACEAE
இதன் பழங்கள் உண்ணப்படுகின்றன.

27. Citrus reticulata Blanco - RUTACEAE
இதன் பழங்கள் உண்ணப்படுகின்றன.

28. Cucumis melo L. - CUCURBITACEAE
இதன் பழங்கள் உண்ணப்படுகின்றன.

29. Cucumis sativus L. - CUCURBITACEAE
இதன் காய்களும் பழங்களும் உண்ணப்படுகின்றன.

30. Cucurbita maxima Duch. ex Lam. - CUCURBITACEAE

இதன் காய்களும் பழங்களும் உண்ணப்படுகின்றன.

31. Cucurbita moschata (Duch.) Poir. - CUCURBITACEAE

இதன் காய்களும் பழங்களும் உண்ணப்படுகின்றன.

32. Lycopersicon esculentum Mill. - SOLANACEAE

இதன் காய்களும் பழங்களும் உண்ணப்படுகின்றன.

33. Mangifera indica L. - ANACARDIACEAE

இதன் காய்களும் பழங்களும் உண்ணப்படுகின்றன.

34. Musa sabientum L. - MUSACEAE

இதன் காய்களும் பழங்களும் உண்ணப்படுகின்றன.

35. Pithecellobium dulce (Roxb.) Benth. - MIMOSACEAE

இதன் காய்களில் உள்ள ஏரியல் பகுதி உண்ணப்படுகின்றன.

36. Syzygium cuminii (L.) Skeels - MYRTACEAE

இதன் பழங்கள் உண்ணப்படுகின்றன.

37. Tamarindus indicus L. - CAESALPINIACEAE

இதன் பூக்களும் பழங்களும் உணவில் சுவையூட்டிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன.

PODS AND SEEDS (விதைகள்)

38. Anacardium occidentalis L. - ANACARDIACEAE

இதன் விதைகள் உணவில் மணமூட்டிகளாகவும் சுவையூட்டிகளாகவும் பயன்படுத்தப்படுகின்றன.

39. Cajanus cajan (L.) Mills. - FABACEAE

இதன் முற்றிய விதைகள் உணவாகப் பயன்படுத்தப் படுகின்றன.

40. Coriandrum sativum L. - APIACEAE

இதன் விதைகள் மணமூட்டிகளாகப் பயன்படுத்தப் படுகின்றன.

41. Eleusine coracana (L.) Gaerth. - POACEAE
இதன் விதைகள் உணவுத் தானியமாகப் பயன்படுத்தப் படுகின்றன.

42. Entada pursaetha DC. - FABACEAE
இதன் விதைப் பருப்புகள் உண்ணப்படுகின்றன.

43. Oryza sativa L. - POACEAE
இதன் விதைகள் உணவு தானியமாக பயன்படுத்தப் படுகின்றன.

44. Panicum miliaceum L. - POACEAE
இதன் விதைகள் உணவு தானியமாக பயன்படுத்தப் படுகின்றன.

45. Paspalum scrobiculatum L. - POACEAE
இதன் விதைகள் உணவு தானியமாக பயன்படுத்தப் படுகின்றன.

46. Pennisetum typhioides (Burm. f.) Stapf. & Habbard - POACEAE
இதன் விதைகள் உணவு தானியமாக பயன்படுத்தப் படுகின்றன.

47 Piper nigrum L. - PIPERACEAE
இதன் விதைகள் மணமூட்டியாகப் பயன்படுத்தப் படுகின்றன.

48 Sesamum indicum L. - PEDALIACEAE
இதன் விதைகளிலிருந்து சமையல் எண்ணெய் உற்பத்தி செய்யப்படுகிறது

49. Seteria italica (L.) P Beauv. - POACEAE
இதன் விதைகள் உணவு தானியமாக பயன்படுத்தப் படுகின்றன

50 Sorghum bicolor (L.) Mocuch. - POACEAE
இதன் விதைகள் உணவு தானியமாக பயன்படுத்தப் படுகின்றன.

TUBERS AND RHIZOME

(குமிழுங்கள், கிழங்குகள் மற்றும் மட்டநிலத் தண்டுகள்)

51. Allium cepa L. - ALLIACEAE

இதன் குமிழுங்கள் உணவில் மணமூட்டியாகப் பயன்படுத்தப்படுகிறது.

52. Allium sativum L. - ALLIACEAE

இதன் விதைகள் மணமூட்டியாகப் பயன்படுத்தப் படுகின்றன.

53. Amorphophallus paeoniifolius (Dennst.) Nicolson - ARACEAE

இதன் மட்டநிலத்தண்டு உணவாகப் பயன்படுத்தப் படுகிறது.

54. Arisaema leshenaultii Blume - ARACEAE

இதன் மட்டநிலத்தண்டு உணவாகப் பயன்படுத்தப் படுகிறது.

55. Curcuma domestica Valeton - ZINGIBERACEAE

இதன் மட்டநிலத்தண்டு உணவில் மணமூட்டியாகப் பயன்படுத்தப்படுகிறது.

56. Dioscorea pentaphylla L. - DIOSCOREACEAE

இதன் கிழங்குகள் உணவாகப் பயன்படுத்தப் படுகின்றன.

57. Ipomoea batatus (L.) Lam. - CONVOLVULACEAE

இதன் கிழங்குகள் உணவாகப் பயன்படுத்தப் படுகின்றன.

58. Zingiber officinalie Rose - ZINGIBERACEAE

இதன் மட்டநிலத்தண்டு உணவில் மணமூட்டியாகப் பயன்படுத்தபபடுகிறது.

முழவுரை

உணவு உற்பத்தியில் கணிசமான பெருக்கத்தைப் பெற்றிருந்தபோதிலும், உலகில் வாழும் 800 மில்லியன் மககள் ஒரு நாளைக்கு இருவேளை உணவினைக் கூட பெறமுடியவில்லை. மேலும், கிட்டத்தட்ட ஒரு மில்லியன் மக்கள் தங்கள் வாழ்விற்குத் தேவையான உணவினை முயன்று பெற முடியாத ஏழ்மை நிலையில் வாழ்கின்றனர்.

அமெரிக்காவில் வாசிங்டன் மாநிலத்தில் அமைந்துள்ள World Watch நிறுவனத்தின் கூற்றுப்படி, தனி நபருக்கான உணவு தானியத்தின் உற்பத்தி தற்போது குறைந்து கொண்டே வருகின்றது. சராசரி வருடாந்திர உணவு உற்பத்தி 1950 லிருந்து 1954 இல் 30 மில்லியன் டன்னாக இருந்தது. 1986 - 1992 இல் இதன் அளவு 12 மில்லியன் டன்னாக குறைந்துவிட்டது. உலகின் மக்கள் தொகை 8.9 பில்லியன்களாக உயரும்போது, 2030ல் இவை 9 மில்லியன்களாகக் குறையக்கூடும் எனவும், அடுத்துவரும் 40 வருடங்களில் உலகளாவிய உணவுப் பற்றாக்குறை ஏற்படலாம் எனவும் தெரிவித்துள்ளது.

உணவு மற்றும் வேளாண் நிறுவனம் (Food and agricultural Organization) குறைந்த வருமானமும், உணவுப் பற்றாக்குறை உள்ள நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக வரிசைப் படுத்தியுள்ளது. நாளுக்கு நாள் பெருகிவரும் மக்கள் தொகையாலும் வறுமையினாலும் மூன்றில் ஒரு பங்கு மக்கள் பாதியளவு உணவையே பெறுகின்றனர். தற்போதைய உணவு உற்பத்தி, 950 மில்லியனுக்கும் மேலாக பெருகிக் கொண்டேவரும் மக்களுக்குப் போதுமானதாக இருக்காது என்பது வெளிப்படையான உண்மையே. இவ்வாறு பெருகிவரும் மக்கள் பெருக்கம் நம் உணவுப் பாதுகாப்பினை அச்சுறுத்துகின்றது.

சமீபத்தில் ரோமில் நடைபெற்ற உலக உணவு உச்சி மாநாட்டில் (World Food Summit) இம்மண்ணிலிருந்து வறுமையைப் போக்கி அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பு

(Food Security for all) என்ற உயர்ந்த இலக்கினை அடைய அறைகூவல் விடப்பட்டது. மேலும் உணவுப் பற்றாக்குறையினை 2015ல் பாதியாகக் குறைக்கவும் முடிவு எடுக்கப்பட்டது. வறுமையையும், ஊட்டச்சத்துக் குறைவினையும் போக்கவேண்டுமென்ற இவ்வெண்ணம் உணவு உற்பத்தித் திறனை அடுத்துவரும் 15 ஆண்டுகளில் இரட்டிப்பாக்குவதையே முதன்மையாக்குகிறது.

உணவு உற்பத்தியைப் பெருக்க, பயிர் பெருக்க் முறை (Plant Breeding) ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. பயிர் பெருக்கத்திற்கு எண்ணற்ற மரபணு மாற்றங்கள் அவசியமாகும். உணவுப் பாதுகாப்பிலும் மனிதர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதிலும் மரபணு ஆதாரங்கள் (Genetic resources) முக்கிய பங்கினை வகிக்கின்றன. பயிரிடப்படா தாவரங்களின் விதைகள், கிழங்குகள், குமிழங்கள், மட்ட நிலத்தண்டுகள் போன்றவை எண்ணற்ற மரபணு ஆதாரங்களை இன்றளவும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றன. பல்வேறு இடங்களில் வளரும் ஒரே இனத்தைச் சார்ந்த தாவரங்கள் அதிக மரபணு மாற்றங்களைக் கொண்டிருக்கின்றன. மனித சமுதாயத்திற்கு இத்தாவரங்களின் பயன்மிகு மதிப்புகளும் சுற்றுச்சூழல் முக்கியத்துவமும் இன்றளவும் சரியாகக் கண்டறியப்படவில்லை.

பயிரிடாத் தாவரங்கள் நோய் எதிர்ப்புத் திறன், பூச்சிகளின் தாக்குதல், வறட்சியைத் தாங்குதல் போன்ற பல்வேறு எதிர்ப்புத் திறன்களைத் தன்னகத்தே இயற்கையாகவே கொண்டுள்ளன. இத்தாவரங்களை விரும்பி உண்ணும் உணவு ஆதாரங்களாக தங்கள் சந்ததியினருக்காக தலைமுறை தலைமுறையாக பயிரிடாமலும் பயிரிட்டும் சேகரித்து வைத்துள்ளனர். மேலும் மரபணு ஆதாரங்களைப் பாதுகாத்தும் வைத்துள்ளனர். எனவே பயிரிடப்படா தாவரங்களின் மரபு வழி அறிவானது இத்தாவரங்களில் ஏற்படும் மரபணு சிதைவினை தடுப்பதோடு பயிர்ப் பெருக்கத்திற்கும் மரபணு பொறியியலுக்கும் (Genetic Engineering) எண்ணற்ற மரபணு பொருட்களை அளிக்கும் என்பதில் ஐயம் இல்லை.

பட்டியல் - I

மருந்தாகும் தாவரங்கள்

தாவரப் பெயர்கள்	குடும்பம்	வழக்குப் பெயர்	பயன்படும் பாகங்கள்
Abrus precatorius L.	Fabaceae	குண்டுமணி	சதைகள், வேர்
Acalypha indica L.	Euphorbiaceae	குப்பைமேனி	இலைகள்
Achyranthus aspera L.	Amaranthaceae	நாயுருவி	வேர்
Aegle marmelos (L.) Corr.Serr.	Rutaceae	வில்வம்	இலைகள்
Aerva lanata (L.) Juss.	Amaranthaceae	பூனைப்பூ	இலைகள்
Aglaia elaegnoidea (Juss.) Benth	Meliaceae	ஈரமுள்ளி	இலைகள்
Aloe vera (L.) Burn. f.	Liliaceae	வாலுமுக்கித்தளை	இலைகள்
Alpinia galanga L.	Zingiberaceae	சிற்றரத்தை	வேர்கள்
Alstonia scholaris (L.) R.Br	Apocynaceae	பலாமரம்	மரப்பட்டை
Alternanthera sesslis (L.)R.Br.	Amaranthaceae	பொன்னாங்கன்னி	இலைகள்
Arisasma lescheroultii Blums	Araceae	காட்டுககருணை	கிழங்குகள்
Ananas comosus (L.) Merr	Bromeliaceae	அன்னாசிப்பழம்	காய்
Andrographis alata Nees	Acanthaceae	பெரிய நங்கை	இலைகள்
Andrographis paniculata L.	Acanthaceae	சிறிய நங்கை	இலைகள்

Anisomeles indica (L.)Kuntze	Laminaceae	பேய்மிரட்டி	முழுத்தாவரம்
Anisochilus carnosus (L.f.) Wallich	Laminaceae	சேற்றுப்புண் தழை	இலைகள்
Artocarpus heterophyllus Lam.	Moraceae	பலா	மரப்பட்டை
Annona reticulata L	Annonaceae	சீத்தாபழம்	இலைகள்
Anocetochilus eltatus Lindl	Orchidaceae	மயுரசிகை	முழுத்தாவரம்
Aponogeton mono-stachum	Aponogetanaceae	கொட்டிக்கிழங்கு	கிழங்கு
Argemone mexicana L	Papaveraceae	நாய் கடுகு	பால்
Argyreia cuneata Ker Gawl.	Convolvulaceae	வெட்டைச்செடி	வேர்கள்
Arisaema tortuosum L.	Araceae	கருணைக்கிழங்கு	இலை, மட்டநிலத்தண்டு
Aristolochia indica L.	Aristolochiaceae	பெருமருந்துக்கொடி	இலைகள்
Aristolochia tagala Cham.	Aristolochiaceae	கோழிக்கூடு செடி	இலைகள்
Asparagus racemosus Willd	Asparagaceae	தண்ணீர்விட்டான் கிழங்கு	கிழங்குகள்
Asystasia gangetica (L.) Anders	Acanthaceae	குங்குலச்செடி	இலைகள்
Azadirahta indica A.Juss	Meliaceae	வேப்பமரம்	இலைகள்
Bacopa monnieri (L.) Penn.	Scrophulariaceae	பிரம்மி	முழுத்தாவரம்
Balanophora fungosa Forster & Forster f	Balanophoraceae	நிலகுங்கிலியம்	தண்டுகள்
Bambusa arundinacea L.	Poaceae	மூங்கில்	இலைகள்

Basella alba var. rubra L.	Basellaceae	பசலைக்கீரை	தண்டு, கீரைகள்
Bauhinia racemosa Lamk.	Caesalpiniaceae	ஆத்தி	மரப்பட்டை
Begonia integrifolia L.	Begoniaceae	செந்தண்டு	தண்டுகள்
Begonia malabarica Lam.	Begoniaceae	செந்தண்டு	இலைகள்
Bidens pilosa L.	Asteraceae	நேத்திரம் பூண்டு	முழுத்தாவரம்
Benkara malabarica (Lam.) Tino.	Rubiaceae	பாப்பரை முள்ளி	பழங்கள்
Boerhavia diffusa L.	Nyctaginaceae	சாரனை	வேர்கள்
Butea monosperma (Lam.) Taub.	Fabaceae	பொரசு	பிசின்
Cajanus cajan (L.) Millsp.	Fabaceae	துவரை	இலைகள்
Calotropis gigantea (L.)R.Br.	Asclepiadaceae	எருக்கு	வேர், பால்
Canthium dicoccum (Gaern.) Teijsm & Binnend.	Rubiaceae	அலும்ப மரம்	இலைகள்
Cardiospermum helicacabum L.	Sapindaceae	முடக்கற்றான்	இலை, தண்டு
Cassia fistula L	Caesalpiniaceae	சரக்கொன்றை	இலைகள்
Cassytha filiformis L.	Lauraceae	அந்தரக்கொடி	முழுத் தாவரம்
Centella asialica (L.)Urban	Apiaceae	வல்லாரை	இலைகள்
Cipandessa baccifera (Roth.) Miq.	Meliaceae	பீனாதலை-	தண்டுகள்
Cissus quadrangularis L.	Vitaceae	பிரண்டை	இளந்தண்டுகள்

Chloroxylon sweitenia DC.	Flindersiaceae	பொரசு	தண்டுகள்
Coccinia grandis (L.) Voigt	Cucurbitaceae	கோவை	விதைகள், இலைகள்
Commelina erecta L.	Commelinaceae	மயூரசிங்கு	இலைகள்
Corollocarpus epigaeus (Rottl.)Clark	Cucurbitaceae	ஆகாச கருடன்	கிழங்குகள்
Curcuma angustifolia L.	Zingiberaceae	ஆரோரூட் கிழங்கு	கிழங்குகள்
Cyanodon dactylon (L.) Pers.	Poaceae	அருகம்புல்	இலைகள்
Dalbergia lanceolaria L f.	Fabaceae	வெளங்கு	மரப்பட்டை
Datura metel L	Solanaceae	கருஊமத்தை	இலைகள்
Derris indica (Lam.) Bennet.	Fabaceae	தெகில்	இலைகள், பூக்கள்
Dodonaea angustifolia L.f.	Sapindaceae	விராலி	இலைகள்
Drynaria quercifolia (L.) Sm.	Drynariaceae	முடவாட்டுக்கால்	இரசோம்கள்
Eclipta prostrata (L.) L.	Asteraceae	கரிசலாங்கண்ணி	இலைகள்
Elaeocarpus tuberculatus Roxb.	Elaeocarpaceae	ருத்துராட்சம்	மரப்பட்டை
Enicostemma axillare (Lam) Raynal	Gentianaceae	வெள்ளருகு	இலைகள்
Entada pursaetha DC	Mimosaceae	பப்பரான்கொட்டை	விதைகள்
Evolvulus alsinoides (L.) L.	Convolvulaceae	நீலப்பூ	முழுத்தாவரம்
Ficus hisida L.f.	Moraceae	பேப்பெருக்கு	பழங்கள்
Ficus racemosa L.	Moraceae	அத்திமரம்	மரப்பட்டை
Ficus religiosa L.	Moraceae	அரசமரம்	மரப்பட்டைகள்

Filicum decipiens Thw.	Sapindaceae	பேய்மிரட்டி	இலைக்காம்புகள்
Gloriosa superba L.	Liliaceae	கலப்பைக்கிழங்கு	கிழங்குகள்
Glycyrrhiza glabra L.	Fabaceae	அதிமதுரம்	வேர்கள்
Gymnema sylvestre (Retz.) R Br.	Asclepiadaceae	சர்க்கரைக்கொல்லி	இலைகள்
Helicters isora L.	Sterculiaceae	வலம்புரி	விதைகள்
Hydrocotyle javanica Thunb	Apiaceae	காமாமூலக்கொடி	முழுச்செடி
Ipomoea obscura (L.)Ker-Gawl	Convolvulaceae	சிறுதாளி	இலைகள்
Jatropa curcas L.	Euphorbiaceae	வெள்ளைக்கத்தாளை	பால்
Justicia adhatoda L.	Acanthaceae	ஆடாதொடை	இலைகள்
Justicia betonica L.	Acanthaceae	குறுங்குடி செடி	இலைகள்
Kalanchoe lanceolata (Forsk) Pers.	Crassulaceae	பசலைக்கொடி	இலைகள்
Lannea coromandelica (Houtt) Merr.	Anacardiaceae	உதியமரம்	இலைகள்
Lantana camara L.	Verbenaceae	உன்னிச்செடி	இலைகள்
Leacas aspera Spr.	Laminaceae	தும்பை	இலைகள்
Madhuca indica Gimel	Sapotaceae	காட்டிலுப்பை	மரப்பட்டை
Mangefera indica L	Anacardiaceae	மாமரம்	பிஞ்சுகள்
Manilkara zapota (L.) Royan	Sapotaceae	சப்போட்டா	பழங்கள்
Mimosa pudica L.	Mimosaceae	தொட்டால்வாடி	இலைகள்
Moringa oleifera Lam	Moringaceae	முருங்கைமரம்	பிசின்

Mucuna pruriens (L.) DC	Fabaceae	பூனைக்காலி	வித்திலைகள்
Musa acuminata Colla	Musaceae	காட்டுவாழை	இலைகள்
Myristica dactyloides Gaertn	Myristicaceae	காட்டு ஜாதிக்காய்	காய்கள்
Orthosiphon thymiflorus (Roth) Sleensen	Lamiaceae	குச்சிதுளசி	இலைகள்
Oxalis corniculata L.	Oxalidaceae	சிறுபுளிச்சான்	முழுத் தாவரம்
Passiflora foetida L.	Passifloraceae	பூனைகுட்டி பழம்	பழங்கள்
Pedalium murex L.	Pedaliaceae	யானை நெருஞ்சி	இலைகள்
Peperomia teetraphylla (Forst f) Hook & Arn.	Peperomiaceae	அலிங்கு செடி	இலைகள்
Perqularia daemia (Forssk) Chiov	Asclepiadaceae	வேலிப்பருத்தி	இலைகள்
Polygala arvensis Willd.	Polygalaceae	பூமிப்பூண்டு	முழுத்தாவரம்
Pterocarpus marscipium L.	Fabaceae	வேங்கை	மரப்பட்டை
Pothos scandens L	Araceae	பன்னிபிரண்டை	இலைகள்
Psidium guajava L.	Myrtaceae	கொய்யா	இலைகள்
Pyrrosia mollis (Kuntex) Ching	Polypodiaceae	பாறைபச்சை	முழுத்தாவரம்
Ricinus communis L.	Euphorbiaceae	ஆமணக்கு	பால்
Sansevieria roxburghiana Schult & Schult. f	Agavaceae	நாகதாளி	தண்டுகள்
Schefflera wallıciana Harms	Araliaceae	பேய்மிரட்டி	இலைகள்

Scoparia dulcis L.	Scrophulariaceae	நிலவேம்பு	இலைகள்
Sida cordata L.	Malvaceae	வெள்ளுரம்	இலைகள்
Solanum anguivi Lamk.	Solanaceae	சுண்டை	பழங்கள்
Solanum erianthum Don.	Solanaceae	ஆனை சுண்டை	விதைகள்
Solanum nigrum L.	Solanaceae	குன்னி	இலைகள்
Solanum surattense Burm f.	Solanaceae	கண்டங்கத்தரி	விதைகள்
Solanum trilobatum L.	Solanaceae	தூதுவளை	இலைகள்
Spermacoce hispida L.	Rubiaceae	நத்தைச்சூரி	இலைகள்
Syzygium cumini (L.) Skeel	Myrtaceae	நாவல்	இலைகள், விதைகள்
Tephrosia purpurea (L.)Pers.	Fabaceae	கொளுஞ்சி	வேர்கள்
Terminalia arjuna (DC.) Wight & Arn.	Combretaceae	மதுரமரம்	மரப்பட்டை
Terminalia bellerica (Gaerth.) Roxb.	Combretaceae	தானிமரம்	காய்கள்
Terminalia chepula Retz.	Combretaceae	கடுக்காய்	காய்கள்
Tinospora cordifolia (Willd.) Merr	Menispermaceae	சீந்தில்	தண்டுகள்
Trichosanthes cucumerina L.	Cucurbitaceae	தெரு புடல்	இலைகள்
Tridax procumbens L.	Asteraceae	கிணத்துப்பூண்டு	இலைகள்
Trigonella foenum-graecum L.	Fabaceae	வெந்தயம்	விதைகள்

பட்டியல் - II

உணவாகும் தாவரங்கள்

1.	Abelmolchus esculentus (L.) Monch	Malvaceae	வெண்டை	இளங்காய்கள்
2.	Aegle marmelos (L.) Serr. Correa	Rutaceae	வில்வம்	பழங்கள்
3.	Allium cepa L.	Alliaceae	வெங்காயம்	குமிழ்தண்டு
4.	Allium sativum L.	Alliaceae	வெள்ளைப்பூண்டு	குமிழ்தண்டு
5.	Allophylus serratus (Roxb.) Kurz.	Sapindaceae		பசுமையான இலைகள்
6.	Amorphophallus paeoniifolius (Denst.)Nicol.	Araceae	கருணைக்கிழங்கு	அடிமட்டதண்டு
7.	Ananas comosus (L.) Merr.	Bromeliaceae	அன்னாசிபழம்	பழங்கள்
8.	Anacardium occidentalis L.	Anacardiaceae	முந்திரி	விதைகள்
9.	Annona squamosa L.	Annonaceae	சீத்தாபழம்	பழங்கள்
10.	Arisaema leshenaultii Blume	Araceae	சேப்பங்கிழங்கு	கிழங்குகள்
11.	Artocarpus heterophyllus Lam	Moraceae	பலாப்பழம்	பழங்களும் விதைகளும்
12.	Cajanus cajan (L.) Millsp.	Fabaceae	துவரை	விதைகள்
13.	Canthium parviflorumt Lam	Rubiaceae	காரைப்பழம்	பழங்கள்
14.	Capparis grandis L.6	Capparaceae	விளாம்பழம்	பழங்கள்
15.	Capsicum frutescens L.	Solanaceae	மிளகாய்	பழங்கள்
16.	Cardiospermum helicacabum L.	Sapindaceae	வாதமடக்கி	இலைகள்
17.	Carrica papaya L.	Caricaceae	பப்பாளி	பழங்கள்
18.	Celosia argentea L.	Amaranthaceae	மவுனிக்கீரை	இலைகள்
19.	Centella asiatica (L.) Urban	Apiaceae	வல்லாரை	இலைகள்
20.	Cissus quadrangularis L.	Vitaceae	பிரண்டை	இளந்தண்டுகள்

21.	Citrus sinensis (L.) Osbeck	Rutaceae	ஆரஞ்சு	பழங்கள்
22.	C. reticulata Blanco	Rutaceae	கமலா ஆரஞ்சு	பழங்கள்
23.	Cleome gynandra L.	Cleomaceae	நல்லவேளை	இலைகள்
24.	Coccinia grandis (L.) Voigt	Cucurbitaceae	கோவை	பழங்கள்
25.	Colocasia esculenta L.	Araceae	செம்பு கீரை	இலைகள்
26.	Coriandrum sativam L.	Apiaceae	கொத்தமல்லி	பழங்கள்
27.	Cucumis melo L.	Cucurbitaceae	சுங்காங்காய்	பழங்கள்
28.	Cucumis stisvas L.	Cucurbitaceae	வெள்ளரிக்காய்	பச்சைக்காய்கள், பழங்கள்
29.	Cucurbita maxima Duch.ex Lam.	Cucurbitaceae	பரங்கிக்காய்	காய்கள்,பழங்கள்
30.	Cucurbita moschata (Duch..) Poiret	Cucurbitaceae	பூசணிக்காய்	பழங்கள்
31.	Curcuma domestica Valeton	Zingiberaceae	மஞ்சள்	காய்ந்த ரைசோம் பகுதிகள்
32.	Digera muricata (L.)C.Martius	Amaranthaceae	பண்ணைக்கீரை	இலைகள்
33.	Dioscorea pentaphylla L.	Dioscoreaceae	வள்ளிக்கொடி	கிழங்குகள்
34.	Eleusine coracana (L.) Gaertn	Poaceae	கேழ்வரகு, ராகி	விதைகள்
35.	Entada pursaetha DC.	Fabaceae	கக்கான் கொட்டை	விதைகள்
36.	Ipomoea batatus (L.) Lam.	Convolvulaceae	சர்க்கரைவள்ளி	கிழங்குகள்
37.	Luffa acutangula (L.) Roxb.	Cucurbitaceae	பீர்க்கங்காய்	காய்கள்
38.	Luffa cylindrica(L.) Roemer	Cucurbitaceae	நுரைப்பீர்க்கு	காய்கள்
39.	Lycopersicon lycopersicum(L)Karsten	Solanaceae	தக்காளி	பழங்கள்
40.	Mangifera indica L.	Anacardiaceae	மாமரம்	பழங்கள்

41	Musa paradisiaca L.	Musaceae	வாழைமரம்	பழம்,காய்,தண்டு
42	Oryza sativa L.	Poaceae	நெல்	தானியங்கள்
43	Panicum miliaceum L.	Poaceae	வரகு	தானியங்கள்
44	Paspalum scrobiculatum L.	Poaceae	சாமை	தானியங்கள்
45	Pennisetum typhoides (Burm.f.) Stah & Hubbard	Poaceae	கம்பு	தானியங்கள்
46	Phyllanthus embelica L.	Euphorbiaceae	நெல்லி	காய்கள்
47	P. indofischeri Bennet	Emphorbiaceae	பெருநெல்லி	காய்கள்
48	Physalis minima L.	Solanaceae	சொடக்குத்தக்காளி	இலைகள்
49	Piper nigrum L.	Piperaceae	மிளகு	விதைகள்
50	Pithecellobium dulce (Roxb.)Benth	Mimosaceae	கொடுக்காய்ப்புளி	ஏரியல் பகுதி
51	Portulaca *oleraceae* L.	Portulaceae	பசலைக்கீரை	இலைகள்
52	Sesamum indicum L.	Pedaliaceae	எள்ளு	விதைகள்
53	Setaria italica (L.) P.Beauv.	Poaceae	தினை	விதைகள்
54	Solanum nigrum L.	Solanaceae	மணத்தக்காளி	இலைகள்,காய்கள்
55	S.torvum Sw.	Solanaceae	சுண்டை	பச்சைக்காய்கள்
56	Sorghum bicolor (L.)Mocuch.	Poaceae	சோளம்	விதைகள்
57	Syzygium cumini (L.)Skeels	Myrtaceae	சிறுநாவல்	பழங்கள்
58	Tamarindus indicus L.	Caesalpiniaceae	புளியமரம்	பழங்கள், பூக்கள்
59	Zingiber officinale Rosc	Zingiberaceae	இஞ்சி	காய்மட்ட நிலத்தண்டு

துணைநின்ற நூல்களும் வெளியீடுகளும்

Alagesaboopathi, C. 1994. Medico-Botanical survey of plants in Kangamalai hills of Salem. *Ancient Sci. Life* 149 (1&2) : 112 - 116

Alagesaboopathi, C., Dwarakan,. P. and Balu, S. 1999. Plants used as medicine by tribals of Shervarayan hills, Tamil nadu *J.Econ. Tax. Bot.* 49 : 391 - 393.

Anonymous, 1918. *Gazatteer of Salem District* . Vol 1: 6-43.

Anonymous, 1940-1976. *Wealth of India.* Council of Scientific and Industrial Research, New Delhi, Vol.1-11.

Anonymous, 1981.*Census of India : Salem and Trichirappalli District - Tamil nadu Series* - I. Vol XX, P.147.

Ambalavana Kavirayar, 1980. *Aappaleswara Sathagam explanation by Pulavar Rasu.* South Indian Saiva Siddhanta works, Publishing Society, Tirunelvelly Ltd.

Ansari, A.A., Diwahar, P.G. and Dwarakan, P.1993.Less known edible plants of Shervarayan and Kolli hills. *J. Econ Tax. Bot.* 17(1) : 245-247.

Ansari, A.A. 1997. Less known wild edible plants of Shervarayan and Kolli hills of South India. In : S.K. Jain (Ed.) *Contribution of Indian Ethnobotany.* Scientific publishers, Jodhpur, India, pp. 243-247.

Chopra, R.N., Nayar, S.L. and Chopra, I.C. 1955. *Glossary of Medicinal Plants of India.* Council of Scientific & Industrial Research, NewDelhi.

Cotton, C.M. 1996. *Ethnobotany-Principles and Applications.* John Wiley, New York, USA.

Dash, P.K. 1998. Immunomodulatory medicinal herbs and their evaluation against Mastitis. In : S.K. Dwivedi (Ed.) *Techniques for scientific validation and evaluation of ethnoverterinary practices.* IVRI, Izatnaga, pp. 59-64.

Dastur, J.F. 1964. *Useful plants of India and Pakistan*. Taraporevalas & Sons, Bombay.

Devasagayam, N. 1980. Salem Mavatta Malaiyali Pälangudikalin purana kathaikalum averkal pakuthiyil perunkkarakala sava adakamum. In : Tamilnadan. (Ed.) *Salem Mavattam Sila Aaivukal*. Kaavya, Bangalore.

Drury, C.H. 1873. *The Useful plants of India*. London.

Duaisamy, V.R. 1988. Kollimalai Mariyathai. In : Tamilnadan (Ed.). *Salem Mavattam Sila Aaivukal*. Kaaviya, Bangalore.

Dwarakan,P.1999. Less known plants of Kolli hills in Namakkal District, Tamil Nadu In : National Seminar on Siddha system of Medicine "Focus on current Status", Organised by Coimbatore District Siddha Assistant Medical Officers'Association, Coimbatore.

Dwarakan, P and Alagesaboopathi, C. 1999. Traditional crude drug resources used for human and live stock diseases in Salem District, Tamil Nadu. *J.Econ. Tax. Bot*. 47 : 421-424.

Dwarakan, P. and Ansari, A.A. 1992. Ethnobotanical notes of Valikadupatti and surroundings of Kolli malais of Salem District, Tamil Nadu. *J.Econ. Tax. Bot.* (Addl. Ser) 10 : 495 - 499.

Dwarakan, P. and Ansari A.A. 1996. Less known uses of plants of Kollimalai (Salem District) Tamil Nadu in South India. *J. Econ. Tax Bot.* (Addl Ser) 12 : 284 - 286.

Dwarakan,P , Rajasekaran. K. and Selvam, A.B. 1999. Hitherto unreported medicinal uses of plants from Kolli hills. *Ancient Sci. Life* 12(3&4) . 259 - 260

Ehrenfels, O R B 1943 Traces of material civilization among kolli malayali. *J. Asia. Soc. Bengal* 9(1) : 29

FAO (Based on the work of J V Anjaria, 1984). Traditional (indigenous) System of Veterinary Medicine for small farmers in India.Bangkok FAO, Regional Office for Asia and the pacific

FAO (based on the work of D.D. Joshi, 1984). Traditional (indigenous) system of Veterinary Medicine for Small farmers in Thailand, Bangkok : FAO, Regional office for Asia and the pacific.

Gamble, J.S. 1915-1936. *Flora of Presidency of Madras*. London.

Geetha, S. 1996. *Ethnobotanical studies of Kolli Hills, Salem District*. Ph.D. Thesis, Bharathiar University, Coimbatore.

Geetha, S., G.Lakshmi and Ranjitakani, P. 1996. Ethnobotanical Review : Wild Fibre Yielding Plants of Kolli hills, Tamil Nadu. *J.Econ. Tax. Bot.* (Add Ser) 12 : 250-252.

Jain, S.K. 1964. Wild plant foods of the tribals of Bastar (M.P.) Proceedings of National Institute of Science, India 30 (B) : 56-80

Jain, S.K. and De, J.N. 1964. Some less known plants foods among the tribals of Purulia district (West Bengal). *Science & Culture*. 30 : 285.

Jain, S.K. and De, J.N. 1966 Observation in Ethnobotany in Purulia, West Bengal. *Bull Bot. Surv India* 8 (384) : 237 - 251

Jain, S K 1999. *Dictionary of Ethnoveterinary plants of India* Deep Publication, New Delhi.

Kirtikar, K.R. and Basu, B D. 1935. *Indian Medicinal plants*. Calcutta

Krishnamurthy, S 1954. *Horticultural and Economic plants of the Nilgiris*. Coimbatore

Lakshman, K K. and Kalyani, K 1980 Kollimalaiyum athen Muligai Selvangalum. In : Tamilnadan (Ed.), *Salem Mavattum Sila Aaivukal.* Kaavya, Bangalore

Lakshmi, G 1995. *Ecological studies on the vegetation of Kolli hills, Salem District, Tamil Nadu* Ph.D Thesis, Bharathiar University, Coimbatore.

Lakshminarayanan, 1990. *Management plan for Salem Forest Division* (From 1.4 1990 to 31.3 2000), Part - I.

Mahalingam, T V 1978. *A topographical list of inscription in the Tamil Nadu and Kerala state* Vol. VI. Indian Council of Historical Search, New Delhi.

Matthew, K.M. 1976. A. Contribution to the flora of Pachaimalais, Tiruchirappalli district, Tamilnadu *J Bombay Nat. Hist Soc.* 72 . 327-356.

Mittra, V 1997. Wild plants in Indian folk life - A historical perspective. In : S.K Jain, (Ed) *Contribution to Indian Ethnobotany.* Scientific Publishersr, Jodhpur, India pp.35-53

Parimurugan, 2001. *The Malaiyalis - An Ethnographic Profile* Yyoung Minds Publishers, Madras

Powers, S. 1875 Aboriginal Botany. Caliprain Academy of Sciences Proceedings 5 373-379

Rajannan, B 1992 *Salem Cyclopeadia (A Cultural and Historical Dictionary of Salem District, Tamilnadu).* Institute of Kongu studies. Salem, Tamilnadu

Rajendran, A 1980. *Kalanginathar coorum Kollimalai ragasiam* In Tamilnadan, (Ed.) *Salem Mavattam sila Aaivukal* Kaavya, Bangalore pp.25-29

Ramaswami, A 1967. *Madras district Gazetteer. Salem* Government of Madras.

Rangnekar, D V 1998 Random thoughts on Ethnoveterinary practices and their validation in relation to Livestock Development in India In S K Dwivedi (Ed) *Technique for scientific validation and evaluation of ethnoveterinary practices* IVRI, Izatnagar, pp 24-27

Ranjita Kani, P 1998 Floristic diversity of Kolli Hills, Tamilnadu The Eastern Ghats National Seminar on Conservation of Eastern Ghats, 24-26, March, 1998 (Abstract) EPTRI-ENVIS NEWS LETTER 2(2) 14

Schultes, R E and Siri Von Reis, 1995 *Ethnobotany - Evolution of a Discipline* Chapman & Hall London

Shott, J.1889. An account of the Mallaiallis or Hill-men inhabiting to Shwaroys. In : J.Schortt. (Ed.) *The Hill ranges of Southern India.* Higginbothams, Madras.

Singh, H.B. and Arora, R.K. 1978. *Wild edible plants of India.* Indian Council for Agricultural Research, New Delhi.

Sirohi, S.P.S. 2000. Food for all - problems and solutions *Employment News.* Vol. XXIV (42) : 1-2.

Thurston, E.. 1901. *Caste and Tribes of Southern India.* Vol. IV.

Vaidyanathan, K.S. 1983. *The ancient geography of Kongu Country* . Praba Printing House, Bangalore.

Vartak, V.D. 1959. Some edible wild plants from the hilly region of the Poona district.

Watt, G. 1889 - 99. *A dictionary of the Economic products of India.* Vols. 1-6. London.

William King, 1889. The Kollimallays. In : J. Shortt. (Ed.) *The Hill ranges of Southern India.* Higginbothams, Madras.

Design : Akaram.